LB
N50
100921

பரமபதி துணை.

அகஸ்திய முனிவரருளிய

மணக்கோலம் 200, கனகமணி 100,
வயித்தியக்கோவை 125,
வயித்தியத்திரட்டு 81, கிரிகை 64.

# ஐந்து சாஸ்திரங்கள்

சதுரகிரிச் சார்பு மகாராஜபுரம் தரும பரிபாலன மடம்,
மகா-ராஜ-ராஜ-ஸ்ரீ ராமுண்டிசாமியாரவர்கள்
ஓலையேட்டுப் பிரதியின்படி



மதுரை புதுமண்டபம் புத்தகசாலை,
**இ. ராம. குருசாமிக்கோனார் சன்**
ஜி. இராமசாமிக்கோன்,
அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசி வீதி, குருசாமிக்கோனார் தெரு
ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

காபி ரைட் )
காப்பி 530. )

1950 விலை ரூ. 1—4—0
( இரண்டாம் பதிப்பு

100121

உ

கடவுள் துணை.

## ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத்ததிபர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்கும் இன்னு மற்றுமுள்ளவர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:—

இந்த மணக்கோலம் 200, கனகமணி 100, வயித்தியக் கோவை 125, வயித்தியத் திரட்டு 81, கிரிகை 64, ஆகிய ஐந்து சாஸ்திரங்கள் "ஓலை யேட்டுச் சுவடியிலிருந்ததை போதுமான திரவியஞ் செலவுசெய்து அச்சிட்டு என்னால் (கெவர்ண்மெண்ட் சட்டப்படி) ரிஜிஸ்தர் செய்திருப்பதால் இச்சாஸ்திரங்களைப் பிறர் எவ்விதத்திலும் அச்சிடக்கூடாதென்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்."

இங்ஙனம்,

இ. ராம. குருசாமிக்கோனார் ஷன்,
ஜி. இராமசாமிக் கோன்,
புத்தக சாலை புதுமண்டபம், மதுரை.

உ

பராபரி துணை.

அகஸ்தியர்,

புலஸ்தியருக்குபதேசித்த

# மணக்கோலம் 200

காப்பு.

மேருவிலுதித்தபூரணமாகும் வெளிப்படுஞ்சோதிநாயக்
கருவினிற்றங்கினான்முகனென்னுங் கணபதியுச்சியினிடத்தே
யுருவினிலொன்றிமரபிடைபூரண முதிக்கின்றசோதிமாமணியே
திருவினிலுதித்தஞானமெய்வழியே தெளிந்தவரமப்பெறுங்காப்பே.

விதித்ததோர் வட்டம் விளங்குந் திருவடி
பதித்ததோர் பிரமன் பரிதி யிடமாகி
உதித்ததோ ரவ்விடம் ஓங்காரத் துள்ளே
சதித்ததோர் பூரணந் தானது வாமே. (2)

பூரண மென்றே போதித்தி ரையா
காரண மான கருவேத சொல்லும்
வாரண மான மலரடி பாதம்
தாரண மாகத் தங்கிடு வீரே. (3)

தங்கிட்டோ மப்பா தான் மயங் காதே
உந்தித்த பூரணம் ஓம்வட்டத் துள்ளே
வந்திட் டதுகலை வந்தது பூரணம்
பந்திட்ட மாகப் பார்த்துநீ கட்டே. (4)

பார்த்துக்கட் டென்று பகர்ந்திடி லையர்
கார்த்துகா ணெப்படிக் கருக்கொண்டு செய்குவேன்
போத்தடி யார்க்கும் பூரணம் நீரலால்
வேத்தினிக் காணேன் விமலனே சரணம். (5)

விமலனே சரணம் மேல்நோக்கிப் பாராய்
கமலமே போலக் கண்ணிடை தோன்றும்
அமலனை மனத்தே றதுகண்டு புலத்தியா
உமலை வூசி உருப்படும் வாரே. (6)

உருப்படு மென்றே உரைத்தீர் குருவே
கருப்படும் வாசிக் கருவை யறிவேன்
திருப்படு மடிமை செலுத்தடி யேனை
அருட்படுந் தொண்டனை யடிமைகொள் வீரே. (7)

வாக்குப் புரியுமென் மைந்தா வுரைப்பதென்
தாக்குமீ அண்டந் தானே வெளிப்படும்
நோக்கும் பூரணம் உனையது நோக்கும்
ஆக்குமே வாசி அப்போ வெளிப்படும். (8)

வெளிப்படு மென்றீர் வெளியேதென் குருவே
சுளிப்படும் வாரியிற் சுழலுவ தெங்கே
களிப்படும் வாசி காணும்வே றெங்கே
தெளிப்படும் வாசியைத் திறந்துரைப் பீரே. (9)

திறந்துரையு மென்று செப்புஞ் சிறுபிள்ளாய்
மறந்துவிட் டாயோ மவுன நிலையைத்தான்
இறந்திட்டார் வாசி யேத்திடு முன்னுள்
சிறந்திடும் வாசி சிவனுரு வாமே. (10)

சிவனுரு வெங்கே தெளிவினிற் காண்பேன்
கவனமு மேருவைக் கண்டு பிடிப்பேனோ
தவனமெ டுத்தாப்போல் தானினைப் பேனோ
புவன சிரங்காட்டிப் போதிப்பீர் குருவே. (11)

போதிப்பீ ரென்றாயே புலத்தியா கண்மணியே
சாதிப்பா யென்றல்லோ சார்ந்த வுரையது
வேதிப்பாய் நீயென்று வெரும்பாழாய்ச் சொன்னாலும்
வாதிக் கரியாட்டால் மனம்வேறு தானாச்சே. (12)

மனம்வேறு என்றிடுசொல் மகத்தான வென்குருவே
தனமேது வுங்களுக்குத் தாங்கில்லாக் காரியமேன்
எனமேது நானறியேன் என்னை யடியார்க்கு
வனமேது அகண்டத்தில் வான்பொருளைச் செப்புமே. (13)

வான்பொருளைச் செப்புமென்று மைந்தா தெளிந்தாயோ
தான்பொருளைக் கண்டதிற் றானே யறியாயோ
மான்பொருளா யாடுவது வகார மறியாயோ
தேன்போலே ருசிக்குமது தித்திப் பறியாயோ. (14)



தித்திப்பு வேதமாய்த் தெளிவாகச் செப்பிடுவீர்
மத்திப்பு வேது வாசமாம் ருசியேது
தித்திப்பு வேது திருநடன மங்கேது
உத்திப்பு வென்று உரைத்தீரே ஐயாவே (15)

உரைத்தீரே யென்று உண்மையாய் நீகேளு
வரைந்தார் பெரியோர்கள் வாயுவினிற் பூரணத்தை
நிரைத்தார் புலத்தியா நீகாண மாட்டாயோ
கரைத்தாரைத் தாக்கிக் கண்டிடு வாசியே. (16)

கண்டிடு வாயென்றீர் கருத்திலே வாசியை
உண்டிடுஞ் சமிக்க உறவேது சொல்லும்
அண்டிடவே சோதி யகண்டத்திற் புக்கிமனம்
சென்றிட வாக்குரையுந் தெளிந்ததோ ரென்குருவே. (17)

தெளிவுத்த போதஞ் சேர்ந்த துருவப்பா
ஒளிவுத்து நோக்கிப் பாரென்று சொன்னாலும்
களிவுத்த ரவிபோலக் கசடற்றச் சிறுபிள்ளாய்
ஒளிவுத்து அண்ணாக்கை யுற்றுநீ பாரே. (18)

அண்ணாக்குக் குள்ளே யடங்கும் பொருளேது
கண்ணாக்கு நோக்கக் கண்டிடு மேவாசி
புண்ணாக் கிடுமுறவும் புதுமைதனை நீயுரைத்து
உண்ணாக்குக் குள்ளே உற்றபொருள் சொல்லுமையா. (19)

பொருளுரைக்க வேணுமென்றாய் புலத்தியா தற்கமிட்டு
பொருளுரைத்தால் வாசியைப் பூட்டுவையோ என்மகனே
பொருளுரைத்தா லுருளோடும் பொருந்துவையோ யானறியேன்
பொருளுரைத்தா லுன்மனது போக்கு மறியோமே (20)

பொருளுரைக்க வேணுமையா புத்தியறியேனே
அருளுரைத்தா லீசன் அடிபணிவேன் தெண்டனிட்டு
இருளுரைத்த மேனியது யேக வெளியானால்
குருபுத்தி யில்லாதான் குலச்செயங்க ளாவானே. (21)

குருபுத்தி நடந்தவற்கு குலச்செயங்க ளாவானேன்
திருபுத்தி யுண்டாகித் தெளிவுமிக வுண்டாகும்
வருபுத்தி யோகமும் வான்பொருளுங் கிட்டியே
ஒருபுத்தி யுண்டாகி உலகுதனில் வாழ்வரே. (22)

வாழ்வாரே யென்று வாழ்த்த விடைகொடுத்தீர்
வாழ்வாரே யென்ற மனமேது சொல்லுமையா
வாழ்வாரே யென்ற மனமகிழ்ச்சி யுங்காட்டும்
வாழ்வாரே யப்பொருளை மந்திரமா யுரைப்பீரே. (23)

(வேறு.)

மந்திர முறைக்கச் சொன்ன மைந்தனை நோக்கி யையா
தந்திர மாக நீயுந் தனதுள்ளே யடங்கு வையோ
இந்திர மனத்தை நீயு மிருளற வறியு மென்ற
அந்திர மனத்தை யானும் அதுகண்டே யொளித்து விட்டோம்

விட்டவர் பாதந் தன்னை மேவியே பிடித்துக் கொண்டு
கட்டுடன் சரணடைந்தேன் கலந்துரை செய்யு மையா
திட்டென முனிவர் பாதஞ் சிந்தையிற் பிரியா வண்ணம்
சிட்டரைக் காக்க வேண்டி தெளிவதாய்ச் செப்பு மையா. (25)

தெளிவதாய்ச் செப்பு மென்று சிந்தையிற் கூர்ந்த பிள்ளாய்
ஒளிவதாஞ் சுழியைப் பற்றி யுச்சியில் நோக்கிப் பாரு
களிகுவ தனக்கு மேது கருக்கிடை தோணுதென்று
வளியதாய்ச் சொல்லி யின்னம் மாறுட்ட மான தேதோ. (26)

மாறுட்ட மாகி அய்யா மனமொரு நிலையுங் காணேன்
தேறுட்ட மாக யானும் தெளிவது யெப்போ சொல்லும்
கூறுட்ட மாகி யென்னைக் கொத்தடுமை யாக்கி வைத்தீர்
வேறுட்ட மாய்த்தெளிந்து விடுத்தடு மைக்கொள் வீரே. (27)

(கொச்சகம்.)

வித்தடுமை யென்றுரைத்து விடுஞ்சோதி தன்னையுமே
முத்தடுமை யென்றே மோகித் தறியாயோ
சித்தடுமை யதுவாச்சு செய்தவத்தா லதுதானே
நத்திவிடும் பூரணந்தா னன்றிவே றிலைபாரே. (28)

இனிவேறு மில்லையென்றே யெடுத்துரைத்தீ ரையாவே
தனிமைப் பொருளாமோ தானொருவர் வேண்டாமோ
அனிமைப் பொருளாக யழைத்தூத வேண்டாமோ
கனிமைமதி பூரணந்தான் கண்டே பழுக்குமையா. (29)

கண்டு பழுக்குமென்ற கால்க்குருவே சொல்லலையோ
விண்டுமன முரைத்தாலும் மேவலையோ யென்மகனே
செண்டுமன தூணிச் செனித்தல்லோ பழுக்குமையா
மூண்டுதனைச் செய்யாமல் முத்திரையை நோக்குமென்றே. (30



முத்திரையை நோக்குமென்று மொழிந்தீரே யென்குருவே
சித்திரத்தி லட்சரத்தைத் தெளிவுபெற வேநாட்டம்
வச்சிரத்தி லாணியது வாட்டமன மில்லாமல்
அச்சரத்தை மேலழுத்து ஆட்டும்வகை யேதுரையும். (31)

ஆட்டும்வகை யேதுரைப்போ மழுத்திநீ நோக்குவையே
நாட்டுவரை சொன்னாலும் நாடுவையோ யென்மகனே
பூட்டும் வகையுரைப்போம் பூணுவையோ கண்மணியே
ஊட்டும்வகையோரெழுத்து ஊவென் றறிந்துகொள்ளே. (32)

(சமாதி.)

ஊவென் றெழுத்தேது உகந்தருளு மையாவே
ஊவென் றெழுத்தேது உண்மையது சொல்லுமென்றே
ஊவென் றெழுத்தேது உரைசொல்லீ ரென்குருவே
ஊவென் றெழுத்தினுட உற்பனத்தைச் சொல்லிடுமே. (33)

உற்பனமே சொல்லுவோம் ஊவென் றுரைப்பதுவும்
கற்பனம் வானம தானே யதுபொருள்
அற்பமென் றெண்ண அழிந்துவிடுந்தேகம்
கற்பல யோகம் நாட்டுஞ் சமாதியே. (34)

நாட்டுஞ் சமாதிக்கு நல்லகருச் சொல்லு மையா
ஆட்டுஞ் சமாதிக்கு ஆ. ஊ. வும்யென்னையா
ஓட்டுஞ் சமாதிக்கு ஊவென்றீ ரையாவே
பூட்டுஞ் சமாதிக்குப் பொருளே துரைப்பாயே. (35)

(வேறு)

பொருள்ஆ வென்றது பொருந்து மடிதான்
அருள்ஊ வென்றது அமர்ந்திடு முப்பொருள்
குருவடி மூலம் குறிப்பை யறிந்தால்
திருவடி பாதம் சேர்தலு மாமே. (36)

திருவடி பாதஞ் சேர்க்கு மெழுத்தைக்
குருவடி பாதங் குதப்பத்துச் சொல்லும்
மருளடி யாத மணிக்கையுஞ் சொல்லும்
பொருளடி பாதம் போற்றும் நிமையாலே. (37)

பூட்டுநீ மைந்தா பொருந்துமூப் பூவை
ஆட்டுநீ மைந்தா அதற்குக் கருவுண்டு
நீட்டுநீ வாசி நிலைத்தூது ஊது
காட்டுமூப் பூவுங் களங்கத்துப் போகுமே. (38)

களங்கத்துப் போகக் காட்டுமூ லத்தைக்
களங்கத்துப் போகக் காலொன்று காட்டினீர்
களங்கத்துப் போகக் கருவொன்று சொல்லும்
களங்கத்துப் போகக் காலாறு பீடே. (39)

காலாறு பீடென்று காட்டினீர் குருவே
வாலாறு கொண்டால் மருத்துவந் தங்குமோ
பாலாறு போலப் பரிசிக்க வேணுமே
ஓலாறு விதமது உடல்கொள்வ தரியே. (40)

கொள்வதரி யென்றே கூறினேன் சிறுபிளாய்
கொள்வதோ ரெழுத்துங் கூட்டுமிது வொன்றாய்
கொள்வதொன் றொன்றாய்க் கூட்ட மறிந்திடும்
கொள்வதோ வென்றூற் குருவது மாமே. (41)

குருவது வென்றீர் கூட்டாக் கருமோ
திருவது வென்று தெளிய வுரைத்தீர்
கருவது தன்னைக் கண்டு பிடித்தீர்
உருவது தனையே உண்மைசொன் னீரே. (42)

உண்மையாச் சொன்னீ ருருப்பட வாசியைத்
தண்மையாய்ச் சொன்னீர் தயாபரா சரணம்
கண்மையின் நீராற் கலந்தே தாரையில்
வெண்மைத் திருப்பாதம் விட்டேன் சரணமே. (43)

சரணமென்ற புலத்தியனே உன்னைப்போலே
தர்க்கமிட்ட பேருமில்லை வையகத்தில்
சரணமென்ற பிள்ளையைத்தா னெடுத்துமைந்தா
சந்தோஷ உபதேசஞ் சொல்லுவோர்க்குச்
சரணமென்ற உந்தியிலே சிங்கென்றாணி
சாந்தவுடன் மேல்நோக்கி வங்கென்றேத்தி
சரணமென்ற வெண்மணியே ஒளிதான்போதம்
சந்தோச மாயிருந்து வழிகாண்பாயே. (44)

(வேறு,)

காரண மான கருக்கடல் யோகந்
தாரண யோகந் தந்தெனை யாண்டீர்
வாரண யோக மலரடி பாதம்
பூரண தீட்சை புகழ்ந்தருள் வீரே. (45)



பூரண தீட்சை போதிக்கும் போது
காரண மான்து கண்டவ ராரு
வாரண மானது மலர்த்தாள் பூவதாம்
மாரண மானது மதியுட வித்தே. (46)

மதியுட வித்தென்று மாட்டுறேன் குருவே
பதியுட வித்தே பராபர மெனக்கருள்
சதிசெய்யாப் பிள்ளாய் தானது பூரணம்
விதிகொண்டு பாரு மேவிடுந் தானே. (47)

(மூப்பூ,)

மேவிடுந் தானென்றீர் மெய்பெறுவ தெப்படி
தாவிடும் பூரணந் தானேது சொல்லும்
கூவிடும் பூரணங் குறித்ததோ ரிரண்டுங்
காவிடு மேனி கன்னிதலைப் பேரே. (48)

கன்னிதலை யென்றுரைத்த காரணமே தென்குருவே
வன்னிக்கு நிறமென்ன மகத்துவஞ் சொல்லும்
அன்னிக் கிறவிபோல் ஆணபிள்ளையாகும்
உன்னிக்கும் பூரண மோர் குறையா காதே. (49)

குறையாகா தென்ற குருவினடி போற்றி
நிறையென்ற பூரணம் நிலைக்கவகை சொல்லும்
கறையென்ற பூரணங் கருத்தனைப் பூசி
மறையென்ற சாப மகற்றநீ பூசியே. (50)

பூசிக்கும் வகையேது போதிப்பீ ரென்குருவே
நேசிக்கும் வகையென்ன நிராமயமே சொல்லுமையா
ஆசிக்க நீராடி யதுதிரு மஞ்சனத்தால்
வாசிக் களப மலர்கடஞ் சாத்தே. (51)

(செந்தூரப்.)

சாத்தென்று சொன்னீர் சச்சிதா னந்தகுரு
போத்தென் றடியார்க்குப் புத்தி யுரைப்பீரே
யேத்தென்ற பூசை யினிவாலை திரிபுரை
கோத்தென்ற புவனையுஞ் சுறித்தவள் சாமளை (52)

சாமளை பூசி தனிவாலை பூசி
கோமளை திரிபுரை குருவுடன் பூசி
யேமளை புவனை யெடுத்தவள் பூசி
வாமளை சத்தி வஸ்துவைப் பூசியே. (53)

பூசிக்க அர்ச்சனை புட்பந் திறந்தபின்
ஆசிக்கப் பூரணம் அறிக்கை யிடுமையா
வேசிக்கு மொருவர்க்கு வெளியதைச் சொன்னால்
மாசிக் கிடிவிழும் மாழ்வது தப்பாதே. (54)

தப்பாதே வேறுமணஞ் சற்றும் நினையாதே
அப்பாவென் பேரி லாணையிடு தப்பாதே
செப்பாதே பூரணஞ் சேர்ந்த பிருநூறு
ஒப்பாரும் நீயெவர்க்கும் உறுதிதனைக் கேளே. (55)

கேளென்று சொன்னீரே கிருபையுள்ள மூர்த்தியரே
ஆளடிமை கொள்வதற்கு ஆணை யிட லாமோ
வாள்மதியே யென்மகனே வருமாறு சொன்னக்கால்
தாள்மலர்க்கல் லாதே சந்தோஷம் நீவாழி. (56)

சந்தோஷ மாயெடுத்துச் சாரத்தை வாங்கி
சந்தோஷ வாசல் தன்னையே கண்டு
சந்தோஷ சூதசத்தி பலமஞ் சிட்டுச்
சந்தோஷ மாய்த்தனி யெழுசிலை செய்யே. (57)

எழுசிலை செய்து ஈசான மாய்க்குழியில்
ஒழுகி விடாமல் ஓர்முழக் குழியில்
எழுகு படாம லிட்டே யெருவைத்தான்
அழுகு படாம லக்கினிப் புடமிடே. (58)

புடத்தினிற் செய்யப் பொருந்தும்நீர் வாணி
தடத்தினில் வடுகனைத் தான்வரப் பூசை
குடத்தினில் மதுவைக் குவித்தே வெளியெடு
எடுத்ததற் பூசையு மேத்திடு தீபமே. (59)

(பூரண செந்தூரம்)

எடுத்ததற் செந்தூர மேத்திய ரெத்தம்போல்
தொடுத்ததற் செந்தூரஞ் சொல்லவும் போமோ
அடுத்தநில மைந்தா அதுநிற மாயுமால்
விடுத்ததற் செந்தூரம் மேவிடப் பாரே. (60)

பாரே யிதன்பேர் பகர்ந்தது பூரணம்
நேரே யிருநூறும் நேர்படச் சொல்வேன்
தாரே முன்வாசி தாரணை யோகம்
சேரென்ற வாசியுஞ் சித்திக்கும் பூரணம். (61)



பூரண மண்டம் போதித்தீ ரென்குருவே
காரண பிண்டத்தின் கரையேது சொல்லும்
தாரணி மீது தவம்பெற்ற மைந்தா
வாரண பிண்டமும் வானமுங் கூட்டவே. (62)

கூட்டவே சொன்னீர் கோடியதோர் பிண்டம்
ஆட்டவே சொல்லு மதினுட வழியைக்
காட்டிய மைந்தா கைமுறை வழியே
நீட்டிய தங்கமும் நேர்படத் தள்ளே. (63)

தள்ளென் றுரைத்தீர் தன்மைக் குருவே
கொள்ளென் றதுதனைக் குறிப்பது சொல்லும்
விள்ளென்று சொல்வோம் மெய்ப்பொருளாகத்
துள்ளென்ற பிண்டத்தைத் துலக்கப் படுத்திடே. (64)

படுத்திடு மென்று பகர்ந்தவென் குருவே
அடுத்திடுஞ் சமாதிக் கடவினிக் கேளு
தொடுத்திடு மைந்தா தோன்றமதி பாத்ர
மெடுத்ததீ யகத்துள் ளிட்டினிக் கேளே. (65)

இனியிட வென்றெடுத் துரைத்தீ ரென்குருவே
வனிதையாப் பொருளை வாக்கருள் புரிவீர்
தனிமைதான் மைந்தா தானது கேளு
அனிமையாய் நாத மதுசரி தாங்கே. (66)

தாக்கக் கெவுரி தானுற வாக
நோக்கவே சரியாய் நறவே விடுசே
தீக்கென மதிபாத் திரத்திலே யிட்டு
ஆக்கென மூடி யதுவிடு சிலையே. (67)

சிலைதா னெழு திறப்படச் செய்திடு
ஆலயத் துள்ளிட் டறசாண் குழியிடு
கோலையிட் டரை யட்டின் குமட்டதில் பற்பம்
வேலையிட் டதிலிடு மேவிடு பற்பமே (68)

பற்பத்தை மூடிப் பதியவ ருக்கு
நிற்பத்தை நோக்கி நினைத்திடும் வாசல்
சற்பத்தைக் கூட்டச் சாபங்கள் போக
முற்பத்தை நோக்கி முக்கடி யில்லே. (69)

மூக்கடி யேதா முனையெது சொல்லும்
நாக்கடி தானே நானறி யேனே
நோக்கடா மைந்தா நன்புருவ மையம்
தாக்கடா மூக்கினிற் றனிவுமீ தொன்றே. (70)

ஒன்றாக நோக்கில் உற்றசா பம்போம்
நன்றாய்ச் சமாதி நாட்டொரு மண்டலம்
மன்றாடு புவனை வாலையைப் பூசி
சென்றாட வாசி சேர்ந்த மயனமே. (71)

மயனம் பிறக்கும் மண்டலத் துள்ளே
சயன மதனைத் தானது வாங்கிக்
கவனம தாகக் காத்தடி படாமல்
வயனம தாக வைத்துக்கொள் வாயே. (72)

கொள்ளவே ஆண்டு குகைதனி லப்பா
கொள்ள விபூதி குளித்துச் சமாதி
கொள்ள அண்டத்திற் செந்தூரங் கூட்டிக்
கொள்ளப் பணவிடை கூட்டிரெண் டாக்கே. (73)

ரெண்டே பணந்தூக்கி நோசண்டு கொள்ள
அண்டேநின் றேக மடிமுடி கூடியதால்
செண்டே பழுக்குஞ் சேர்வாசி கூட்டு
கண்டே மகிழ்ந்து காட்சியும் பாரே. (74)

பாரே கெவுனம் பறக்குமே வாசி
சேரோ சாரணை நிலைத்தவர்க் கேசித்தி
ஊரோ யிருந்து ஊழை யிடுவதேன்
தேரேறிக் கொண்டு திரியலாங் கெவுனமே. (75)

கெவுனமே யோடித் திட்டெல்லாம் பார்த்துப்
புவனமே தாண்டிப் புக்கலாம் மைந்தா
தவனமே சித்தர்கள் தான்பணி செய்வார்
யெவனமே யுகமா யிருக்கலாம் பாரே. (76)

யிருக்கலா மென்றீர் யென்குரு ஆசானே
கருக்கோழி தன்பெருமைக் காட்சியைச் சொல்லுமையா
பெருக்கலா மைந்தா பிண்டத்தி னுண்மையைக்
கருக்கலா மண்டத்தின் காட்சியது வாலே. (77)



காட்சி யதனாற் காரணங் கண்டோர்
பாட்சிய குளிகை பறக்குங் கெவுனமும்
ஆட்சிய மணிபோ லகண்டத்தி லோடவும்
வாட்சிக முயிரை வாசியைக் கட்டவே (78)

கட்டவே குளிகை காரண மைந்தா
முட்டவே சொல்லு மொழிமறந் தாயோ
ஓட்டவே நாத முருப்படத் தாக்கிக்
கொட்டவே தேனது கொடிய விஷமே. (79)

கொடியதோர் விஷமது கூறுவீ ரையா
கடிவிஷ மேது கருவேது சொல்லும்
முடியவே யிப்படி மொழிந்தாய் சிறுபிள்ளாய்
வடிவான நாதம் வார்த்திடு மினிமையே. (80)

வார்த்திடு மென்றீர் வையக முறைசொலுங்
கார்த்திடு மடியார் கைமுறை யாகப்
பார்த்திடு மினிமையும் நாதமுஞ் சரியிடு
கோர்த்திடு முலைப்பால் குமட்டி யரையே. (81)

குமட்டி யரைத்தேன் குருவென மொழிந்தருள்
அமட்டியே சாம மரைப்பையோ சொல்லு
சிமிட்டிய மைந்தா திறப்பட்ட பிள்ளாய்
சமட்டியே நாலு சாமங் களரையே. (82)

சாமங்கள் நாலுக்குஞ் சாதித் தரைத்தேன்
சேமங்கள் செய்ய நிலைபடச் சொல்லும்
தாமங்கள் ஓதித் தான்மூன் றிடையாய்
வாமங்கல் போல வளம்பெற வுருட்டே. (83)

திறப்படக் குளிகை திறஞ்சொல்லு மையா
நிறப்பட வுவரிடு நேர்பட வுப்பினால்
கறப்பட முலைப்பால் கருவதரைத் தப்பா
உறப்படுங் கல்லுப்போ லுணர்த்தி யெடுத்திடே. (84)

எடுத்திடு கவச மியல்பெற வாங்கி
அடுத்திடு மாமணி யதின்மேற் பொதிந்து
கொடுத்திடு மூமத்தங் காய்க்குமேற் சீலை
படுத்திடும் புடமது பத்தாநீ தாக்கே. (85)

தாக்கே கௌதாரி தாக்கும் புடம்பத்து
நோக்கே யிதுவாங்கி நுகர்ந்திடப் போடு
ஆக்கே குளிகை யதுவொற் றிருக்குமாம்
வாக்கே சாரணை வகுப்பது கேளே. (86)

கேளேநீ மைந்தா கெடிபடும் பூவினால்
நாளென மூன்று நலம்பட வைத்திடு
தேளது போலத் திறமது கொட்டும்
ஆளெனச் சாரணை யடவினிப் பாரே. (87)

பாரென்ற நாய்நரி பகர்ந்திடும் ரெத்தம்
மாரென்ற குக்குடம் வனத்தி லுடும்பு
நேரென்ற காடை நிலைத்த கௌதாரி
காரென்ற மானுடன் காக்கையின் ரெத்தமே. (88)

(குளிகை.)

ரெத்தமே யின்னம் ரேசிக்கக் கேளு
உத்தம ருடனு டுஞ்செம் போத்து
பத்த கெருடன் பாம்பி னிரத்தம்
சித்தம் விலகச் சிறந்திடு நாதமே. (89)

நாதமே சேர நற்பதி மூன்று
போதமொவ் வொன்றிற் பூட்டிடு மூன்றுநாள்
வேதமே பிறக்கும் விம்மியே கட்டுண்ணும்
ஓதவும் வாங்கி யுருப்படக் காணே. (90)

காணதை மைந்தா கடுங்காரம் மெத்தப்
பூணத்தக் குளிகை பூட்டவகை கேளு
வீணத்தச் சித்தர்கள் வேவிட்ட குளிகை
வாணம் பறக்க வகுத்தாற் குளிகையே. (91)

குளிகைக்குக் காரம் கூட்டவகை கேளு
குளிகைக்குப் புழுகு கொடுப்பது மேலும்
குளிகைக்குச் சவ்வாது கூட்டதின் மேலும்
குளிகைக்கே ரோசனை கூட்டதின் மேலே (92)

மேலெனு மூன்று மெலித்துக் கவசித்து
காலனு மறியான் கன்னிமா ரிதனிலே
கோலென வைத்துக் குழித்திடு மண்டலம்
பாலெனப் போலாய்ப் பகர்ந்திடுங் குளிகையே. (93)



குளிகையை வைக்குங் குழியினைக் கேளு
குளிகைப்பெண் காத்தக் கூடது மாகா
குளிகைப் பதனம் குழிதனில் வசமாங்
குளிகையை வைத்துக் குழித்துப்பார் பசுமையே. (94)

குழித்துப்பார் பசுமை கொடியதோர் வேகமாம்
விழுத்திப்பார் குளிகை கிலையறி கூடா
பிறத்தினில் விட்டாற் பேதிக்குங் காணுமல்
மறித்துக்காட் டாதே மைந்தா வலுப்பார். (95)

(வேறு.)

வலுப்பாரு மென்றீரே மயக்கமுற்று நின்றேனே
கொலுப்பார்த்து யானடியேன் கூட்டுவது மெக்காலம்
அலுப்பாற்றி யேழைதனை யாளுமை கொண்டீரே
சலுப்பாற்றிக் குளிகைதனைச் சார்ந்தவர் சொல்லுமையா (96)

சாந்தம்வர வேணுமென்று சலித்தாயே கண்மணியே
சாந்தமாய் வருவதற்குச் சாற்றும்வகை கேள்மகனே
சாந்தம்வர மொழிந்தாலுஞ் சலித்துமுகம் வாடுவையோ
சாந்தம்வர யானுரைக்கச் சாற்றும்வகை கேளுமையா. (97)

(லவணச் செந்தூரம்)

கேளுமப்பா குளிகைக்குக் கெடிதமரைப் போட்டுவிடு
மாளுமப்பா குளிகையது மனவேகந் தானடங்கி
மாளுமப்பா தமராலே மாண்டிடுமே யரைவாசி
வாளுமப்பா யிக்குளிகை வாயிவிட்டுப் பறப்பாயே (98)

வாயிவிட்டுப் பறப்பதற்கு வகைசொல்லு மென்குருவே
வாயிவிட்டு ஓடும் வகையேது தமரினுள்ளே
வாயிவிட்டுக் கெவுனங்கள் வரைந்ததுசொற் கேள்மகனே
வாயிவிடத் தங்கி மாட்டுவாய் சமுத்திடையே. (99)

மாட்டினுற் றம்பிக்கும் வாயினுங் கட்டும்
மூட்டின தீக்கனலுருப்படச் சொரிக்காம்
நீட்டினுற் செந்தூரம் நேர்படப் பண்ணலாம்
கூட்டிடத் தாம்பூரம் கொடுத்திட வேமமே. (100)

வேமமென் றுன்னி யெடுத்துரைத்தீ ரையாவே
காமமெனு மிக்குளிகை கைமுறையாய்ச் செந்தூரம்
வாமமெனுஞ் செந்தூரம் வைக்குமுறை கேள்மகனே
காமக்கரி யுப்பதனுங் காட்டெரிசெந் தூரமிதே. (101)

சமைத்தெரிப்பா வென் றுசொன்னீர் சாத்துவதுயெப்படியோ
அமைத்தெரிக்க உப்புமணி யதிற்படவே தெரிக்குமையா
கமைத்தெரிக்க உப்பதுவைக் கட்டவகை கேள்மகனே
சிமைத்தெரித்தே உவரியிலே தெளிவாகப் புடம்போடே. (102)

புடம்போட வுப்பதுவைப் போடுவது படியரைதான்
இடம்பெறவே படியிலிட்டுத் திறப்படக் குளிகைவைத்து
அடம்படவே மேலுமிட்டு அப்படியே கைமுறையாய்க்
கடம்படவே மூடியதை கசிசித்தேன் சீலையப்பா. (103)

சீலையப்பா யேழு திறப்படவே செய்து
கோலைவிட் டாட்டிக் குவிந்தஅடுப் பதிலே
ஆலையிடத் தெரியப்பா அதுகமலம் போலே
வாலையிடு பூசை வளர்சாமம் காலே (104)

சாமங்கள் காலுந் தனிப்பட வெரித்து
கேமங்கள் பூசை நியமமுஞ் செய்து
வாமங்கள் வைத்து வாலையைநீ பூசி
ஓமங்கள் செய்து உரவெடுப் பாயே (105)

உரவெடு செந்தூரம் உவகையென் சொல்வேன்
திரமிடு பார்க்கத் தெளித்தவ ராரு
காமிடு வதெனக் கண்டறு மங்கள்
திரமிடப் போகாத் தெளிந்தவர் ஞானியே (106)

( குருவைச் சீஷன் புகழ்தல் )

தெளிந்தவர் குன்றி தேனினிற் கொள்ள
அழிந்திடாக் காய மலவற்ற கோடி
கழிந்திடா வாசி கவனங்க ளாகும்
மொழிந்திடா ரவியில் முன்னூற்றுக் கொன்றே. (107)

முன்னூற்றுக் கொன்றில் முப்பது மாத்தாம்
தன்னூற்றுப் போலே தயாபரஞ் சோதியாம்
மென்னூற்று மல்ல யேகிடா போகம்
பன்னூற்றுப் போலே பார்மாத்து ஆறே (108)

மாத்தது நாறு வரிசையாய்ச் சொன்னீர்
பாத்திடச் செந்தூரம் பயனது சொன்னீர்
காத்திடச் வாசியைக் கட்டவுஞ் சொன்னீர்
கோத்திடக் கௌன குளிகைசொன் னீரே (109)



( வேறு. )

ஐயனே போற்றி போற்றி அருள்பெற்ற தேவே போற்றி
மெய்யனே போற்றி போற்றி மெய்ச்சடா ரணிந்தாய் போற்றி
கையனே போற்றி போற்றி காசினி முனிவா போற்றி
உய்யனே யென்னையாட் கொண்ட உந்தியி லுதிக்குந் தேவே

உந்தியி லுதிக்குந் தேவே ஒருபொரு ளுகந்தாய் போற்றி
சிந்தையில் நினைந்த போது திருநட மிட்டாய் போற்றி
வந்தித்தே னுந்தன் பாதம் வானமூர் திறந்தாய் போற்றி
அந்தித்தேன் குருவே அய்யா அடியினை போற்றி போற்றி. (111)

போற்றென்ற அடியே னுள்ளம் பூரண மதுவைக் காட்டி
சாற்றென்று யோக ஞானம் சாதனை மதுவுங் காட்டி
ஆற்றென்ற கபால தீட்சை யருள்பெற்ற சமாதி காட்டி
பேற்றென்ற வாசி காட்டி யென்னையாண்ட சரணம் போற்றி (112)

சரணத்தில் விழுந்தேன் கோவே சச்சிதா னந்த மூர்த்தி
சரணத்தில் முன்ன மின்னம் தானது கருக்க ளென்னக்
காரணத்தில் வழலை தானுங் கபாலத்தி லொளிந்து போக
ஆரணத்தி லுதித்த பாதம் அறுசுவை யொளித்துப் போடே. ()

(வழலை களற்று முறை.)

அறுசுவை களத்த வென்று அண்டத்தில் வழலை வாங்க
இருள்தனை நீக்கி யப்பால் யேத்திய தீபம் போலே
மருளெனப் பிடித்த உப்பு மாசற வற்றப் போகப்
பொருளது வெளியாய்க் காணும் புகன்றது கலமே மைந்தா. ()

புகழவே கருவ தொன்று பூட்டுறேன் மைந்தா கேளு
தழுவிய அண்டமீதிற் றுனது வழலை வாங்கக்
கொழுகிய கடுக்கா யப்பா கூடிது பலந்தான் பத்து
மழுவியே பிடித்துத் தூளாய் வடியது கட்டிக்கொள்ளே. (115)

கொள்ளவே நன்றாய்ப்பாரு குவலயர் தன்னி லப்பா
தெள்ளவே யதனில் வேரைச் சிறுகவே தரித்துக் கொண்டு
மெள்ளவே பிடித்து வைத்து விடுமதில் நீரைக் சேரு
துள்ளவே யமுரி தானுந் தோன்றிடப் பதக்கு வாரே. (116)

வாத்தெரி யடுப்பி லேத்தி வளம்பெற யெட்டி லொன்றாய்
நீத்தெரித் திறக்கிக் கொண்டு நிலைவுற வடிவு செய்து
பாத்தெரிந் திருந்த நீரிற் பருவமாய்த் தூளை யாட்டிக்
கோத்தரை கடுக்காய்த் தூளைக் குமட்டியே வில்லை செய்யே.

செய்யப்பா ரவியி லிட்டுத் திறப்பட வுலர்த்திக் கொண்டு
மெய்யப்பா கவசத் தூரில் மேவிய தமரைப் போட்டுக்
கையப்பா சில்லுப் போட்டுக் கைமுறை சீலை செய்து
வையப்பா பூப்பு டத்தில் வைத்ததிற் றயிலம் வாங்கே. (118)

தயிலத்தைப் பெருவிரற்கை தன்னிலே தோய்த்துக் கொண்டு
அயிலொத்த உண்ணாக் குள்ளே யதனுட வழியைச் சொல்லு
பயிலொத்துப் பலம தாகப் பாரஞ்சு தரமே சுத்தக்
கொயிலொத்த வளலை தானும் கோழையும் வடியுமென்றே. (119)

வடிந்ததோர் தயில மப்பா மண்டலஞ் செய்து கொள்ளு
இடிந்ததோர் கபங்க ளெல்லாம் ஏகியே கொல்லும் பாரு
தடிக்கதோர் மேலே நோக்கித் தானது வாங்கும் போது
படிந்ததோர் தொண்டைக் குள்ளாய்ப்பதியதில்வாங்கிப்போடே

(மூ ல சு த் தி.)

போடெனத் தொண்டைக் குள்ளே பூட்டிய கபங்கள் தீரும்
வீடெனு முத்தி மூல மிருந்திடு மலங்கள் போக்க
ஆடென விரலிற் றெட்டு ஆசனத் தேற்றி யேற்று
கூடென மலங்க ளெல்லாம் குபீரென உடைக்குமென்றே(121)

உடைக்குமே யிதுதான் மூன்று உத்பனஞ் சொல்லக் கேளு
படைக்குமே மண்ட லத்திற் பாரிது வின்று செய்தீர்
துடைக்குமே யுடம்பு வத்தித் துரும்பது போலே யாகும்
முடக்குமே காய மப்பா முடங்கிநீ விடுக வேண்டாம் (122)

முடங்கியே விடுகா விட்டால் மூதாளி வாழ லாகும்
இடங்கியே விட்டா யானால் இறப்பது திண்ண மப்பா
அடங்கிய மேர்வைப் பார்த்து அருள்பெற உப்பை வாங்கத்
துடங்கியே தயிலம் பார்த்துத் துவாலையைப் போடச் செய்மே

துவாலைதான் மூன்று நாளும் துயாறப் போட்ட பின்பு
வாலையாம் நாலா நாளில் வாங்கவே கருவைச் சொல்வேன்
சேலையாம் பசுவின் நெய்தான் சிறப்புடன் மேலே பூசி
ஆலையப் பயறு தானு மதுபச்சைப் பயறு தானே. (124)

தாமென வலைத்துப் பூசித் தக்கதோர் வெந்நீர் வார்த்து
ஓமெனக் களத்தி வாங்கி நூபட்சஞ் செய்தா யானால்
ஆமென உப்புத் தானும் அறுசுவை மாண்டு போகும்
நாமென வுடல மெல்லாம் தங்கத்தி னொளியே தோன்றும். ()



தொன்றுமே யிதுவே யப்பா துடங்கிமுன் செய்த பின்பு
தன்றுதான் யோக மப்பா தாரணை யேத்தி யேத்தி
நன்றுதான் தேக மப்பா ஞாயிறே வுதித்தாப் போலாம்
சென்றுதான் தீட்சை பாரு திடம்பெறச் சமாதி கானே. (126)

(முப்பூவகை.)

சமாதியுந் தீட்சை பெற்றாற் சகலமு மேவல் கேட்கும்
சமாதியுந் தீட்சை பெற்றாற் சகலரும் வணக்கஞ் செய்வர்
சமாதியுந் தீட்சை பெற்றாற் சண்டனில் யோகி யாவான்
சமாதியுந் தீட்சை பெற்றால் தருஞ்சிவ யோக மென்றே. (127)

சிவயோகந் தங்கிற் றானால் தேவனே யவனு மாகும்
தவயோக மாவ தென்ன தாரணை யறிவா னப்பா
அவயோக மெடுத்துக் கொண்டு ஆடுவான் களறிக் கூத்து
பவயோகி யாவ தென்ன பாவத்தைக் கெடுத்த கூடே. (128)

கூடென்றால் வாசி பாரான் கூவென்றால் வைப் பாரான்
ஆடென்றால் இடையைப் பாரான் அசடன்றான் ஞானம் பாரான்.
தீடென்றாற் பீஜம் பாரான் திடம்பெறச் சமாதி பாரான்
நாடென்றால் நோக்கம் பாரான் நாயவன் செனித்த வாறே. (129)

குறிப்பது அடியே னுள்ளங் குவிந்திட மனமு மையா
நெறிப்பது வழலை மார்க்கம் நேர்பட அருளுந் தேவே
அறிப்பது போல நீரும் அமைத்திட்ட கருணை யெல்லாம்
மறிப்பதாய்ச் சொல்லி விட்டீர் வாசியை நோக்கு மென்றே. ()

நோக்கிய பாதந் தன்னை நன்மையாய்ச் சிரசில் வைத்தேன்
தாக்கிய பொருளே ஞான சச்சிதா னந்தா கேளீர்
தேக்கிய உலகத் துள்ளோர் சித்தர்கள் முப்பூ வென்றார்
ஆக்கிய பூவைக் கொண்டு அருள்வாதஞ் சொல்லு மையா. (131)

(கொ ா ச் ச க ம்.)

அருள்வாதஞ் சொல்லுமென்று அடிபணிந்த யென்மகனே
தருவாக முப்பூவைத் தானுரைக்கக் கேளுமப்பா
இருள் வாதஞ் சொன்னக்கால் யெடுத்து முடிப்பாயோ
திருவாதஞ் சொல்லுகிறேன் தெளிவாயோ யென்மகனே. (132)

தெளியவகை சொல்லுமையா தேன்மொழிந்த வாயாலே
மொழிய வகையெடுத்து முப்பூவைச் சொல்லுமையா
வழியமனஞ் சொன்னாலும் கண்டுமனந் தேறலையே
வெளியமன மொன்றுமில்லை மேவி யுனைப்பாரே (133)

மேவுமென் று சொன்ன விடையருள்வீ ரென்குருவே
காவுமன மேதோ களியுப்புத் தானேதோ
பாவுமன மொன்ருகிப் பதருதே நீபாரு
தாவுமன முப்பூவுந் தான்முடிக்கப் பெத்தாயே. (134)

பெத்தாயே யென்றுரைத்தீர் பேதமுற்ற யென்குருவே
சித்தாயென் னுள்ளந் தெளிந்தோத வேணுமையா
முத்தாகச் சுக்கிலத்தை முப்பொருளை நீயறிந்தால்
வித்தாக உன்னுள்ளே மேவிடுங்காண் முப்பொருளே. (135)

முப்பொருளே யென்று முடித்தீரே யென்குருவே
செப்பொருளே பூவதுவாய்த் தெளிவுசொல்ல வேணுமையா
அப்பொருளே பூவப்பா அருள்பெத்த பொன்மகனே
உட்பொருளை நீநோக்கு உருப்படுங் கண்டாயே. (136)

உருப்படும் பொருளாகி யுனையல்லோ கண்டேனையா
திருப்படும் வாறேது சென்றுரைக்க வேணுமையா
கருப்படும் நீரொன்று காலடிதா னறியாயோ
வருப்படுத்தி யொன்றுக்கி வாதத்தொழில் பாரீரே. (137)

(கங்கை சுத்தி.)

தொழில்பாரு மென்றுரைத்தீர் தோணவில்லை யென்மனது
ஒளிபாருங் கிருபைவைத்து உருப்படுத்த வேணுமையா
சுழிபாரு தேர்ந்தானின் சுமந்தவொரு வித்தாலே
வழிபாரு மப்பாலே வாருதியுந் தெளிந்திடுமே. (188)

வாருதியுந் தெளிந்தாலும் மாத்தரிது யானறியேன்
நீருதியே குருவாகி நிலைக்குமுறை சொல்லுமையா
ஆருதியே யென்மகனே அப்பாலே ரவியிலிட்டால்
தேருதியே மண்டலத்திற் சிறந்த குருவாமே. (189)

சிறந்த குருவெடுத்துச் செலுத்துவது சொல்லுமையா
நிறைந்த குருவாலே நிராமயத்தைச் சொல்லிவிடும்
பிறந்தமுப் பூவாச்சு பேதைமைதா னேதுசொல்வேன்
திறந்தசாக் கெல்லாந்தான் தீற்றிவிடு மென்றறியே. (140)

யென்றறிய வென்றுசொன்ன யென்குருவே நீர்கேளீர்
மன்றறியப் பூவேது வளர்ந்ததென்ன மண்டலத்திற்
சென்றறிய வேணுமென்ற சிறுபிள்ளாய் நீகேளு
உண்டறிய வளர்பூமிப் பூவை யறியாயோ. (141)



அறியாயோ வென்று அய்யனே சொன்னீரே
பிறியா நிலத்திற் பேதைமனஞ் சொல்லுமையா
குறியாரோ அண்டமதிற் கூர்ந்த மனங்கேளு
சிறியபிள்ளாய் கன்னிருது சேர்ந்த மனமறியே. (142)

கன்னிருது வென்றதொரு காரணமு மேதெனவே
உன்னி மனத்தே ஒளித்தீரே யென்குருவே
மின்னிவிடு மூவர்ப்பூவு மேதினியி லறியாயோ
வன்னியிரு மதிகூடி வளர்ந்ததுநீ யறியாயோ. (148)

நீயறிய வென்றுமனம் நிராமயமே யென்குருவே.
வாயறிய வண்டம் வளர்ந்ததுவும் யெவ்விடமோ
காயறியாப் பூவிதுதான் கலந்தமதி யெக்குமுண்டு
தாயறிய ரவிகூடித் தானது கண்டுகொள்ளே. (144)

கொள்ளவே சோதனைதான் குறியதுவே யெனக்கருளும்
மெள்ளவே ரகசியத்தை விடையெனக் கருள்புரிவாய்
தெள்ளவே மஞ்சளிலே தினித்திடவே சுரோணிதமாம்
வள்ளலே சிறுபிள்ளாய் வந்துநிறஞ் சொன்னேனே. (145)

சொன்னதுவே கண்டேனையா கூட்டும் வகையுரைப்பீர்
வன்னமிடு முப்பூவை வளர்ப்பதுதா னென்குருவே
கன்னமிடு நோக்கறியாக் கண்மணியே சொல்வதற்கு
இன்னமிடுங் குறியதுதா னேற்றவகை நீகேளே. (146)

கேளப்பா யென்மகனே கிருபையுள்ள மந்திரியே
தாளப்பா அமுரியிலே தாக்கப்பா தேத்தானை
ஆளப்பா வித்ததுதா னதுதேய்த்துத் தெளியவைத்து
வாளப்பா தெளிவதிலே வளர்பூவும் ரெண்டுக்கொன்றே. (147)

ஒன்றாக விட்டே ஊறவைப்பாய் மூன்றுநாள்
நன்றாய்த் தெளியவிட்டு ரவிதனிலே வைத்தாக்கால்
சென்றாட வத்தித் திறப்படவே யுப்பதுவாம்
என்றுலிக் கைமுறையா யேழுநிறஞ் செய்வாயே. (148)

(முப்பூ முடிக்க.)

செய்யப்பா விப்படியே சேர்ந்த கரியுப்பை
மெய்யப்பா யின்னம் மேவிடக் கருவறிவாய்
கையப்பா கண்ணங் கல்லானை பட்டுவிட
வையப்பா சத்திசெய்ய வகையை பிணிப்பாரே. [149)

பாரேகற் சுண்ணம் பகர்ந்த உவர்ப்பூவும்
நேரே அமுரியால் கெட்டிட்டு நீயே
ஊரே உறவாக்கி யுறத்தேய்த்துக் கருப்பறவே
வாரே யுட்பூச வர்மத்தைத் தான்காணே. (150)

காணென்று சொன்னீரே கைமுறையைச் சொல்லுமையா
வீணென்று கருவொட்ட விடமேது யென்குருவே
ஊணென்று நீமுடித்தா யுட்பூவைக் காணலையோ
ஆணென்ற முப்பூவா மதுகுறிப்பு யென்மகனே. (151)

குறிப்பை யறிந்தேனே கூட்டும்வகை சொல்லுமையா
செறிப்பை யறிந்தாலோ கேர்படநீ செய்திடலாம்
மறிப்பைக்கல் லாணி மாட்டு திசைக்கொன்று
வெறிப்பான சினமொன்று வெடியுப்புச் சமன்தாக்கே. (152)

(வேறு.)

தாக்கென வீரம் புனுகுமே சரியாய்
நோக்கென வுட்கரு நசுக்குமுப் பூவும்
ஆக்கே அமுரி யதுகொண் டரைத்து
ஊக்கே பூசி யுலர்த்திப் புடமிடே. (153)

புடமிடச் சொன்னீர் போதித்த குருவே
தடமது வேது தான்போக்குச் சொல்லும்
விடம திருமுழம் மேவிசற் குழியில்
அடவா பெருவை அதுமேற் பறத்திவை. [154)

வையென்று மேலும் மறுவெரு வடுக்கிக்
கொய்யென வக்கினி கொண்டுமே யிட்டுச்
செய்யாற் பிடஞ் சென்றே யெடுத்திடு
மெய்யெனச் சுண்ணம் விடுபட்ட சுண்ணமே. [155)

சுண்ண மெடுத்துச் சூட்டுமுறை கேளு
வண்ணமா மமுரி வடித்துநீர் தன்னில்
திண்ணமாய்ப் படியெனச் சிறக்கவெடுத்துக்
கண்ணாற் சுண்ணத் கண்ட படியிடே. [156)



(வீரம் பூரம்.)

இட்டுநீ மேல்மூடிச் சீலைசெய்து
ஏத்துலாய் குழியதிலே பட்சமொன்று
கெட்டையாய்ப் புதைப்பித்து யெடுத்துப்பாரு
நிலையான உப்பதுதான் கன்றாய்க்காணும்
முட்டியே யிக்கருவைச் சொல்லப்போகா
மூதண்ட மிடிந்துவிழு மப்பாகேளு
அட்டியென்ற குருமுடிக்க முப்பூவப்பா
அந்தரங்க வழலையுப்பு வானவாறே. [157[

வாரேது முப்பூவை முடிக்க நீதான்
வகையாக யெந்தனுக்குச் சொல்லுமையா
கூரேது பாகமதா யெடுக்கும்வாறு
கொண்டுரைக்க வேணுமையா யெந்தன்தேவே
தேரேது பூவினுட திறங்கள்சொல்லத்
தேன்போல உன்றனக்கு உரைக்கவாவா
நீரேது உட்கருவும் வெளியதானால்
நிலைத்ததப்பா வாதமென்ற கருக்கள்தானே. [158]

கருவேது யிடையேது சொல்லுமையா
காரணமா யெந்தனக் குகந்ததேவே
திருவேது வகையேது வொன்றுக்குள்ளே
திறமாகக் கண்டதுவோ வமைந்தாகேளு
அருவேது வெளிவிடுவாய் மூன்றுமப்பா
அந்தயிடை சமன்கூட்டி யெடுத்துக்கொள்ளே. [159]

கொள்ளவே சொன்னீரே குருவேஐயா
கூட்டுகிற வினமேது மகிழ்ந்துசெப்பும்
தெள்ளவே அமுர்தமென மொழிந்தவார்த்தை
தேன்போலே யெந்தனுக்கு ஊணைச்சொல்லும்
உள்ளபடி சொல்லுகிறே னப்பாகேளு
உரைக்கிறதை வெளிதனிலே சொல்லலாகா
கள்ளமன்றி வீரமொன்று பூரமொன்று
கலந்திடுவா யுரமொன்று புழுகுதானே. [160]

தானென்ற அறுபுளிவண் டரிசிகூடத்
தாக்கப்பா வெடியுப்பு ஒன்றுகூட்டி
வானென்ற உவர்ப்பூவுங் கூட்டிக்கொண்டு
வகையாகச் சரியிடைமுப் பூவுங்கூட்டி
ஏனென்ற சரியிடைதான் பார்த்துத்தூக்கு
யெடுத்துரைத்த வகையதுவே சொல்லக்கேளு
ஆனென்ற காயமதிற் கற்பங்கொள்வான்
அமுரியிலே காள்பட்ச மரைக்கச்சொல்லே. [161]

அரைக்கவென்று பட்சமதைச் சொன்னீரையா
அதினுடைய நாழிகைதான் சொல்லவேண்டும்
நிரைக்கவென்று மைந்தனுக்குச் சொல்லவேண்டும்
நிறுத்துவேன் குருவாலே மகிழ்ச்சிபெற்று
தரைக்கவென்று நீயுரைத்தாய் மைந்தாகேளு
தாக்குமப்பா சாமமொன்றுக் கதிகம்வேண்டாம்
துரைக்கரைத்துப் பட்சமது சென்றாலையா
துகளறவே வில்லைதட்டி உணரவையே. [162]

உணர்த்தவென்று சொன்னீரென் குருவேஐயா
உண்மைபெறக் குருவதனை முடிக்கச்சொல்லும்
உணர்த்தல்பெற்ற முற்குருவை முடிக்கும்மார்க்கம்
உண்மைபெற வெந்தனக்கு காட்டச்சொல்லும்
உணர்த்தல்செய்த குருமுடிக்க மைந்தாகேளு
உண்மையாய் நாதாந்தம் நாடிச்சொல்வோம்
உணர்த்தல்பெற்ற கற்சுண்ண மதனினுள்ளே
ஓட்டில்வைப்பாய் கமலமொன்று சாமந்தானே. [163]

கமலமென்று சொன்னீரே வைப்பதேது
கருத்துகந்த பாத்திரத்தைச் சொல்லும்சொல்லும்
அமலமென்ற பாத்திரத்தைச் சொன்னீரானால்
அதுகுறிப்பு வெந்தனுக்கு அறிக்கைசெய்யும்
நிமலமென்ற மைந்தனே சொல்லக்கேளு
நின்மயமாங் கபாலமென்றே அறிந்துகொள்வாய்
விமலமென்ற பாத்திரத்திற் சீலையேழு
விதமாகச் செய்வதப்பா முறைகள்தானே. [164]



முறையிடுவாய் சாமமொன்று தீபமென்ன
மூட்டுவதை யென்குருவே சொல்லவேணும்
கறையிடுமே யெரிப்பேரிப் போனாலையா
கைமுறைகள் தப்புவரு மெந்தன்கோவே
அறையிடுநா லதுகொண்டு பிறைப்போலே
அப்பனே திரியிட்டு விளக்கிற்போடு
நிறையவிடு யிலுப்பயெண்ணெய் வார்த்துக்கொண்டு
நின்மயமாஞ் சாமமொன்று யெரித்துவையே. [165]

(குரு வணக்கம்.)

வையதுவே பூசையது செய்துகொண்டு
வாலையுடன் திரிபுரையாள் புவனையோடு
செய்யதுவே வடுகன்றிரு வாணியப்பா
சிறந்ததொரு பயிரவிசா முண்டிதேவி
மெய்யதுவே சால்பதியுந் தேவரப்பா
மிக்கதொரு தாண்டவத்தைப் பூசைபண்ணி
கொய்யதுவே யேமவித்தை வசவேயாச்சு
குறிப்பறிமுப் பூவின் குருவடியிதாமே. (166)

( வேறு .)

குருவடி பொற்றுள் சரண்சரணங் கும்ப முனியே சரண்சரணம்
திருவடி நாதா சரண்சரணஞ் சித்தர்களருளே சரண்சரணம்
அருள்வடி வானாய் சரண்சரணம் அமரர்கள் கோவே சரண்சரணம்
பொருளடி மூலங் காட்டியிற்று போதித்த குருவே சரண்சரணம்

போதித்தகுருவே சரண்சரணம்பொதிகையில்வளரம்பலர்சரணம்
வேதித் தெனையே யாட்கொண்ட விமலா சரணம்மெய்ஞ்ஞானம்
சாதித் தேவே சரண்சரணம் சமுசயந் தீர்த்தாய் சரண்சரணம்
ஓதித் தருவாய் சரண்சரணம் உண்மைப் பொருளே சரண்சரணம்

( ரசமணி .)

பொருளது முடிந்த போக்கது சொல்லும்
இருளதை யகற்றி யெவ்விடம் புக்கும்
திருளது நாதந் திட்டிக்கக் கட்டும்
மருளது வீர மாணிக்கங் கட்டுமே. (169)

கட்டுஞ் சரக்குக் காரணஞ் சொல்லுந்
தெட்டுமே யெத்தனை திறப்படக் கட்டும்
வெட்டுமே பிள்ளாய் மேற்சரக்கெல்லாங்
கொட்டுமே தேன்போற் குறிபடக் கட்டுமே. (170)

குறியது சாக்கின் குணமது சொல்லும்
நெறியது கட்டுக்கு நிலையெது தேவே
மறியது கட்டுக்கு மைந்தனே கேளு
பிறியது குடகரியிற் பிலத்திடு மணியே. (171)

மணியது ரசத்தால் மகாமேரு தாண்டலாம்
மணியது ரசத்தால் மகாமேரு பொன்னும்
மணியெனும் ரசத்தால் வாலைபோ லிருக்கலாம்
மணியெனும் ரசத்தால் மாசற்ற தேகமே. (172)

மாசற்ற தேகம் வளர்கோடி பானுவாம்
மாசற்ற சித்தர் வளர்பூ வறியார்
மாசற்ற யோகம் வாசியே கட்டு
மாசற்ற ஞானம் வருமே யவற்குமே. (173)

மால்தனைக் கட்டியே வளம்பெற யியத்தில்
நூல்தனைப் பார்த்து நூற்றுக் கொன்றிட
ஆல்தனைப் பத்து மாத்தது பத்துகால்
கால்தனைத் தூருங் கருவங்கர் தானே. (174)

தானென்ற லிங்கர் தன்னை யெடுத்து
வானென்ற தங்கத்தில் மாற்று நாற் றொன்று
பேனென்ற தங்க மிருகியே கட்டுண்ணு
மானென்ற தங்கத்தை மாட்டுரவிக் கொன்றே. (175)

ரவி நாற்றுக் கொன்று நாட்டித்தங் கத்தை
ரவிதனை யொன்று நல்வெள்ளி தூக்கி
ரவியது மாத்து நாற்பது மாகும்
ரவியது வங்கத்தில் நாற்பதுக் கொன்றே. (176)

குன்றெனச் சிலையது கூறும்ரவி பத்தில்
வென்றென மாத்து வெட்டனைதப் பாது
அன்றெனக் கெந்தக மறுபது வெள்ளிக்கு
ஒன்றெனத் தாக்கு ஒர்பத்து மாத்தே. (177)

மாத்தினி லிப்படி வகைசொன்னீர் குருவே
ஆத்தினிற் றெளித்தோ ரறிக்கைசெய் தேவே
பாத்தினிச் செய்யும் பதருதே யிம்முறை
வேத்தினி கோடி வேதாந்த நோக்கே (178)



(வேறு கொச்சகம்)

வேதாந்தம் நோக்குமென்று விடைகொடுத்தி ரென்குருவே
நாதாந்த யோகத்தே பொருளறிய நான்மறையிற்
போதாந்தச் சேவைச் சாந்தைப் புகல்வதற்குத்
தாதாந் தடியேனைத் தன்னுடன் காத்தருளே. (179)

( வேறு )

காத்தருள்நீ வாசிநிலை பிரிந்திடாமற்
கண்மூக்கு மத்தியிலே நோக்கிப்பாரு
பாத்தருள முனைநோக்க வாசிகாணும்
பதறுதே சுழிமுனையி லிருந்துகாரு
நீத்தருள யிதுகொண்டு வெளியாய்க்காணும்
நினைவாலே பாரப்பா தோன்றுந்தோன்றும்
பாத்தருளுஞ் சிவயோகி யிருந்தவீடு
பகருவேன் வர்னமது வெளுப்புத்தானே. (180)

தானென்ற மூலமதில் வாசிவைத்துத்
தருகாது சிங்கென்றே யூதியேரு
வானென்ற கண்டத்தி லிருத்திநீயும்
வங்கென்று மேல்நோக்கி யூதுவது
கோனென்ற யிதுவெல்லாம் நாடிசுத்தி
குறிப்பாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
நானென்ற ஆக்கினையா மூலத்துள்ளே
நாட்டுறதோர் கருவொன்று சொல்லப்போகா. (181)

(உயிர் வளர.)

போகாதே கருவென்ன யென்குருவே
போக்கென்ற கருமறைப்பைச் சொல்லுமையா
ஆகாத பாவியென்றோ மறைத்துவைத்தீர்
ஐயாவே யான்செய்த தருமந்தானோ
நோகாதே சொன்னுக்கால் மைந்தாகேளு
நோக்கறிந்து கூடுவையோ மனதைப்பார்த்தேன்
சாகாத காலப்பா அதுவேயென்றால்
சாதித்து யேறவென்றால் யேத்தந்தானே. (182)

ஏறவே அறிக்கைதிரு வுளமேசெய்தால்
எந்தமட்டும் போகுதென்று உண்ணிப்பார்ப்பேன்
ஆறவே மனந்தேற வழியைச்சொல்லும்
அகண்டத்திற் சற்குருவே மொழியுமையா

தேறவே யுன்பெலத்தி னாலேஐயா
தெளிந்தேற மாட்டுவையோ சொல்லுமைந்தா
கூறவே யுன்மனதின் நோக்கம்பார்த்தேன்
குறிப்பறிந்தேன் கருவையினிச் சொல்லக்கேளே. (183)

## ( வேறு. )

கேளுநீ மைந்தா கெடிபட்ட அச்சரம்
தாளுநீ யாக்கினை தானே துதித்து
ஆளுநீ யிங்கென் னுரு முறைக்கிலார்
வாளுநீ உயிரது வளர்ப்பது காயமே. (184)

## (பத்திய முறை)

வளர்ப்பதி லட்சரம் வானினிச் சொன்னேம்
தளர்ப்பது நீயுந் தான்சொல் லாதே
அழைப்பது விண்ணினில் அமர்த்தியே நோக்கு
குழைப்பது காயங் கோடி யுகமே. (185)

சீரது பொன்னடி சிறந்துயிர் சொன்னீர்
காரது பொருளைக் காட்டினீ ரென்குரு
தாரது பந்தியந் தானது சொல்லு
வாரது பொதிகை வளர்முனி சரணம். (186)

அறிந்திடு மெய்ப்பொருள் அருளதைக்காட்டி
திரிந்திடு மடியெனைத் தெளிவது சொன்னீர்
வருந்துதி கண்ணீர் மவரடி பதத்திற்
பொருந்திடுந் தரையிற் புகட்டினேன் சரணம். (187)

உடலது தேக மனைத்துந் தெத்தமாய்க்
கடலது போலக் கதறியே யழுது
மடலது விரிந்து மகாமேரு தகத்தாற்
றிடலது உடலைத் தெத்தங்கொள் வீரே. (188)

தெத்தங்க ளுடலைத் தெளிந்துரை செய்த
சித்தனென் பிள்ளை தெளிபட வாழுயிர்
அத்தனைப் போலே அருந்ததி வாழ்பவ
ரெத்தனை யுகமோ வென்று மிருப்பார். (189)

## (பத்தியமுறை உப்புக்கட்டு.)

இருக்கவே பத்திய மியம்புவேன் கேளு
சுருக்கவே உப்பைக் கட்டிநீ கொண்ணு



திருக்கவே உப்புத் தெளிபடா விட்டால்
உருக்குள் ளத்தே உப்பது வாமே. (190)

உப்பது யித்வா முகந்தபுளி யாகா
நிப்பது புளியது நெல்லிக்கா யதுவாம்
கைப்பது வுள்ளி கடுகுமீ னாகா
செப்பா திறச்சி சோலாகாதே. (191)

சோலும் பச்சிலை சேரொக்க வாகா
ணாலும் பச்சைப் பயறதை யுண்ணலாம்
நீரலும் வெண்ணீர் நிகழ்பட வாகும்
பானம் மோரிலும் பாலிலுந் தானே. (192)

தானே கரியுப்பைத் தானது கட்ட
னானேது சொல்லு முருப்பிட மையா
வானே துடலுப்பு மாட்டி யரைத்து
கோனேது வில்லைபோற் குறிபடச் செய்யே. (193)

செய்யப்பா வில்லை திறமா யுலர்த்திக்
கையப்பா வுவரியிற் கலந்ததை வைத்து
மெய்யப்பா மூடி மேலேமண் ணிட்டுச்
செய்யப்பா மூழப்புடந் தீயினாற் கட்டே. (194)

கட்டின உப்புக் கதிர்மணி போலாம்
வெட்டியே பார்த்தால் விடுமதிற் சோதிதான்
தட்டுமி உப்பைத் தாம்பூரத் தூட்டே
ஒட்டிய மாத்து ஒன்பதுகாணே. (195)

காணே அதுவுங் கலந்துரு தத்திற்
றானே அரைக்கத் தன்னுமி நீரால்
மானே அரைக்க மாளுஞ்சவண் ணம்போல்
ஊணே யுருக்கி யுருட்டிநீ கொள்ளே. (196)

கொள்ளே மணியது கூட்டிடுந் தம்பனம்
விள்ளே மணியது மேவக் கெவுனம்
தள்ளே மணியது தாம்பூரத் தீய
உள்ளதோர் மாத்தது ஒன்ப தரையே. (197)

மாத்தென்ற யிந்துப்பு மாலிங்கங் கட்டுண்ணும்
காத்தென்ற வகைத்திற் கலந்திட நீருண்ணும்
பாத்தொன் றறியார் பரவுவார் சித்தர்தான்
கோத்தென்ற மைந்தா குறியது பாரே. (198)

பாரென்ற பூரணமா மிருநா றுள்ளே
பண்பான காயசித்தி வாசியோகம்
காரென்ற வாதமும் பூளின்மார்க்கம்
கைமுறையாய்ச் சொல்லிவிட்டேன் நோக்கிநீயும்
வாரென்ற உலகிற்பூரணத்தைக்கண்டால்
மாட்டியே காயசித்தி செய்வாயப்பா
ஊரென்று லடுக்காதே மேருசார்ந்து
உட்பட்ட சித்தருடன் வாதாகாதே. (199)

வாதுசெய்யாப் பூரணத்தைக் காட்டவேண்டாம்
மைந்தனே உனக்கதுதான் புத்தியப்பா
போதுசெய்யா துலகுதனிற் சித்தருண்டு
பொய்கொலைகள் செய்பவரைச் சேரவேண்டாம்
நீதிசெய்யும் பெரியோர்வே தாந்தியானால்
நிலைவரத்தைக் கண்டுமனந் தேறச்சொல்லு
கோதுசெய்யும் பெண்மாயை நீக்கிநீயும்
கொண்டேறிப் பூரணத்தைக் கூர்ந்துநோக்கே. (200)

நோக்குமது இருநூறும் பார்த்தாயானால்
நூல்போட்ட வழிபோலே துலக்கமாகும்
வாக்குமது உன்றனக்காய்ப் பூரணத்தை
மருவியே கூறிவிட்டோந் தெரிக்கொள்வாய்
போக்குமது உயிரெழுத்தாக் கிளையிற்சொன்னேன்
பொதுவாகக் கருவறிந்து அடக்கிநீயும்
தாக்குமது ஒன்றப்பா வன்னிநீயும்
சதாசிவ யோகங்கூடி வாழுமுற்றே. (201)

அகத்தியர் மணக்கோலம்

(முற்றிற்று.)

உ

பரமபதி துணை.

மகா மகத்துவம் பொருந்திய

## அகத்திய முனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

# கனகமணி 100.

### காப்பு.

ஆதியெனும் மனோன்மணியைத் தொழுதுபோற்றி
அன்பாகக் கனகமணி அடியேன்பாட
சோதியதாய் நின்றஓங் காரம் போற்றி
சொல்லவொண்ணாப் பூரணத்தின் அருளைப்போற்றி
நீதியதாய் நின்றசித்தர் பாதம்போற்றி
நிறைந்துநின்ற ஓங்காரத் தருளைப்போற்றி
பாதிமதி யின்றகுரு பாதம்போற்றி
பரப்பிரம மானகண பதிதான்காப்பே. (1)

### (குளிர் சுரத்திற்கு.)

பிரமமதாம் விஷ்ணுசக் கரத்தைச்சித்தர்
பேசினார் பிரபலமாய்ப் பிரித்துச்சொன்னார்
திரமிதுவே யிதுவெல்லாம் வீரமில்லையென்று
செப்புகிறே னகத்தியனா னிந்தநூலில்
சிரமதுவை அருத்தசிவன் விந்துலிங்கம்
செந்திருமால் தேவிகெந்தி சிலையுங்காந்தம்
பரமபதங் காட்டும்வெள்ளை மிளகுசுக்கு
பதகெவுரி யுடனரைப்பு இஞ்சிச்சாரே. (2)

இஞ்சிச்சார் கடுகைரெண்டு பழச்சார்ரெண்டு
இயல்பான குமரிரெண்டு கன்னிரெண்டு
வஞ்சிப்பா ரரைப்பான உடனேபாசிப்
பயறளவாய் நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
மிஞ்சித்தான் வருசன்னி விஷசுரங்கள்
மெய்கருத்து குளிர்நடுக்கள் விரையங்காந்தல்
அஞ்சித்தான் போகுமென்று இஞ்சிசக்கு
அனுப்பான மாமெனவும் அரன்சொன்னாரே. (3)

(சூரிய குளிகை)

சொன்னபடி சூரியனின் பிரபைகேளு
    சூதமொடு வெள்ளைலிங்கம் காவிகோஷ்டம்
என்னபடி சமனேலம் சமனாய்க்கொண்டு
    இஞ்சிச்சார் பழச்சாற்றி லரைப்போர்சாமம்
இன்னபடி செய்யுமென முடியாதப்பா
    இதுஉளுந் தளவாக எல்லாநோய்க்கும்
பன்னியடி யாஞ்சரங்கள் சன்னிசூலை
    படுவாய்வு வீச்சுவலி பறந்துபோமே. (4)

போமென்ற வாதராட் சதனைக்கேளு
    புலத்தியனே வீரம்ரசம் புகழுங்காந்தம்
பாமென்ற தாளகமும் லிங்கப் வில்லு
    அப்பனே இருவேலி கலைத்தோல்எட்டும்
சாமென்ற வெள்ளுள்ளித் தயிலத்தாட்டு
    தனிஉளுந்தாய் நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
ஓமென்ற பிரணவத்தால் மிஞ்சிகைக்கில்
    ஊட்டிடவே சரஞ்சன்னி சூலைபோமே. (5)

(கண்ணோய்க்கு மெழுகு)

போமென்ற விழிரோகம் தொண்ணூற்றாறும்
    போகவே சிதமெனும் குழம்பக்கேளு
தாமென்ற செல்லியிலை பலமோபத்து
    சலமுமது படிரெண்டில் பழம்போல்அவித்து
காமென்ற அயினீரை வடிதான்கட்டி
    நவபாண்டந் தன்னிலே பதினிபோல
வேமென்று காட்சியதை உலர்த்திவைக்க
    மெழுகாகு முலைப்பாலில் விழியிலூட்டே. (6)

ஊட்டவோர் போதக்கு மிளகுபோல
    உருட்டிமுலைப் பால்குழப்பி நாளோமூன்று
ஆட்டவே கண்ணோயும் புண்ணுக்குத்தும்
    அமாமுடன் சதைவளர்தல் பூக்கள்புண்ணும்
பூட்டவே புளுவெட்டில் நீரோட்டங்கள்
    புரச்சுத்து புண்வீக்கம் பொதுவாய்க்கண்ணோய்
மூட்டவே தொண்ணூற்று ஆறும்போமென்று
    உரைக்கஅரன் விதிப்படியே உரைத்திட்டோமே. (7)



(கோடாசூரிக் குளிகை.)

இட்டகுத்துக் கோடாசூ ரிகையைச்சொல்வேன்
    என்னவென்றால் அரன்விந்து தனவாயதேவி
தொட்டரத்தை சுக்குஉவர்ப் பூவுங்கூட்டி
    துகரமுதல் நகரமுதல் ரெண்டுந்தள்ளி
விட்டஎழுத் திரண்டும்வந்த ரசத்தைவிட்டு
    வேகமதாய்க் கடிகைரெண்டு ஆட்டிஉளுந்தளவு
வட்டாவி தனிலுலர்த்திச் சயங்கள்சூலை
    வாதமோடு பரங்கியரை யாப்புப்போமே. (8)

போகவென்று லாத்தைசுக்கு பொடியாய்ப்பண்ணி
    புதுத்தேனில் மூன்றரைநாள் ஏழுபோது
மாகவென்றால் மாத்திரையொன் றாகக்கூட்டி
    அஷ்டகுன்ம சயமேழு யீளைகாசம்
ஏகவென்றால் சூலைபதி னெட்டுவாதம்
    எண்பதுசி லேற்பனத்தொண் ணூற்றியாறும்
சோகைவிக்கல் பாண்டுஎலி கடியுங்குஷ்டம்
    தொடுகண்ட மாலைஅவ பத்தியமாகாதே. (9)

(மேகப்புண்ணுக்கு பூரபற்பம்.)

பத்தியமாய் மேகமொடு புண்களுக்கும்
    பாண்டுவொடு சோகைகுஷ்டம் வீக்கத்துக்கும்
சத்தியதில் வரும்வாத சூலைக்குத்தும்
    சகலபவுந் திரத்துக்கும் தானேபின்னும்
மூத்திவரும் விப்புருதி அரையாப்புக்கும்
    புத்துரணம் குத்துவலி அரிபுண்ணுக்கும்
கொத்தியே பிடுங்கும்குன்ம வாய்வெட்டுக்கும்
    குடநீரு வாதசன்னி சகலத்திற்கே. (10)

சகலத்துக்கும் பொதுவாகப் பக்கப்பூரம்
    சாற்றுகிறேன் குன்றின்மேற் றீபமாக
இகலாகும் வியாதிகளுக் கேமனாகும்
    என்றரனும் விதித்துரைத்தா ரென்னவென்றால்
புகலில்லை யிதைவிட்டால் வயித்தியோர்க்குப்
    பிழைப்பில்லை நோயாளி பிழைப்போயில்லை
அகலமாய் விரித்துரைத்தார் மருந்தோயில்லை
    ஆணிமுத்துக் கோர்வையென்று சதினூல்தானே. (11)

### திருமால் சர்வாங்கமை.

அதினாலே புலத்தியனே உனக்காய்ச்சொல்வேன்
ஆதிஅரனார் திருமால் வடித்தமையை
பதமாகும் வழிசொல்வேன் மருந்தைவாங்கி
பத்துக்குப் பாதிபோய் பாதிதன்னை
இதமாகப் படியரைத்தான் லவணமிட்டு
இப்பாதி தன்னைவிட்டுச் சட்டிதன்னில்
அதமாக செய்க்குமேற் சட்டிமூடி
அவ்விரண்டு சட்டிவாய் சீலைசெய்யே. (12)

சீலையது உலர்த்திச்சூட் டடுப்பில்வைத்துத்
திறமாகக் காடாக்கினியாய் மூன்றுகடிகை
வாலையது எரித்தபின்மேற் சட்டிதன்னில்
வரும்பன்றி முடியாலே வழித்துச்செப்பில்
வேலையது சொல்லுவோம் பணந்தான்போதாய்
விடிமாலை காலிரண்டாய் ஏழுபோது
மாலைதனி லாட்டுகரை வெல்லந்தன்னில்
மருந்தினால் பின்புசெய்யும் வகையைக்கேனே. (13)

கேளப்பா மருந்தருந்து அளவதாகக்
கிருபைமறு பத்தியத்தில் உப்புமாகும்
வாளப்பா எட்டாம்நாள் வெண்ணீர் ஆறவைத்து
நாள்மூன்று வெண்ணீரில் ஸ்தானஞ்செய்வாய்
கோளப்பா வாராது விட்டபின்னே
கொள்ளலாம் அரைப்புளியும் உப்புங்கூட்டி
நாளப்பா பத்தாநாள் திலகயெண்ணெய்
நலமாக முழுகிவரத் தீரும்நோய்கேள். (14)

நோயான தென்னவென்றால் கிரந்திஅரையாப்பு
நுட்பமாம் பவுந்திரங்கள் படுசூலைப்புண்கள்
காயான விப்புருதி சிலந்தி துடைவாலை
கண்டத்தில் வருமாலை பிளவைகுஷ்டம்
வாயான ததனில்வருஞ் சூலைரோகம்
வாதமெண்ப தடன்சூலை பதினெட்டுந்தான்
சேயான வழிகள்சன்னி வயற்றுக்குன்மம்
செங்கரப்பன் வண்டுகடி சில்விஷமும்போமே. (15)



போகுமே பிருமலொடு பீனசபரோகம்
பொங்கிவருஞ் சிரநோய்கள் புத்துப்புண்கள்
ஏகுமே மூலமுளை சுரங்களெல்லாம்
என்னசெய்வோமென் றயெம னூர்க்குச்செல்லும்
சாகுமே குளிர்விரையன் சகலநோய்க்கும்
சாதிப்பா யனுப்பானங் கண்டுகொள்ளு
வாகுபெறச் சகலநோய் தீரவென்றால்
மைவிழியாய் காந்தசத்தில் மால்தேவிசேரே. (16)

சேர்க்கவே சுரந்தீர்ப்ப தரிதாம்வித்தை
செய்குணங்கேள் சுரம்வந்த ரெண்டுநாளும்
போக்கவே லங்கனமாய் மூன்றும்நாளில்
பொதுவான அரத்தைசுக்கு கருக்குமூலம்
ஏர்க்கவே கிஷாயமாய்ச் செய்துகொள்ளு
எட்டாநாள் இஞ்சிமூலைப் பால்தேன்சேரே
தீர்க்கவே நவநாளில் மருந்துமாத்திரை
செந்தூரஞ் செய்திடிலோ தீரும்பாரே. (17)

(சயத்துக்கு எண்ணெய்.)

பாரப்பா சயத்துக்குக் கீழ்க்காய்நெல்லி
பாணிவிடாச் சாருக்கப் படியேகாவில்
சேரப்பா எள்ளெண்ணெய் படிதான்காலாம்
தீதற்ற சர்க்கரைபலம் ஒன்றாய்க்கூட்டி
நீரப்பா யெரிபதத்தில் தயிலமாகும்
தினமிரண்டு துட்டளவாய்ச் செலுத்திக்கொண்டு
போரப்பா செய்யுமிது சயமிளைப்புகாசம்
பொல்லாத சோகைபித்தம் போகும்பாரே. (18)

(பிளவைக்கு.)

பாரேநீ பிளவைஅரை யாப்புமாறும்
பலவிதமாய் வருஞ்சிலந்தி பிறப்பாட்டுக்கும்
சேரேநீ சவ்வீரம் களிஞ்சிநல்லெண்ணெய்
சித்தண்ட எண்ணெய்சேர் வகைகால்படியாய்
தீரேநீ எட்டிவித்து மிளகுமஞ்சள்
சிவந்தமால் தேவிகெந்தி வகைகளஞ்சியெட்டாய்
கோரேநீ பொடிபண்ணி எண்ணெய்தனிற்காய்ச்சி
கொண்டுதொட்டுப் போடவுமே குணமுமாமே. (19)

### முடக்கு வாதத்துக்கு

ஆகுமென்ற இருவேலி சூரணித்து
அதுகளஞ்சி அஞ்சுடனே பனைவெல்லம்பலமாய்
ஓமென்ற திலதயெண்ணெய் படிதான்காவில்
ஊட்டியெரி வடிபதத்தில் சேர்துட்டாக
நாமென்ற அஞ்சுநாள் போதொன்றாக
காட்டிக்கொள் புளிதள்ளி உப்புக்கூட்டு
வேமென்ற மறுபத்தியம் அஞ்சுநாள்தான்
மேல்முடக்கு சூலைவாதம் விட்டுப்போகும். (20)

போமென்ற அக்கினிகா லனையேசொல்வோம்
புலத்தியனே சுரஞ்சன்னி வலிகட்கெல்லாம்
ஆமென்ற கெவுரிரசம் லிங்கம்வாளம்
அரிதாரம் வகையஞ்சு களஞ்சதாக
காமென்ற தேசிநீர் அரைச்சாமமாட்டி
சன்னச்சிறு பயறளவு இஞ்சிக்கில்
ஓமென்ற பிரணவம்நூற் றெட்டுமோதி
உரைத்திடுவாய் சுரஞ்சன்னி வலிகட்கெல்லாம். (21)

எல்லாமோ அல்லவோ வென்றுகேட்டால்
எமகா மறுபத்துநாள் வலிகள் அஞ்சு
பொல்லாத சன்னிபதி மூன்றுதோஷம்
புரக்கும்வகை வாதமெண்ப தடனேவாய்வு
சொல்லாமற் கொல்லுகிறே மென்றுசொல்லி
கூச்சலிட்டுக் கொண்டேகும் கூறினேம்நாம்
அல்லாமற் சொன்னபடி நடவாவிட்டால்
அகத்தியமாம் போகரரி யனைத்துஞ்சொல்லே. (22)

சொல்லவே பாசமாந் திரியைக்கேளு
சூதமுறை தளவாயும் நிலவாகைத்தொலியும்
வல்லகொடு வேலிஎருக் கிலைகாலுமாக
வகைகாலு மருந்துமே களஞ்சிகாலாய்க்
கல்லில்வைத்துப் பொடியாக்கிப் பங்கொன்பதாகக்
கடுதாசி தனில்வைத்துச் சுங்கானிற்கொடுக்க
நல்லநாள் மூன்றுக்கு மூன்றுபோதாய்
நான்மூன்று குடிக்கமறு பத்தியமுன்றே. (23)



மூன்றில்ரெண்டு நாள்கழித்து உப்புக்கூட்டி
முழ்கலாம் வெண்ணீர்தான் மூன்றுபோது
ஏன்றுவந்த பத்தாநாள் யேரண்டஎண்ணெய்
இடப்புளியுங் கூட்டலாம் ஏகும்நோய்கள்
தோன்றுவலி கிரந்திஅறை யாப்புசூலை
துடைவாத முடக்குநீ ரழிவுமேகம்
ஊன்றுபவுத் திரமூல முளைகண்டமாலை
உணராத புண்பொடிகள் பறந்தோடிப்போமே. (24)

### வாந்தி பேதிக்கு.

போமென்ற வாந்தியோடு பேதிக்குமருந்து
புகலுவோம் பின்களஞ்ச கவுக்காரக்களஞ்ச
ஆமென்ற ஏலமொடு சாதிக்காய்சுக்கு
அவிபிளகு பழத்தோடு சாதிலிங்கமஞ்சும்
நாமென்ற எழுமருந்தும் வகைக்கைக்தாய்க்கொண்டு
நல்லஉவர் ஜலங்கலக்கி தெளிவிருத்தரைத்து
ஈமென்ற கடலைபோ துலர்த்திஉவர்நீரி
லிடச்சன்னி வாந்தியொடு பேதியொளித்திடுமே. (25)

### சருவாங்கக் குளம்பு.

இடுமென்ற சருவாங்கக் குளம்புகேளு
என்மகனே இரதமுடன் லிங்கங்கெந்தி
உடுவொத்த பொரிகாரம் காயம்அரிப்பெண்ணும்
உருசமனாய் வாளம்தோல் போக்கியதிலாட்டி
குடுமென்ற மருந்துகுன்றி யளவதாகக்
குணமுடனே கிழுலர்த்தி வைத்துக்கொண்டு
அடுமென்ற உடல்நோயின் கூறுபோல
அனுப்பானங் கண்டனை யனைத்தும்போமே. (26)

### மலடு நீங்க.

போமென்ற பெண்களுக்கு மலடுநீங்கப்
புகலுவோங் கோமட்டிவித் துடனேர்வாளம்
காமென்ற வெள்ளுள்ளி யேரண்டவித்து
காலுமருந் தஞ்சமனாய்க் குளித்தயிலமிறக்கி
வேமென்ற மாதவிடாயதனில் ஊசிடைதயிலம்
விரைத்தூட்ட மருவிலக்கம் வாராதுசொன்னேன்
ஓமென்ற பிரணவமே பிதக்குமூலம்
உருமூன்று யோதனவாய் அருந்துமூலம். (27)

### புண்களுக்கு மருந்து.

மூலமென்ற ஆராத புண்களுக்கு
முதவெள்ளைக் குந்திரிக்கம களஞ்சிமூன்று
சாலமென்ன கொம்பரக்கு களஞ்சிமூன்று
தனித்திலத எண்ணெய்விட்டு அனலில்வைத்து
காலமென்ன மெழுகாகும் உடனுடனேவெதுப்பி
கொண்டுபுண்ணுக் களவாகக் கொண்டுகட்டி
ஆலமென்ன சேருசலக் குளிகள்மூடி
அகலமாம் புண்சருங்கும் ஆறுந்தானே. (28)

தானான பவுந்திரங்கள் ஆறுதன்னில்
சாற்றுவோமவர்கள்செய்யுஞ் சளமுமற்று
கோனான சாத்தியமு மசாத்தியமுங்கூடக்
குணமாகு மருந்துகளுங் கூறக்கேளு
மானான கொடிப்பவுந்திரந் தாரைப்பவுந்திரம்
மற்றுமுள்ள மூலப்பவுந் திரமுமாக
வானானை யடக்கும்பவுந் திரமுமஞ்சம்
வடவாமு காக்கினியு மாருந்தானே. (29)

### (பவுந்திரங்களின் குணம்.)

காணப்பா கொடிப்பவுந்திரந் தாரைக்குங்கீழே
கருதும்ப வனத்துக்கு மேலதாக
உண்ணப்பா தோன்றும்போ தனக்குத்தண்டாய்
உறுதியாய் திங்களரை கழித்துப்பின்னே
காணப்பா விசைதைக்கும் வாறுபோல
கறுக்குத்து குளிர்சரமுஞ் சரீரவேர்வை
பூணப்பா நாடிகளும் பேதமாகிப்
புறப்படுமே தென்னங்கா யளவாய்ப்பாரே. (30)

பாரப்பா தாரைவரும் பவுந்திரத்தைக்கேளு
பவனத்தில் ரெண்டுவிர லளவாய்த்தோன்றி
கூரப்பா குன்றுமணி யளவாய்க்கொட்டைப்
பாக்களவா யெழுந்துகுத்திக் குமுறுந்தீயாய்
ஊரேநீ யுள்மூலப் பவுந்திரந்தன்னை
உரைத்திடுவோம் பவனத்தி லுருப்புத்தோன்றி
சேரேநீ பவனத்தி னடியில்குத்தும்
தேகவலி யிளகளவாய்த் தியக்குஞ்சீரே. (31)



சீரான பக்கம்வரும் பவுந்திரங்கள்
செலதாரைப் பக்கத்தி லருகெல்லிக்காயாய்
வாரணமாய்க் காகரப்பாய்க் குத்துண்டாகி
வலுச்சைகள் தமராகி யடைபடாது
வேரான வடவாமு காக்கினியாய்த்தீயாய்
மேலெரிவும் பவனத்தில் எரிவுங்காட்டி
கோரான மண்டலத்திற் கொல்லும்பாரு
குணமாகு மூன்மூன்று பின்மூன்றுமாகா. (32)

ஆகாத பவுந்திரந்தா னாறுஞ்சொன்னோம்
அப்பனே அண்டமதில் சூலையாகி
போகாத விதமாகத் தண்டிலொன்று
புறப்படுமோர் பவுந்திரந்தா னேழுமாச்சு
ஏகாத யிந்தவகை பவுந்திரஞ்சேராய்
யிருபிளவை தண்டதனில் பிளவையென்றேன்
சாகாத படிமருந்து சொல்லக்கேளு
சத்தியமா யுள்ளபடி சாற்றுவோமே. (33)

### பவுந்திரத்துக்கு எண்ணெய்.

ஆமென்ற புண்புரைகள் தீரயெண்ணெய்
அரைவிரேம் சகலதுக்கும் பொதுவாய்க்கேளு
தாமென்ற தளவாயும் வெண்குந்திரிக்கம்
தன்னிலே துத்தமுடன் ஏலத்தோடு
வேமென்ற மஞ்சணையின் மெழுகுவேம்பாடம்
மேதினியிற் கஸ்தூரி மஞ்சள்கூட்டி
நாமென்ற மருந்தெட்டில் மூலம்ஒன்று
நலம்படுமா மேழ்மருந்துங் களஞ்சிதானே. (34)

தானான மருந்தெட்டுங் களஞ்சிபதினென்று
தனித்திலத எண்ணெய்அரைப் படியுஞ்சேர்த்து
வானான செவ்வரலிப் பூச்சாற்படிகாலும்
வளமாகக் காய்ச்சகடு காருமட்டும்
தேனான நீர்வற்றித் தெளியும்போது
சின்மயமாங் கணபதியைப் பூசித்தேதான்
ஊனான ரெத்தமோடு சளங்களோடி
உள்புரையாம் புண்களுக்கும் அடைத்திடாயே. (35)

அடைத்தபின்பு சீலைமுக்கிப் புதைமுன் வைத்து
அப்பனே மண்டலந்தான் அரைக்குள்ளாக
புடைத்திட்ட பவுத்திரங்கள் ஓட்டைப்புண்கள்
புதைவிக்கங் குத்துடனே பொல்லாச்சவ்வும்
விடைத்திட்ட பவுத்திரங்க ளாறுமூலம்
வெத்தஅரை யாப்புளவை புண்கள்சூலை
படைத்திட்ட சடத்தில்வரும் புண்களெல்லாம்
பாரிக்கி நிறம்புமெனப் பரன்சொன்னாரே. (36)

## மேதை பற்பம்.

சொன்னபடி மேதைமகா மேதைக்கேற்ற
சுருக்கான மேதைபற்பஞ் சொல்லக்கேளு
என்னபலங் குக்கிரிக்கம் வெள்ளைவாங்கி
இட்டம்மி யிற்றூளாய் மைபோலாட்டி
சன்னமல்ல புரையளவாய்ச் செலுத்திமுன்னாள்
சார்த்தஎண்ணெய் விட்டுவாய்ச் சீலைமூடி
அன்னபடி போதுரெண்டு யேழுநாளும்
ஆகிவரச் சலப்புரைகள் அடைக்கும்பாரே. (37)

பாரையா யிப்படிநீ திலதயெண்ணெய்
பத்திரமாய் மத்தித்துப் புரையுள்வைத்து
ஆரையா மேலெண்ணெய்ச் சீலைபோட்டால்
ஆறுநாள் யேழுக்குள் அதின்புரைகள்மூடும்
சீரையா சத்தியமே வெளிசொல்லாதே
தெய்வகலை காட்டுமிந்த நூலேசொன்னேன்
ஊரையா அரியவரும் பவுத்திரங்கள்
உத்தனுக்காய்ச் சொல்லுவோ மருந்துதானே. (38)

## லிங்க செந்தூரம்.

மருந்தென்ன தளவாய்தான் களஞ்சிகாலு
மார்க்கதிரி பலையொன்று குமரிதேங்கி
வருந்தநீ ருண்டாகும் மகத்துவமெத்த
கோடாசூரிக் காயரைக்கச் சொன்னதேனு
மிருந்தெண்ணெய் யிவ்விரண்டு மோற்சிரங்கை
இதிற்பாதி அதிற்பாதி தீபத்தீயில்
பொருந்தவே சுருக்கிட்டு வற்றும்போது
புகையுமுன்பே யெடுத்துக்கொள் கட்டிப்போமே. (39)



போமென்ற லிங்கமது செந்தூரமாச்சு
புரைந்துவெட்டில் கொருங்காது துண்டாம்பாரு
ஆமென்ற அளவுபண மிடையதாக
அருந்துவாய் கரும்புவெல்லம் பனைவெல்லந்தன்னில்
நாமென்று நறுக்கியே வேளைபதினாறு
நாளேழு கொண்டாளோ பவுத்திரங்கள்தீரும்
வேமென்ற மேகமொடு கிரந்திஅரையாப்பு
எண்பதுவா தஞ்சூலை சுரம்வாயுயேகும். (40)

யேகுமே வலிகள்முதல் பாண்டுசோகை
இயல்பான வலிகுன்ம மெட்டுமையா
போகுமே கைகாலில் திமிருடனே வெளுப்பு
பொல்லாத சயரோக சளுவனைகள்குஷ்டம்
சாகுமே சத்தியொடு ஓங்காரம் விக்கல்
சன்னிவகை சூலைவகை வாயுவகையெல்லாம்
ஆகுமே சகலநோய்க் கனுப்பானங் கொள்ளு
அப்பனே உப்புபெண் புகையிலையுந்தள்ளே. (41)

## சன்னிவாத சுரத்தின் குணம்.

தள்ளுசன்னி வாதசுரம் செய்யும்வகைகேளாய்
தனுக்குறையும் நீங்காத கணகணப்புச்சுரமும்
கொள்ளுவது மேல்வலியும் சிரசிடியுங்குறைவாம்
குளிருடனே பேதியுடன் முகங்கள் தளதளப்பும்
இன்னமென்ன கண்சிவப்பு மதிகங்கண்டால்
எள்ளளவுந் தப்பில்லை சன்னிவாதசுரமாம்
விள்ளவே இப்படியே குணங்கள்கண்டால்
இதுலிங்க செந்தூரத் தேகுமெனமொழியே. (42)

## மிருத்துவாதிக் குளிகை.

மொழிந்திடவே மிருத்துவாதிக் குளிகைகேளாய்
முன்னாளோர் விந்துலிங்கஞ் சொன்னமநோசிலையும்
பொழிந்தகுரு வாம்வீரம் புனுகுடனேகோஷ்டம்
பொதுமதூரஞ் சாதிக்காய் கிராம்பேலமரத்தை
தெளிந்தருத்தி ரூச்சந்தேத் தாங்கொட்டைசிலதை
சேருகலங் கொம்புமல்லி பதிநாருஞ்சமனாய்
பொளிந்துவருந் தேனகத்தி யிலைச்சாற்றில்சாமம்
பூட்டியரை மிளகளவாய் சுரம்சன்னிபோமே. (43)

போமேகண் டோர்வகைசொல் லக்கேள்சன்னி
புகலரிய கொடுஞ்சுரங்கள் வாயுவெட்டைபோக
வேயென்ற வலிகள்முதல் சகலவியாதிக்கும்
மிஞ்சாம லுரைக்கும்வகை விள்ளக்கேளு
ஆமென்ற ருத்திராச்சங் கலங்கொம்புகோஷ்டம்
அரத்தைதேத் தாமதுரம் காண்டாவின்கொம்பு
ஊமென்ற மதத்தந்தம் அகில்கோவுபுனுகு
ஊட்டிஉரை முலைப்பாலில் வியாதியொழிந்திடுமே. (44)

## நாடிபார்க்கும் வகை.

இடுமென்ற நாடிகள்பார்க் கும்வகையைக்கேளு
என்னவென்றால் நடுவிரல் நீவிப்பின்னே
அடுமென்ற அடுத்தவிரல் மோதிரமாம்விரலை
அப்பனே இளுத்தபின்பு சுண்டுவிரலிளுத்து
உடுமென்ற துண்டுவி ரலிளுத்துஅப்பால்
உத்தமொரு அங்குட்ட விரலைநீவிக்கரத்தில்
படுமென்ற ஜோதி அங்குலமோதள்ளி
பார்தடவி மூன்றுதிரம் காம்பார்க்கும்வகையே. (45)

வகைஎன்ன வாதமது ஒண்ணரையாம்பித்தம்
வளமையொன்று அய்யங்கால் வளமாய்நிற்கில்
பகையில்லை நாடிகளுந் தொந்தமில்லை
பண்பான சுகசொரூபக் கூறுசொன்னேன்
இகைஎன்ன மீனமுதல் சிங்கவரைவாதம்
இயன்றகன்னி மீனமுதல் தனுவரைநால்பித்தம்
நகையென்ன கற்கும்ப மிரண்டுமேஅய்யம்
நாடிசெய்யு மாதவகை நயந்தரிந்துகொள்ளே. (46)

## வாத பித்த ஐயத்துக்குப் பத்தியம்.

கொள்ளுவது பத்தியத்தின் வகைகேளுஅய்யா
கூறுவோம் புலத்தியனே குறிப்பதாக
விள்ளுவது புடல்முதலி அரைக்கீரை அவரை
வெண்துவரை மிளகுமஞ்சள் வழுதலைவெள்ளுள்ளி
அள்ளுவது வாதத்தார்க் காம்பித்தத்தோர்க்கு
அகத்திசிறு பயறுதண்டுக் கீரைசிறுகீரை
விள்ளுவது கதலியிளம்பிஞ்சு வெள்ளரிப்பிஞ்சோடு
சீனிகற் கண்டுமல்லி சீரகம்வெந்தயமே. (47)



வெந்தயமு முந்திரிகை பேரீத்து மத்தும்
வெண்பசம்பால் நெய்மோரும் பழமெல்லிவடையும்
கொத்தலவுங் கடுக்காயும் புளியுடனேஏலம்
கொள்ளுசீ ரகமான ஆவாரம்பூச்சம்பா
முந்திவரும் பித்தத்தோர்க் காகுமய்யத்தோர்க்கு
முனிவெள்ளாட் டின்பாலுங் கோதுமைஅரிசி
தந்தகளி கீரைமூலைக் கீரையோடுமச்சம்
தானூறு காய்முதலாய் கருவாடுசாற்றே. (48)

சாற்றுவது மூன்றுதொந்தஞ் சுரங்கள்சன்னி
சன்னிவலி தோஷம்வந்த பேர்க்குங்கேளு
மாற்றுவது அரிசியிலே பொடியருசிகொம்பன்
வரும்வெள்ளை அரைக்கீரை அவரைசிறுகீரை
ஆற்றுவது அவரைமணத்தக் காளிவழுதலையும்
அரமுருங்கை மிளகுமஞ்சள் கருவாடுகோழி
தோற்றுசுண்டை இப்படியே கொண்டாலொதீர்ந்தம்
துயர்நீங்கும் வாசனையில் கோஷ்டங்கஸ்தூரி. (49)

கஸ்தூரி வாசனைக்கு ஒப்பாயுள்ள
கனகமணி லெச்சயத்தின் சுருக்கம்நூறு
கஸ்தூரி யாமகனே வயித்தியத்தில்
சகலவிதச் சார்புகளுஞ் சாற்றக்கேளு
பத்தூரி லிருந்தாலு மொன்றேசூச்சம்
பண்பான நாடிவகை பலியாதொன்றும்
செத்தோரைத் தொட்டோர்க்கும் பிணிகொண்டோர்க்கும்
சிசுவுக்கும் விருத்தருக்குந் தெரியாதென்றே. (50)

## நாடி நிலையில்லாதவர்.

என்னவென்றால் காமிகட்டும் பித்தருக்கும்
இயல்பில்லாத் தரித்திரர்க்குமன்னருக்கும்
அன்னமது மிக்ககொள்வோர் நடையோர்காங்கை
அதிகமுள்ளோர் மூலமுள்ளோர் மேகத்தோர்கள்
துன்னெறியாய்ப் புணர்ந்தபின்பு நாடிபார்ப்போர்
துய்யநீ ரளிவுள்ளோர் பூசையுள்ளோர்
கன்னமிடுங் கள்ளர்கட்கும் வேசைகட்கும்
கரிமாவில் சகஞ்சிவி கையில்மீள்வார். (51)

வாரான திகிலுள்ளோர் பெரியோரையா
    வாதமதாய்க் கனத்தோர்கள் பவுத்திரமுள்ளோர்
தூரமாய்ப் போனமட மாதர்மெத்த
    தூர்க்கோபர் கடுஞ்சொல்லர் சுமைசுமப்போர்
பாரதனில் வருந்திமிக வேலைசெய்வோர்
    பழம்பிணியிற் பழஞ்சோறு அருந்துவோர்கள்
போரத தூதுவர்கள் ஒட்டக்காரர்
    இகபரசா தகயோகி ஞானத்தோரே. (52)

ஞானத்தார் வெண்ணெய்கொண்டோர் தயிர்கொண்டோர்கள்
    நல்லெண்ணெய் இறைச்சிமுதற் கொள்ளுவோர்கள்
ஈனத்தோர் புண்ணுள்ளார் ரத்தத்தோர்கள்
    ஏங்குவோர் மிகமிடியோர் துக்கயினர்
பானத்தே மனதுவைத்துப் பூசித்தோர்கள்
    பாமுடர் சங்கீதம் பாடுவோர்கள்
மீனத்தோர் கலைக்கூத்தர் பாதக்காரர்
    பித்தவகைப் பேர்நாடி ஒடாதென்னே. (53)

## மருந்து கொடுக்கக் கூடாதவர்கள்.

என்னவென்றால் அம்பட்டர் வண்ணாரெண்ணெய்
    ஈட்டிவிக்கு வாணியர்கள் கம்மாளர்கள்
தன்சாறு யக்காரர் குயவர்வேடர்
    தூர்ச்சனர்முன் கோபர்சாஸ் திரங்கள்பாரார்
அன்னமிடா ரபையமுள்ளார் நீதியில்லாப்பாவி
    அக்கிரமர் தன்பெருமை அதிகஞ்சொல்வோர்
கன்னமிடுங் கள்வர்பக்தி யில்லார்வீணர்
    தானிவர்க்கு மருந்துசெய்யக் கருதலாகா. (54)

## வாதம்வரும்வகை.

ஆகாத வாதபித்த சிலேற் பனங்கள்
    அணுகும்வகை சொல்லுவோம் புலத்தியாகேள்
வாகான மலச்சிக்கல் பெருந்தீனியாலும்
    வாழைரசம் பிலாப்பழங்கள் மற்றுமுள்ள
பாகான மலைவாழை மொந்தம்வாழை
    பகருகின்ற கல்வாழை வத்தக்காயும்
சாகாத கத்திக்காய் பாங்கிக்காயும்
    தண்டுடனே வாழைத்தண் டதுவுமாமே. (55)



தண்டாலு மெருமைமோர் தயிரும்வெண்ணெய்
    தத்தியுண்ட வகையாலு முடனேபோகம்
கொண்டாலும் புளிமிகுதி கொண்டிட்டாலும்
    கொள்ளுடனே பெரும்பயறு உளுந்துகூட்டித்
தின்றாலு மழைதனிலே நனைந்ததாலும்
    சிறந்தபனை தென்னங்கள் சேரச்சேர
உண்டாலுங் கொழியருசி உமியினாலும்
    உண்டபின்பு பச்சைவெள்ள முண்டதாலும். (56)

வெள்ளமதில் வெண்ணீர்விட்டுக் கொண்டதாலும்
    மீறுதயிர் புளிக்குமுன்னே உண்கையாலும்
கள்ளர்பூங் குழல்மடவார் போகஞ்செய்யில்
    கனிபூக்கள் பால்பழங்கள் கருதினாலும்
முள்ளங்கி கடலைமொச்சை அவரைமுத்தல்
    முருங்கைமுத்தல் முப்பழம்பால் சோறுபொங்கல்
வெள்ளரிக்காய் செம்மறியும் உடும்புசேர்த்துண்ட
    வீதத்தினால்வாதம் வருகுமெண்ணே. (57)

## பித்தம் வரும்வகை.

எண்ணுபித்தம் வரும்வகைகேள் கோபத்தாலும்
    எக்கிழையை மனம்பிரியா மியற்கையாலும்
துன்னென்ற வெட்டான பழியினாலும்
    துற்கெந்தஞ் சவப்புகையின் சூட்டினாலும்
கண்ணிமையை மூடாத தூக்கத்தாலும்
    கருவியமே வகையாலும் காமத்தாலும்
என்னமில்லா மனஉளைவு வருத்தத்தாலும்
    இராவிற்போ சனமில்லா திருந்திட்டாலும். (58)

இட்டநகை முதற்கொள்ளை போனதாலும்
    எதிராளி பயத்தாலும் மீனஞ்செய்யும்
துட்டதே வதைசாத்தான் அய்யன்பிடாரி
    தூர்க்கைரண காளிகளின் தொடர்ச்சியாலும்
முட்டான பில்லிவஞ் சனையினாலே
    மூதேவி யிடுகருக்கள் முனையினாலும்
அட்டாள தேசநடை அலைச்சலாலும்
    ஆழிகப்ப லேறியே அலைந்ததாலும். (59)

சூலவிஷ மீறியே உறங்கினாலும்
அந்தியிலே தூக்கமில் லாததாலும்
சூலுடனே வயர்பிளக்கக் கண்டிட்டாலும்
துயர்கள்ளர் தீயாலுந் தோஷத்தாலும்
வாலைவய தானபேர் நிமிடத்துள்ளே
மறித்தாலு மக்கள்பெண்டீர் மறித்திட்டாலும்
ஞாலமதில் ராஜசிவ யோகஞானம்
நாட்டத்தி லிருந்தாலும் நாடும்பித்தம். (60)

பித்துருக்கள் சோறுகரி புசித்திட்டாலும்
பேய்மந்திர எந்திரப் பிறிவினாலும்
குத்துகிற வித்தாலுங் கருவியாலும்
கொம்பனையார் மருந்தீட்டுக் குறியினாலும்
சித்திபண்ணுந் தேவதைதள் செயலினாலும்
தீனான அபின்கஞ்சா தின்றிட்டாலும்
சத்தியமே செய்யுகின்ற தோசத்தாலும்
சாந்தகுணப் பெரியோரைப் பழித்தலாலும். (61)

பழியான குரோதங்கள் செய்கையாலும்
பார்மன்னர் கோபத்தின் பயத்தினாலும்
சுழிப்பான நீரோட்டச் செலத்தினாலும்
சூதுசெய்த மர்மங்கள் வெளிப்பட்டாலும்
முழிப்பான நீர்மலக்க ளடக்கையாலும்
மோசஞ்செய் தடைக்கலத்தை முனிந்திட்டாலும்
கழிப்பான குணத்தாலும் வாமத்தாலும்
கண்டபித்த மீறுமெனக் கருதினோமே. (62)

கருதுவதோ மிளகாயுங் காயத்தாலும்
கஞ்சிஉப்பு வெள்ளுள்ளி காரத்தாலும்
மிருதுவாம் வேப்பெண்ணெய் புங்கயெண்ணெய்
விளக்கெண்ணெய் இலுப்பெண்ணெய் எறண்டெண்ணெய்
குருதியாந் தேங்கினெண்ணெய் மிளகுவத்தல்
கொள்ளோமந் திப்பிலியுங் கடுக்காய்மஞ்சள்
உருதியாய் ஆனைக்கொம் பாலுங்கூட்டி
உண்டவர்க்குப் பித்தம்வரும் உண்மைதானே. (63)



உண்மையென்று சித்திபண்ணுஞ் செபத்தினாலும்
உற்றதே வதைகள்தெரி சனத்தினாலும்
திண்ணம்யென்ற பனந்தேங்கு பேதத்தாலும்
திருமலைக் கோபுரத்தின் சிகரத்தாலும்
பெண்மையாய் அறிவுகெட்டுத் திரிந்ததாலும்
பெரியோர் சாபம்துஷ்டர் பழக்கத்தாலும்
கண்மைசூழ் வினையாலும் காலத்தாலும்
கருதுபித்த முண்டாக்கிக் கருதும்பாரே. (64)

## ஐயம்வரும்விதம்.

பாரென்ற ஐயம்வரும் வகையைச்சொல்வோம்
பாலகனே பனியாலும் பலநீராலும்
காலையிலே முழுகாதாலுங் காமத்தாலும்
கருதுமருந் தீட்டாலுங் கருமத்தாலும்
வாலைமோ கினியாலும் வாசத்தாலும்
வண்மையுள்ள சயத்தாலு மருவலாலும்
சாலவே சத்திசெய்யா தவிழ்தத்தாலும்
சற்குணரைப் பழித்ததொரு தோஷத்தாலும். (65)

தோஷரச பானங்கள் கொள்கையாலும்
தூறிமழை நனைவாலுந் தூக்கத்தாலும்
நாசமெலி விஷத்தாலும் ஓட்டத்தாலும்
நாரியர்க ளின்போக மிகுதத்தாலும்
ஆசைகொண்டு வெருமனதா யோசித்ததாலும்
ஆனைக்காய் பரங்கிக்காய் அருந்தினாலும்
தேசமெல்லா மலைந்தாலும் மந்தத்தாலும்
சிலேற்பனமு மிருக்குமெனச் செப்பினேனே. (66)

செப்புவோம் யானைமே லேரிவந்தோர்
ஸ்ரீபோகஞ் செய்திட்டால் ஆடுதீரும்
ஒப்புவோஞ் சிவிகைவந்தோர் தூக்கமானல்
உடம்புக்கு லகுவாகும் உண்மையாக
தப்புபரி யேறுவோர் பாலோடன்னம்
சாதித்துத் தானருந்தி உலாவவேணும்
அப்பனே நடந்தோர்க ளமுதகொண்டு
அசைவான தூக்கமுற லாகும்பாரே. (67)

### மலை நாடு.

பாரென்ற மலையாள தேசந்தன்னில்
பாணிசெய்யுங் குணங்கேளாய் பண்பதாக
சீரென்ற பித்தமுருஞ் சோகையுண்டாம்
சிலேற்பனங்கள் காடாது வாதம்போக்கும்
ஏரென்ற சோம்பலுண்டா மசதியுண்டாம்
இனிவான மேகமுண்டாம் வீக்கமுண்டாம்
பாரென்ற பெரும்பாடு தானுமுண்டாம்
பகர்பாணி பூமியொடு பகர்ந்திட்டோமே. (68)

### தாம்பிரபரணி.

அட்டபாண் டியதேசம் வாதம்பித்தம்
அய்யமொடு மூன்றுக்கு மிடஞ்செய்யாது
சட்டமாம் பூமியிது தாம்பிரபரணி
தான்குளிர்ச்சி குன்மம்போம் மேகந்தீரும்
கட்டதொரு சோகைநீ ரிழிவுதீரும்
சூதகம் வாய்வுசூலை சோகைபோக்கும்
கெட்டகசு ரோய்போகும் குளிர்ச்சியுண்டாகும்
கேட்டிருப்போ மாயிசொல்லச் செப்பினேமே. (69)

### காவேரி.

செப்பினேஞ் சோழனுட தேசச்செய்தி
திகழுவோம் புலத்தியனே கேளுகேளு
வெப்பிவருங் காவேரி பித்தம்போக்கும்
மெய்வலிகள் தீருமே மேகம்போக்கும்
கும்பியிலே வயிற்றுவலி குன்மம்போக்கும்
கொள்ளைமிக குணதேகம் புஷ்டிகொள்ளும்
தம்பிவிரை வாய்வுஅறும் உஷ்ணமேகம்
தான்வருமே உவற்கொள்ளும் தன்மையாலே. (70)

### வயித்தியர் லட்சணம்.

தன்மையாய் வயித்தியர் லட்சணத்தைக்கேளு
சாந்தகுண முள்ளவனாய்ச் சத்தியவானாய்
நன்மைபெருஞ் சிவப்பான மேனியுள்ளோனாகும்
நனுகும்வெள்ளை நிறமுடையோ னாகும்நாட்டில்
தின்மைகருப் புள்ளவனாய்க் கண்குருடுசெவிடு
தீதான கைநொண்டி கால்நொண்டியாகா
உண்மைபெரும் அவயவங்கள் ஒன்றுங்குறைவாகா
ஒதும்பல கலைநூலுந் தெரியானாகா. (71)



ஆகாத குணமுடையோன் கோபிசாலன்
அழகில்லான் குருத்துரோகி அகங்காரமுள்ளோன்
வாகான உயிர்களைத்தான் தன்னுயிர்போலெண்ணான்
வாதமிலோன் வயித்தியத்தில் வழிபாடில்லான்
போகாது உடல்பெலக்கும் யோகமில்லான்
புண்யமிலான் கர்மத்தின் நிவர்த்தியில்லான்
ஏகாத வியாதிக்குக் களங்கம்பற்பம்
இன்பபூ ரணச்செந்தூ ரங்களில்லான். (72)

இல்லாத திராவகம் செயநீர்சுண்ணம்
இன்பாசா யனமெழுகு லேகியங்கள்
உல்லாச மாத்திரைகள் சூரணங்கள்
உயர்வான கிசாயங்கள் சரக்குவைப்பு
சொல்லாத சரக்குவகை உபரசங்கள்
சோதிக்கும் சரக்குமித்திரம் பஞ்சபூதம்
அல்லாத சரக்குக்கட்டு சத்துருமித்துருக்கள்
ஆதிமுப்பு சத்திவகை அரிவாராமே. (78)

ஆமென்ற சரக்குகளின் தொந்தமல்லால்
அந்தந்தச் சரக்குகளின் சுயம்செம்பு
வேமென்ற சவுக்காரம் வழலைப்போக்கு
விபரமுடன் சிதம்பரத்தின் சித்தவேணும்
நாமென்ற அஞ்சனங்கள் ஆக்கிராணம்
நாற்றபிலம் பெண்ணெய்யுடன் நாட்டம்வேணும்
ஓமென்ற பிரணவத்தால் குழம்பும்வேணும்
ஓங்காரோ வசியமோ கனமும்வேணும். (74)

மோகனமுந் தம்பனமுஞ் சாடனமாரணமும்
முன்னான பேதனவித்து வேசனமுமல்லால்
ஆகிருஷ்ணம் அட்டகர்ம மெட்டுவித்தைத்தொழிலும்
அரிந்தவனாய்த் தேவியுட பூசையுள்ளோனாகும்
பாகமாந் தனிக்குணங்கள் நாடிநேர்மை
பகர்மருந்து தானான லட்சணமுள்ளோனாய்
யோகஞானம் புகழ்புத்திமா னாகவேணும்
நட்பசோ திடம்வேணும் அல்லால்பாரே. (75)

அல்லாமல் நிகண்டுடனே சொற்றேவலெல்லாம்
அரியவல்ல மதியனாய் அனைவருக்கும் பொதுவாய்
கொல்லாத சத்திமருந் துள்ளவனாய்க்கொடைகள்
கொடுப்பவற்கு மன்னவர்க்குச் சரியாம்வல்லோனாம்
கல்லாத மூடர்களை அகற்றவல்லோனாய்
காரியத்தால் நட்பிடத்தில் காரியத்தோனாக
நல்லகாரணமுடையோர் தக்கபடியேயாக
நரர்களிலே வயித்தியராய் நாட்டிலறிவோமே. (76)

நாட்டிலே வயித்தியற்கு நடக்கும் வகைகேளு
நலமாக வயித்தியரைக் குருவாகவெண்ணி
வீட்டிலே நிதிவஸ்திர பூஷணமுமல்லால்
நெல்லரிசி தாம்பூலம் பண்டபதார்த்தங்கள்
வாட்டமில்லா தவர்மனது நிறைவாகக்கொடுத்து
மனதிலே பத்திவிசுவாசமாக
கூட்டிலே சுறசுறவு வுயிருமாகி
கொல்லுவோர் வியாதியெல்லாங் குணமாம்பாரே. (77)

குணமாக வயித்தியரைக் கோபித்தேதான்
குறும்பாக அறிவாக விழிவுபேசி
மணமாக நடவாமல் கண்டபின்புறன்று
மறைந்தான பின்புறன்று மாய்ப்பேசுவார்கள்
உணர்வான தன்பணங்கள் பூஷணங்கள்
உற்றநிதி யீயாத லோபியோர்கள்
அணலான நீசருக் காளதாகி
அவர்சாப மனுகிடும்நோய் தீராதுபாரே. (78)

பாரிலே குருசாபந் தெய்வசாபம்
பகர்மாதா பிதாசாபம் பண்பதாகும்
ஊரிலே யிருந்துவயித் தியங்கள்செய்யும்
உத்தமர்கள் மனக்கோபம் ஒழியாதய்யா
வேரிலே வெடித்தகவர் போலேயந்த
மெய்யிலே பட்டுமூன்று வியாதிமிஞ்சி
சீரிலே யவர்மனது கொதிக்கும்போது
செல்லாது நோய்பிணியுந் தீராதெண்ணே. (79)



## வாணிக்கிருதம்.

எண்ணவே வாணியுட கிருதங்கேளு
இளம்பிள்ளை கல்வியில்லா யியல்புக்கெல்லாம்
சொன்னகரி சாலையொடு பிரமிமேனி
சோதியொத்த நல்லகுரு துளசிதோடை
வன்னமுள்ள மாதுளையும் வில்வந்தூது
வளையுடனே நவமூலம் மாட்டிச்சார்வகைக்கு
என்னபடி மாகாணி யாகக்கூட்டி
இன்பநறு நெய்சரியாய்ப் படியாய்வாரே. (80)

வார்த்துமே அடுப்பேற்றி விளக்குக்கு
மஞ்சளுடன் வெள்ளுள்ளி களஞ்சிகாலாய்
பார்த்துமே பாணிவிட்டு அரைத்துப்போட்டு
பதமெழுகில் வடிகலசந் தன்னில்தானே
சேர்த்துமே நாளொன்று ஏழுநாளும்
தேன் துட்டு நெய்துட்ட தாகக்கொள்ள
சார்த்துமே சிலேற்பனத்தைத் தடியினாலே
சண்ணுமே தனல்கொண்டு வாயுந்தானே. (81)

தானென்ற கொன்னையொடு மதலைச்சொற்கள்
சற்றும்அறி வில்லாமல் மயங்கும்புத்தி
ஊனென்ற நாவுணர்தல் உள்ளுக்குள்ளே
ஊடருக்கும் வியாதியெல்லாம் ஒழிந்துபோகும்
தேனென்ற அமுர்தகவி பாடச்சொல்லும்
செகசால வித்தையெல்லாந் தீர்க்கம்பண்ணும்
வானென்ற மதலைகளும் மடையர்ஊமை
வாகுடனே பேசவிந்தக் கிருதம்பாரே. (82)

## பிர்மஞான ரகசியம்.

பாரப்பா பாடிவைத்தேன் பிர்மஞானம்
பண்பாக வடமொழியி லிருந்தநூலை
தாரப்பா புலத்தியனே சொல்லக்கேளு
தன்மையுடன் உனக்காகச் சொன்னேனப்பா
நேரப்பா அநேகம்நூல் முன்புசொன்னேன்
நிச்சயமாய் இந்நூல்போல் பகரவில்லை
சாரப்பா இந்தமுறை பார்த்தனப்பா
தலையறியத் தானுரைத்தார் உனக்காய்ச்சொன்னேன். (88)

சொன்னேன்நான் கலியுகத்தில் இந்நூல்போலச்
சுருதிமறை தானறிந்தால் மூன்றேநாளில்
கண்ணேகேள் நாதாந்தச் சோதிகாண்பாய்
கண்டவர்க்கு இந்நூலைப் பகரொண்ணாது
முன்னேதான் அடிவணங்கிக் கேட்டதாலே
முத்திபெற இவ்வழியைப் புகன்றேன்பாரு
தன்னைத்தான் தானறிய இந்நூல்போல
தாரணியில் சித்தர்கள்தான் புகழமாட்டார். (84)

பாரப்பா பாராலும் புலத்தியனே அய்யா
பதியான பதியதுவும் முக்கோணந்தான்
நேரப்பா உந்தியென்ற சுழிமுனைமீதில்
நிலையான மோட்சகெதி வீடென்றெண்ணி
தேரப்பா மதிரவியை ஒன்றாய்க்கூட்டித்
திருவான பராபரந்தான் எழுத்தென்றெண்ணி
காரப்பா வேதாந்தச் சாரந்தொடுத்துக்
கருணையுடன் விண்ணோக்கி உருவேசெய்யே. (85)

செய்யப்பா மனதடக்கி நிலையில்நின்று
திடமாக மனதொடுங்கிக் குடசலம்போல்
மெய்யப்பா கலங்காமல் நிலையில்நின்று
மேதினியில் மூலஅர்த்தம் தான்வரைக்கும்
வையப்பா கோணலின்றி இருந்துகொண்டு
வருத்தமின்றி மனதைஓர் நிலைநிறுத்தி
கையப்பா அசையாமல் தியானம்செய்தால்
கசடறவே பராபரந்தான் எளிதில்காணும். (86)

காணவே பரவெளியின் பெருமைகாண
கருத்துடனே புகலுகிறேன் புலத்தியாகேள்
ஓமென்ற மந்திரங்கள் ஏதுமில்லை
உறுதியுள்ள அஷ்டாங்க யோகமில்லை
நாமென்ற அக்ஷரங்க ளொன்றுமில்லை
தன்மையுள்ள ஆசையொடு கோபமில்லை
ஹோமென்ற வாசிதனை அடைப்பதில்லை
ஓங்கார மாய்நிற்ப ததுவேநாட்டம். (87)



நாட்டமென்ற காமமொடு கோபம்லோபம்
நன்மையில்லா ஆசையொடு பாசம்பாசம்
தேட்டமென்ற அறுபத்து நாலுயோகம்
திறமான தர்மமொடு அதர்மமில்லை
தாட்டிகமாய்த் தவமது சிவபூசையில்லை
தன்மையுள்ள புராணங்கள் வேதமில்லை
வாட்டமில்லா பிர்மமதை மனதுள்கொண்டு
வளமாக நிலைநிற்ப ததுவேநாட்டம். (88)

அதுவென்ற பிர்மமதை அறிந்துகாண
அப்பனே நாசிநுனி தன்னிலேதான்
கெதியான நாற்றிருபத் தெண்ணூறுவாசி
கேசரத்தில் அமரும்போது பிர்மமென்றும்
விதியான ரேசக பூரகமாய்நின்று
விள்ளுதடா பிர்மம்நான் பிர்மமென்றும்
கெதியான வாசிபனி ரெண்டைப்பற்றிக்
கூர்மையுடன் தானிருப்ப ததுவேபிர்மம். (89)

பிர்மமென்று எண்ணிநீ நிலையில்நிற்கப்
பிசகாமல் குருவினுப தேசம்வேணும்
தர்மமென்று பனிரெண்டு ஆண்டுதொண்டு
தான்செய்தால் குருவுமுப தேசம்செய்வார்
வருமையுடன் புலத்தியரீ கேட்டதாலே
வழுத்தினேன் உபதேச மார்க்கந்தன்னை
கர்மமென் றெண்ணிநீ வெளிவிட்டாக்கால்
கட்டாகச் சாபமது இடுவோம்பாரே. (90)

பாரப்பா முன்சொன்ன வியாம்போலே
பதிவாக நின்றாக்கால் பிர்மமாச்சு
நேரப்பா நின்றிலங்கும் சடங்களெல்லாம்
நீங்காமல் பார்வைக்குப் பூதமாச்சு
சாரப்பா பூதத்தை ஏவல்வாங்கும்
தருவான ஆதிகுரு தாளைப்பற்றி
காரப்பா மனதொடுங்கி நிலைநின்றாக்கால்
கண்காணு பரவெளியில் கலப்பாய்தானே. (91)

தானென்ற சுழிமுனையின் சோதியைத்தான்
தன்மையுடன் சொல்லுகிறேன் மைந்தாகேளு
கோனென்ற ஆதாரம் மேலாதாரம்
கூர்மையுடன் ஆரறிவார் உலகமாந்தர்
சானென்ற தன்புலனை ஒடுக்கிமைந்தா
சரியாகப் புருவமிடை வெளியிலேதான்
நானென்ற உச்சிஉண் ணாக்கின்மேலே
நன்றாகப் பார்த்துநீ பூசைபண்ணே. (92)

பண்ணப்பா ஓம்நமசி வாயாவென்று
பதிவாக நிலைநிறுத்திப் பூசைசெய்தால்
விண்ணப்பா நிறைந்தவொரு ஆதிஜோதி
விளங்குமடா கண்டுநீ பூசைசெய்தால்
கண்ணப்பா சாயுட்ச பதவிபெற்றுக்
கருவான பிறப்பிறப் பற்றுநீயும்
உண்ணப்பா உள்நாக்கின் வெளியில்நிற்க
உகந்தபற்பா சனமேலே பூசைசெய்யே. (93)

செய்யப்பா அருவுருவில் லாதசோதி
சின்மயமாய் உந்தனையும் இழுத்துக்கொண்டு
கையப்பா அமுர்தமதை ஊட்டுவிக்கும்
கருணையுடன் பெரும்பாழ்தன் வெளியிலேதான்
செய்யப்பா எண்பத்து நான்குநூறாயிரம்
சீவசெந் துக்களிலே தானாய்நின்று
மெய்யப்பா ஆட்டுவிக்கும் சிவத்தினோடே
மேன்மையுடன் தான்கலந்து இருப்பாய்தானே. (94)

## மௌன பூசை.

தானேதான் தானவனாய் நிற்பதற்குத்
தன்மையுடன் இன்னுமொரு சூட்சங்கேளு
கோனேகேள் மௌனமதின் பூசைசெய்யக்
குறிப்புடனே சொல்லுகிறேன் புலத்தியாகேள்
தானேதான் பிராணியா இடமிருந்துகொண்டு
தன்மையுட னிடதுகையில் பூதிவைத்து
மானேகேள் கற்பூரம் ஏற்றிவைத்து
மகிழ்ச்சியுடன் தீபமதை நன்றாய்ப்பாரே. (95)



பாரப்பா தீபமதை நன்றாய்ப்பார்த்துப்
பத்தியுடன் பூதிநா ளிதமாய்ப்பூசி
நேரப்பா வடகிழக்கு முகமாய்க்கொண்டு
நீமகனே முன்போல பூதிவைத்துக்
காரப்பா கருணையுடன் வலதுகையில்
கசடறவே ருத்திராட்ச மணியைவாங்கி
சேரப்பா கற்பூர தீபமேற்றித்
திருவான வாசியைத்தான் மேலேநோக்கே. (96)

நோக்கிநீ பார்ப்பதற்கு மந்திரங்கேளு
நுண்ணறிவாய் ஓம்றீங்றீங்றீங் சிவசிவவென்று
வாக்கியமாய் நாளொன்று நூற்றிஎட்டு
வகையாகச் செபித்துநீ வாசிபார்த்தால்
பாக்கியமாய்த் திங்களொரு மூன்றுக்குள்ளாய்ப்
பஞ்சவடி வானவள்தன் செயலைக்காண்பாய்
தேக்கியமாய்க் காடுமலை அலையவேண்டாம்
திருவான திரேகமதின் சுழியில்நோக்கே. (97)

## நாற்பத்துமூன்று மூக்கோண பூசை.

நோக்கடா நோக்குதற்கு இன்னுங்கேளு
நுண்ணறிவைத் தன்னிடத்தில் நிலைநிறுத்தி
தாக்கடா எட்டுமெண்டும் ஒன்றாய்க்கூட்டித்
தன்மையுடன் தானோதச் சோதியாகும்
வாக்கடா எட்டுரெண்டும் கூடியல்லோ
வலமான திறவுகோலாய் ஆச்சுதப்பா
தேக்கடா திறவுகோலால் திறந்துகொண்டால்
சின்மய சோதிதனைக் காணலாமே. (98)

காணலாம் சின்மயமாய் நின்றவாலை
கனிந்துநீ மனதறிவின் கனிவினாலே
பூணவே வாசியினால் கருவைப்பற்றிப்
புகழ்ந்துநீ நிலையறிந்து பானங்கொள்ளு
தோணவே அருசுவையும் நிலைதப்பாது
சொல்லவொண்ணா அடிமூலம் கணேசன்சத்தி
காணவே அடிமூலம் ஆதியந்தம்
கண்ணறிந்து சிறீங்கென்று ஓதிடாயே. (99)

உதியதோர் காளிகையில் புலத்தியாகேள்
ஓங்கார விஞ்சையவள் நவகோணத்தில்
ஆதியந்த மில்லாத ரூபத்தோடே
அண்டசரா சரமெங்கும் நிறைந்துநின்று
சோதிமய மாகவேதான் நடனஞ்செய்வாள்
சொல்லவொண்ணா நடனமதைத் தியானஞ்செய்து
ஆதியுடன் வாழ்வதற்கு மௌனத்தாலை
அப்பனே மனதறிவால் மதிகண்ணென்னே. (100)

கண்ணான கண்மணியே ரூபாரூபி
கண்ணிறைந்த கமலதிரி சூலிவாமி
முன்னான பூரணமே கமலத்தாயே
முதலான கண்மணியே அருமைத்தாயே
ஒன்னான பூரணந்தான் என்னுருந்தான்
ஓமென்ற மூலமந்திர சத்திமாயே
விண்ணான விண்ணிறைந்த ரூபாரூபி
வேதாந்த தோத்திரமாய் விளங்குந்தாயே. (101)

விளங்கிநின்ற மோனமந்திர விவேகத்தாயே
வெற்றிதரும் சமர்முனையின் ரூபாரூபி
முளங்கிநின்ற மோனமந்திர ரூபத்தாயே
முத்திதரும் மூலமந்திர சத்திதாயே
தலங்கனிந்த தடமதிலே நின்றதாயே
சத்தியமாய் நின்றசிவ சத்திமாதே
கலங்கமில்லா ஆதியந்த வடிவுமாகி
கண்ணின்மணி மணியாகி நின்றமாதே. (102)

மாதென்று எண்ணிநீ தியானம்செய்து
மகிழ்ச்சியுடன் விள்ளுகிறேன் மைந்தாகேளு
வாதென்ற உள்ளமதைத் தினமுமைந்தா
வழுவாமல் உருமைவைத்துப் பார்த்துக்கொண்டு
நீதில்லாப் பரஞ்சோதி ஆத்தான் தன்னைத்
திடமறிந்து அறிவதனால் கண்டுகொண்டால்
வாதென்ற கூற்றுவனும் ஓடிப்போவான்
வடிவான சடாக்ஷரத்தின் விஞ்சைகேளே. (103)



## சடாக்ஷர விஞ்சை.

கேளப்பா புலத்தியமா ரிஷியேஅய்யா
கிருபையுடன் சடாக்ஷரத்தின் பெருமைதன்னை
ஆளப்பா ஆரறிவார் உலகமாந்தர்
அப்பனே சடாக்ஷர விஞ்சைசொல்வேன்
காளப்பா மூலமடா வடிவுமாச்சு
கருத்தாய்ப்பார் றீங்காரம் வேலுமாச்சு
நாளப்பா வடிவேலர் மந்திரந்தன்னை
நாட்டமுடன் ஓம்றீங்கு என்றுயெண்ணே. (104)

எண்ணிநீ பூரணமாய் நின்றுகொண்டு
ஏகமான கேசரத்தில் வாசமாகி
நண்ணியே ஓம்ரீங் வசிவசியென்று
நாட்டமுடன் தானோத வசியமாகும்
உண்ணியே ஓம்றீங் நசிநசியென்றால்
முனைந்துவந்த பீடைஎல்லா மாண்டுபோகும்
முண்ணியே ஓம்றீங் மசிமசியென்றால்
முட்டிநின்ற விஷமெல்லா மகண்டுபோகும். (105)

போமப்பா சடாக்ஷரப் பெருமையாலே
புத்தியுடன் விந்துவட்டம் நன்றாய்க்கீறி
ஆமப்பா மூலைநாலு சூலம்போட்டு
அப்பனே சூலமுனை ஓங்காரம்காட்டி
தாமப்பா வட்டத்தின் உள்ளேநன்றாய்த்
தன்மையுடன் ஓங்காரம் மூன்றும்நாட்டி
நாமப்பா மேல்ஓங்கா ரத்தில்நன்றாய்
நன்மையதாய் மகாரமதை நாட்டுநாட்டே. (106)

நாட்டப்பா நடுவான பிரணவத்தில்
நலமாகச் சிகாரமதை நாட்டிப்பின்னும்
தேட்டமில்லாக் கீழான பிரணவத்தில்
திடமாக நகாரமதை நன்றாய்ப்பூட்டி
வாட்டமில்லாச் சக்கரத்தை அபிஷேகித்து
வணக்கமுடன் மசிநசி நசிமசியென்று
தாட்டிகமாய் வீரஞ்சு ஆயிரத்துஎட்டு
தன்மையுடன் தான்செபிக்கச் சித்தியாச்சே. (107)

ஆச்சப்பா பதினுயிரத் தெட்டுசென்றால்
அப்பனே சக்கரமும் உயிராய்ப்போச்சு
மூச்சப்பா பேய்கணங்க ளெல்லாமோடும்
முடுகிநின்ற விஷமெல்லா மலறிஓடும்
போச்சப்பா மெய்யிலே தியானம்செய்து
பூதியை மானிடர்க்கு ரெக்ஷித்தாக்கால்
பாச்சப்பா பாய்ந்துநின்ற வியாதியெல்லாம்
பதிவிட்டு அலறியே ஓடும்பாரே. (108)

ஓடுவது மந்திரத்தின் பெருமைதன்னால்
உத்தமனே இதையறிந்து மௌனமாக
தேடுவது பரஞ்சோதி பாதம்தன்னை
தினந்தினமும் தொழுதிரைஞ்சி வணங்கிநில்லு
கூடுவது பெரியோர்கள் சனத்தைப்பற்றி
குணங்கெட்ட துரோகிகளுக் கீயொண்ணாது
சாடுவது உந்தனுக்குத் தொண்டுஎன்று
சண்டாளர் சார்ந்திடுவார் யீயாதப்பா. (109)

ஈயாதே இந்நூலை மற்றோர்கட்கு
என்மகனே புலத்தியமா ரிஷியேஅய்யா
சாகாக்கால் வேகாத்தலை யறிந்தபேர்க்குத்
தன்மையுடன் தானுரைப்பாய் சொன்னேன்பாரும்
வாயாதே இந்தநூல் மற்றநூல்போல்
வழுத்தவொண் ணாதஒரு நூல்தானென்று
தோயாத பராபரந்தான் எனக்குச்சொன்னார்
தொடுகுறிபோல் மைந்தனென் றுரைத்தேன்பாரே. (110)

உரைத்தேநான் பிர்மஞான ரகசியத்தை
உள்ளபடி நடந்தாக்கால் அவனேபிர்மம்
மறைத்தேநான் சண்டாளர்க் கிந்தநூலை
மகிழ்ச்சியுடன் மற்றவர்க்கு யீயொண்ணாது
கரைத்தேநான் இந்நூலை மனதில்கொண்டு
கர்மவினை யோடிடவே கடத்தில்நின்று
உரைத்தேநான் ஓங்காரச் சுழியில்நின்று
உத்தமனே இதையறிந்து சுழியில்நில்லே. (111)



நில்லடா சுழி தனிலே நினைவாய்நின்று
நிசமான பூரணத்தின் நிலைகண்டோர்க்கு
ஒல்லென்ற சததீக்ஷை கடாக்ஷம்பண்ணி
உத்தமனே பூரணமு மவனுக்கீய்ந்து
செல்லென்ற சாஸ்திரசூஸ் திரமுமீய்ந்து
தெளிவான மந்திரத்தின் சூக்ஷங்காட்டி
சொல்லவொண்ணு ஆதாரம் ஆராதாரம்
சொரூபமென்ற அனுக்கிரக உண்மைசொல்லே. (112)

சொல்லான சொல்லதுவும் ஹரிஓம்என்று
சொருசாகச் சொல்லையிலே தொட்டுக்காட்டு
நல்லாகத் தெரியாட்டால் கையைக்கொண்டு
நலமுடனே தீர்த்தித்தால் குணமாய்க்காட்டி
சொல்லான சொல்லதுவும் அம்பார்பூட்டிச்
சுகமுடனே தெரியாட்டால் செவியில்காட்டி
விள்ளாத பரம்பொருளை விண்டுகாட்டும்
வேதாந்தப் பரம்பொருளின் கனகமுற்றே. (113)

கனகமணி முற்றிற்று.

உ

பரமபதி துணை.

அகத்திய மகாமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# வைத்தியக்கோவை 125.

காப்பு.

வார்கொண்ட கொங்கை யபிராமி பாத மதைநினைந்து
பேர்கொண்ட நோய்கள் தனக்கேயெமனெனப் பேருலகில்
ஏர்கொண்ட மாந்தர்கள் யீடேறத் துன்ப மதுவிலகச்
சீர்கொண்ட ஐங்கரன் பாதார விந்தஞ் சிறக்குமினே. (1)

### கபாடம்.

சிறக்குந் திரிகடு கோமங்கி ராம்புகற் சித்தரத்தை
கருக்குஞ் பொன்னு வரைவே ரணபேதிக் கடற்பழமும்
சரக்கெனுஞ் சாதியின் காய்பெருங் காயமுந் தான்பத்தொன்றும்
நிறக்கும் வகைக்கு வகைதான் விராகன் நிறுத்துச்சொல்லே.(2)

சொல்லும்வெள் ளுள்ளி பலமொன் றரையது தோல்விலக்கி
மல்லிய வெற்றிலைக் காம்பு விராகன் மருக்கொள்ரெண்டாய்
மெல்ல வருத்ததை யெல்லா மொன்றாக்கி மிகவுமைபோல்
கல்வி லரைத்ததை வெற்றிலைக் குள்ளிட்டுக் கட்டிவையே. (3)

கட்டிய வெற்றிலை வேணமட்டுக் தீயிற் காட்டியப்பின்
வெட்டி யரைத்து அயப்புடம் போட்டு மிகவுநன்றாய்க்
கெட்டி மெழுகு பதமான போதினிற் கிள்ளிக்கிள்ளிச்
சட்ட முடன்சிறு சுண்டையின் காயெனத் தானுருட்டே. (4)

உருட்டி நிழல்கண்டு பின்னைந்து காளதை ஒவ்வொன்றதாய்ச்
சுருட்டி வெந்நீரி லதையுண்ணப் பேதிகள் தொங்கிடுமோ
மருட்டி வரும்ரத்த மூலக்கி ராணி வயிற்றெரிச்சல்
அருட்டிய பத்து வருடத்துப் பேதியு மஞ்சிடுமே. (5)

அஞ்சிடு மூவகை தோசதி சாரமு மாசனத்தில்
துஞ்சிய சிய்குத்து ரத்தக் கடுப்பு தொடுத்ததெல்லாம்
கெஞ்சி யகன்றிடும் நில்லாது தூரக் கிளம்பிவிடும்
மிஞ்சிய அம்பியும் கூடக் கழுவி மிகக்குடியே. (6)

### வெள்ளைக் கடுப்புக்கு.

குடிமேஷப் பாலொரு மிச்சங்காய்க் கட்டுக் கொடியினுட
அடிமூலந் தன்னை அரைத்தொரு முத்தின மாகவுண்டால்
துடிமீறு மேகக் கடுப்புடன் வெள்ளையும் தூரப்போகும்
மூடிநீர்ப்பூ லாங்கொழுந் தப்படி யுண்ண முறையிதுவே. (7)

### வாய்வுக்குன்மத்துக்கு.

முறைரசங் கெந்தி பெருங்காயங் காந்த முதியலிங்கம்
அரைபொடி கூட்டிச் சரிநிறை யாக வரைப்பதுகேள்
கரைமகள் கன்னிதன் மாமிசந் தன்னில்நீ காட்டிவில்லை
இரவியிற் காய்ந்து மருந்துமவ் வண்ண மெடுத்தரையே. (8)



யெடுத்தரைத் தேவில்லை கட்டி ரவியினில் வீரமெல்லாம்
விடுத்தாக் காய்ந்தபின் யெக்கெந்த வாய்வு வெகுசனிக்கும்
மடுத்திடுங் குன்மங்க ளெட்டுக்குங் குட்ட மனைத்தினுக்கும்
கொடுத்திடும் ஓர்பணந் தேன்திரி கடுவிற் கொண்டிடவே. (9)

### பௌந்திரத்திற்குச் சுடர்த் தைலம்.

கொண்டிடுங் கால்மண் டலமிரு நேரங் குடிலமில்லை
விண்டிடு மேனியும் பொன்னிற மாமிதை விட்டுமொன்று
கண்டிடுங் கெந்தி ரசமரி தாரமுங் கண்டருடன்
மண்டுங் கொடுவேலி துத்தந் துருசு மனோசிலையே. (10)

சிலையுடன் ரெண்டு வராகன் வகைவகை சேர்ந்தகெந்தி
அலைவா வாறு வராகனுங் கூட்டிகல் லாலின் நெய்யை
நிலைபெற விட்டரைத் தானபின் சீலையில் நீதிரித்துத்
துலைவரத் தீபங் கொளுத்திநெய் யூற்றச் சுடர்விழுமே. (11)

விழுங்கின் னியில்நெய்யை வாங்கிப் பணவிடை வெற்றிலையில்
முழுங்கிடுங் காலமண் டலமிரு நேரம் மொழிப்புண்கட்டு
அழுங்குறை குட்டம் வெடிசூலை மேக மரிகிரந்தி
கிழங்கறப் போகும் புளியுப்பு தன்னையும் கிழேதள்ளே. (12)

### மூலக்கிராணிக்கு.

தள்ளிய மூலக்கி ராணி பவுத்திரந் தானகலக்
கொள்ளுடன் சித்திர மூலம் வறுத்துக் குறுகனேர்ந்து
துள்ள யிடித்ததை யுள்ளுக்குக் கொள்ளு தொடுத்தைந்துநாள்
அள்ளி வகைக்கு வகைவீதங் காற்பல மாகவுமே. (13)

### தாமிரச் செந்தூரம்.

ஆகும் ரசம்வெள்ளை யொவ்வொன்று தூக்கி யுதபத்தைந்து
ரேகு மரிபெண் கெந்தி மனோசிலை நிறையுமும்மூன்
றேகம தாகப் பொடிநீறு பண்ணி யெருக்கலம்பால்
வாகுடன் விட்டுப் பிசறிக் குகைதனில் வைத்துபினே. (14)

வைத்தபின் சீலைமண் செய்தே முழப்புட மாட்டியன்பாய்
மொய்த்த திரிகடு கோமமோ டொக்கவு மூட்டுதற்கு
கைத்த பனைவெல்லம் சீனிகற் றேனில் காட்டியொன்றாய்
கைத்த விஷமடி யோடட்ட குன்மங் களன்றிடுமே. (15)

கழன்றிடும் யீளை யிருமலு மந்தார காசமுதல்
கழன்றிடும் வாயு பொருமலும் போய்விடுஞ் சோம்பலுமே
அழன்றிடு நெஞ்சு வலிகுத்து நோயு மகன்றுவிடும்
வளம்பெறு பத்திய முப்பிட்டுக் கொள்ள வரிசையிதே. (16)

### ஆனந்த வாய்வுக்கு.

வரிசைப் படியுள்ளி தோல்போக்கி யோர்பலம் வஸ்துவினால்
சிறுகச் சிறுகச் சுருக்குக் கொடுத்துச் சிவந்தபின்பு
பிரிசப் படிதின் றரைக்காற் படிவஸ்து பின்னை யுண்டால்
குறுகப் பிடிகுத்து ஆனந்த வாய்வுங் குலைந்திடுமே. (17)

### விப்புருதி கெண்டைக்கு

இடுகள்ளிப் பாலு மெருக்கலம் பாலு மிதனுடனே
படர்து துவளம் பழம்பிடி கூட்டிப் பழமுதலாய்
அடர்தென்னங் காய்க்கு ளம்பித்து ஆப்பிட் டடைத்துநன்றாய்
புடமிடு தோடது வெந்திடப் பார்த்துப் பொருந்தியெடே. (18)

பொருந்தியெடுத்தரைத் தேகொட்டைப் பாக்கது போலுருட்டி
அருந்திடு வாயொரு நேரத்துக் கோருண்டை யஞ்சு தினம்
இருந்து வளர் விப்புருதி யுங்கெண்டை யிடஞ்சலுற்றுக்
கரைந்து கரைந்தபின் பேதியுங் கண்டு கசடறுமே. (19)

கசடற நாளுங் குடித்தவன் றேயுந்தன் கைமுறையாய்
அசடில்லை யெந்த நோவுக்கு மாமிது அசதிகண்டால்
இசைபெற நீரில் முழுகிப்பின் மோரன்ன மெத்தவுண்டு
கசடில்லை பித்தமும் நெஞ்சிலில் லாமற் கழிந்திடுமே. (20)

### சூலைக் கடுப்புக்குப் பொடி.

கழியாத சாதிக்காய் சாதியின் பத்திரி கிராம்பபினி
விழியா வகைக்கு வகைகால் விராகன் வெதுப்பிக்கஞ்சா
ஒழியாம லீரெட் டிடையும் வெதுப்பி யுடன்கலந்து
சுழிவாய்ப் பொடித்துணு சூலைக்கடுப்பு தொலைந்திடுமே. (21)

### அதிசாரக் கிராணிக்கு.

தொலையாத யிந்துப்பு ஓமங்கி ராம்புடன் சுண்டைவற்றல்
அலையாத சாதியின் காய்சாதிப் பத்திரி அபினிலிங்கம்
கிலையாத காந்தம்நற் சீரகமேலந் திரிகடுகு
மலையாதி லவங்கந் தான்கருஞ் சீரக மாங்கொட்டையே. (22)



மாங்கொட்டை யோடதி விடையம் வகைக்கு வராகனொன்று
தாங்கிட்ட கோரக்கர் மூன்னே பதினெட்டுந் தான்சமனாய்ப்
பாங்கிட்ட லிங்கமுங் காந்தமுஞ் சுத்தித்துப் பக்குவமாய்
ஓங்கிட் டதைவருத் தேபொடி யாக்கி யுறவுசெய்யே. (23)

செய்தபின் சீனி பலமூன்று தன்னுடன் தேனுமுக்கால்
உய்தபின் கொட்டையின் பாக்களவாக உருட்டிநன்றாய்க்
கைதவ திளவெந் நீரிற் கொள்ளக் கழிச்சலுண்டோ
கைதிடு மிந்ததி சாரமுங் கிராணியு நடுங்கிடுமே. (24)

### குன்ம மகோதரத்துக்கு.

நடுங்கும் ரசம் பொரி காரமுங் கெந்தியும் நாபியுடன்
மடங்குந் திரிகடு காந்தேவ தாரம் வகைநிறைக்கு
விடங்கொடு வாளம் படுபாதி கூட்டி மிகவுநன்றாய்
அடங்குங் கரிப்பான் தனிச்சாறு விட்டொக்க அரைப்பதுவே. (25)

அரைரெண்டு சாமம் விடாமலே மைப்போ லரைத்துநன்றாய்
நிறைகுன்றி மட்டது வாயுண்டை கட்டி நிழலில்வைத்து
உஷ்ணகெண்டை வாய்வுஷ்ண குன்ம மகோதர மோடிவிடும்
கரைகண்ட தில்லை வெகுநோய்க் கெமனெனக் கண்டுகொள்ளே. (26)

### மண்டை யிடிக்கு.

கொள்ளுங் கொடிவேலி வேர்த்தொலி யோர்பலம் கோதறவே
அள்ளுங் குமரியின் வேர்ச்சாற்றி லாட்டியூ மத்துடனே
உள்ளநல் லெண்ணெய் படிவிட்டுக் காய்ச்சி யுடன்முழுகத்
தள்ளு கபாலத்திற் குத்தும் வலியுந் தகர்ந்திடுமே. (27)

### காப்பன் வாய்வுக்கு.

தகர்ந்த விந்துப்புக் கருஞ்சீரகமும் தனிவசம்பும்
உகந்த திரிகடு கோடொக்க வாளமும் ஓடுதள்ளி
பகர்ந்த வகைக்கு விராகனு மொன்றரைப் பண்புசெய்து
அகந்தந்த யீருள்ளி பலமொன் றரையுந் தூக்கிவிட்டே. (28)

தூக்கிய நெய்படி முக்காலுங் கூட்டித் துவளவிட்டுத்
தாக்கி யடுப்பிற் பதங்கண்டு காய்ச்சிச் சதிருடனே
நாக்கினில் வைரெண்டு காசிடை நாள்கண்ணி யுண்டிடவே
போக்கிட மில்லை காப்பனும் வாய்வும் பொடிபடுமே. (29)

## வெள்ளைக்கு.

பொடிபடு மோருடன் சோறுண்ணப் பத்தியம் பொய்யிலைகாண்
துடிபெரு வெள்ளையின் மேகந் தனக்கினிச் சொல்லமுக்காற்
படிகள்ளிப் பாலரைக் காலதி லீருள்ளிப் பச்சையின்சார்
வடியதில் நெய்யிடை நாங்குழ நாலு வராகனுமே. (30)

வராகனும் வாளந் தொலிமுளை போக்கி மடங்கரைத்துப்
புராதன நெய்யுட னொன்றாகக் காய்ச்சிப் புகழ்ந்தெடுத்துத்
திராரெண்டு காசிடை அண்டக் கருவினிற் சேர்த்துமுண்ண
அராதிரு வெள்ளையும் மேகங் கிரந்தி யகன்றிடுமே (31)

## மூலவாய்வுப் பொருமலுக்கு.

அகன்றிடும் பத்திய மோருப்புக் கூட்டிடி லச்சமில்லை
விகன்றிடு மூலத் திறைச்சல் வாய்வுக்கும் விளைபிரண்டை
நிகன்றநா ளுழித் தகன்றிடு முப்புரி தேர்ந்தெருமை
துகன்றநன் மோரது நாளுழி தன்னிற் சுவறவையே (32)

சுவறவைத் தாறிப் பொடியாக்கிக் கொண்டபின் சுக்குடனே
சவறனை யோமம் பெருங்காயந் திப்பிலி தான்மிளகு
அவசியம் ரெண்டு விராகன் வகைக்கு அதைவறுத்துச்
சிவமதுக் கேற்கப் பொடிபண்ணிக் கற்கண்டு சேருரியே (33)

சேர்த்துவை முப்பொடி பிற்பொடி கற்கண்டு சேர்த்தபின்பு
பார்த்திது மாகவும் நற்றே வெருகடி பத்தியுண்ணக்
கார்த்திடு மண்டல முண்டான நோயுங் கனபொருமல்
ஏத்திடும் வாய்வும் பயந்தோடிப் போமது என்றைக்குமே. (34)

## கண் வியாதிக்கு.

என்றைக்கும் நீர்கசி வுண்டாய்த் திணவுற் றிடுவிழிக்கு
வன்றிக்க நன்மடல் துத்தம் பொடிசெய்து வட்டியிலே
கன்றித் திலுமிச்சம் பழச்சாறு விட்டுக் காவிச் செம்பால்
தொன்றித் தரைத்தரைத் தாவெண்ணெய் கூட்டித் துடிபெறவே. ()

துடிபெற நாள்ரெண்டு தானரைத் தானபின் சோதனைக்கு
வடிவுடன் கண்ணி லெழுதிடு மண்டலம் வாழ்விழியாய்
கடுகுமே வித்தழை வெந்தயம் வெண்ணெய் கனவில்வெந்து
குடியொரு மண்டல மிப்படிச் செய்யக் குருடில்லையே. (36)



குருடில்லை உப்புடன் புளியும் விலக்கிக் கொள்ளமட்டும்
மருவில்லை கண்ணினில் மாசியு மில்லை மருந்தொன் றுகேள்
பெருகும் பொன்னாங் காணி வேருந்தளையும் பிடுங்கிவந்து
முருக வரைத்துக் கிலந்திற் கலம்வைத்து முழுக்குமையே. (37)

முழுக்குமை யாவெண்ணெய் யாலே நன்றாக முதிரவதை
இளக்கிச் சிமிழி லெடுத்துவைத் தேயின் னிழிவிழிக்குப்
பழக்கி விழியி லெழுத விண்மீனும் பகல்தெரியும்
விளக்கந் தருமிக மாலைக்கண் தீர்ந்திட விள்ளுவனே. (38)

## மாலைக் கண்ணுக்கு.

விள்ளும் பருத்தி யிலைச்சார் மிளகுக்கு விட்டரைத்துத்
துள்ள வுருட்டி யுரைப்பாய் மாலைக்கண் துலங்குமின்னம்
உள்ள படிசுக்குத் திப்பிலி தேனி லுரைத்துவிட்டால்
கள்ள மறும்பல நேத்திர வியாதிக்குக் காலனிதே. (39)

## வெள்ளெழுத்திற்கு.

காலையிற் தும்பைப்பூ திப்பிலிப் பூவுடன் காரெள்ளுப்பூ
சாலைப் புளியம்பூ நந்தியா வட்டப்பூ தானிதைந்தும்
மாலையிற் றேன்விட் டரைத்து விழிக்கிடு மாசிவெள்ளை
போலவும் வெள்ளெழுத் தெல்லா மகன்றிடும் போக்கிதுவே. (40)

## மகோதரத்துக்கு.

போக்கு மகோதரம் வாயுவு தீரப் புகலுகிறேன்
பாக்குட னேகடுக் காய்வகைக் கஞ்சு பருமிளகாய்
தூக்குநீ மூணு சிவதையு மாறுந் தொடுத்தசுக்கும்
வாக்குறுந் திப்பிலி காயங் கடுகு மகிழ்ந்துப்பே. (41)

இந்த நல்லோமம் விடைய மாத்தை யிதுவகைக்கு
முந்தவும் ரெண்டுநற் காந்த மரைபொடி மூலமுடன்
வந்திடுந் திப்பிலி மூலமுங் கூட்டி வலுக்கநன்றாய்ச்
சந்தய மின்றி வறுத்துப்பின் மற்றதைச் சாற்றுவனே (42)

சாற்றிடுங் காயங் களிப்பாக்கு மூலமுந் தான்கடுக்காய்
ஏற்றிடும் பச்சை யிந்துப்பைச் சேர்த்திடு மிதிற்சிவதை
தேற்றிடும் பாவி லரைபொடி யெண்ணெய்யிற் செய்துசுத்தி
மாற்றிடு காந்தத்தைக் காடியின் மோரினில் மாட்டிவையே. (43)

மாட்டியே சுத்தித்து ஒன்றாகச் சேர்த்து மழுக்கிநன்றாய்க்
கூட்டிப் பொடியை வடிகட்டிக் கொண்டு கொடுவெந்நீரில்
மீட்டி வெருகடி யுள்ளுக்குக் கொள்ளவும் நீக்கமுண்டோ
நாட்டினில் மண்டலந் தள்ளாமற் கொள்ள நலந்தருமே. (44)

## சோகைக் காமாலைக்கு.

நலந்தருங் காயம தொன்று அரைபொடி நாலுடனே
குலந்தருங் காந்தமு ரெண்டோம மஞ்ச கொடுவேலிமுன்
சலந்தருந் திப்பிலி சுக்கு மிளகுடன் சாரணைவேர்
நிலந்தனி லிவ்வகைக் கேவகை மூன்று நிறுத்திடுமே. (45)

நிறுத்து முன்போலச் சுத்திசெய் மருந்தை நிறைப்படியே
வறுத்துப் பொடிகரிப் பான்சாற்றி லூரிநீ வாங்கியுண்ணப்
பெருத்திடுஞ் சோகைகள் காமாலை யென்றிடப் பேருமுண்டோ
திருத்த முடனுமைக் கீசருரைத்த திறமிதுவே. (46)

## சீதக்கடுப்பக்குச் சிந்தாமணி.

திறமிது வாகக் கிராணிக் கபாடத்தைச் செப்புகிறேன்
உறமிகு சுக்கு மிளகுடன் திப்பிலி வோமமுமே
அறமிகு சாதியின் காய்சாதிப் பத்திரி அதிவிடையம்
விறவு கிராம்பக் ராக்கார மும்மிக்க விராகனென்றே. (47)

ஒன்று மபினி யதனில் விராக னுறவுசெய்து
சென்றிலு மிச்சம் பழச்சாற்றி லாட்டிப்பின் தேற்றுப்வித்து
குன்று தளவிடை செய்தே நிழலிட்டுக் கொண்டெருமை
நன்றாந் தயிரி லிடச்சீத ரத்தம் நடந்திடுமே. (48)

## குளிர் சுரந்தீர.

நடந்திடு நாவி ரசமும் வகைரெண்டு நல்லலிங்கம்
அடங்கிடுங் காயமுந் திப்பிலி யோடு அதிமதுரம்
இடந்த வகைக்கு வகையொன்று கூட்டி யெருக்கலம்பால்
கிடந்த குழிக்கல்லி லிட்டாட்டு சாமங் கிருபைகொண்டே. (49)

கொண்டிடு குன்றி யளவது வாயுண்டை கூச்சமற
மண்டிடு மிஞ்சியின் சாற்றினி லுள்ளுக்கு வாயுமுதல்
அண்டிடு மோசன்னி தோசங் குளிர்சுர மானதெல்லாம்
கண்டிடு மேதிரி லோகசிந் தாமணி தூள்படவே. (50)

## சுரகேசரிக் குளிகை.

தூள்பட வேசுர கேசரி யுண்டையைச் சொல்லுகிறேன்
கேள்ரசஞ் சுக்கு அரிதாரந் திப்பிலி கெந்தகமும்
நீள்பெருங் காந்தம் திரிபலை யுஞ்சிலை நீளபினி
வேள்கடு குரோகணி யக்ராக் காரம்வெங் காரமுமே. (51)



வெங்காரந் தன்னுடன் சீனியின் காரம் மிளகுமொக்க
மங்கா வகைக்கு வகையோர் வராகன்பின் வாளமது
குங்காமற் றேடு முளைபோக்கிப் பாதியுங் கூட்டியொன்றாய்ப்
பங்காய் முருக்கிலை கொச்சி கையாந்தரை பண்புசெய்யே. (52)

பண்புசெய் சார்வகைக் கோர்நா ளரைத்திடு பற்றியுண்டை
கண்பெரு குன்றி யளவுகண் டாயிதை நானிலத்தில்
தண்புரு சேர்ந்த அனுப்பானந் தன்னுடன் தாக்கியுண்ண
விண்புரு மெந்தச் சுரமும் பயந்து வெருண்டிடுமே. (53)

## பசிக்குச் சூரணம்.

இடுகக்கு மூன்று மிளகது ரெண்டுபின் னேலமரை
கெடுந்திப் பிலியஞ்சு சீனிபதி னெட்டு நீயினிக்கேள்
அடுவொன்று கூகை நீரா மிலவங்க மரையெடுத்துச்
சுடுசட்டி காட்டி யிடித்து வெருகடி தூளையுண்ணே. (54)

## நாராயண னுண்டை.

உண்ணிடும் மந்தங் கிருகிருப் பஞ்தி யுடம்புவெக்கை
விண்ணிடும் மண்டலந் தப்பாமற் கொள்ளு வெகுபசியாம்
கண்ணிடும் ஆதிநா ராயண னுண்டை நவில்வதுகேள்
பண்ணிடும் பச்சையின் கற்பூரம் வெங்காரம் பாதிலிங்கம் (55)

லிங்கங் கடுகு ரோகணி திப்பிலி நிறைசரியாய்ச்
சங்கிலைச் சார்விட் டரைத்துண்டை குன்றி சரியளவாய்
பங்குவைத் தோருண்டை நீராகா ரத்திற் பருகியுண்டால்
தங்கும் வியாதிக ளுண்டோ புளியுப்பை தள்ளிவையே. (56)

## குன்மத்துக்கு உப்பு.

தள்ளும் வெடியுப்பு யிந்துப்புத் தானு மதுகளஞ்ச
தெள்ளும் ரசமுங் களஞ்சிடை கூட்டிப்பின் னூமத்தங்காய்
உள்ளே யடைத்ததை மேல்மூடிச் சீலைமண் ணுசல்செய்து
மெள்ள யெருப்புடம் சாண்மட்டும் போட்டிட வெந்திடுமே. (57)

வெந்திட்ட பற்பம் பணவிடை தேனில் மேவியுண்டால்
தொந்திட்ட குன்மங்க ளெட்டுக்கி ராணியுஞ் சூதகத்தில்
வந்துள்ள வாய்வும் புறவலிப் புள்ளனும் மந்தமுடன்
சந்திக்கு மோயின்னுங் காணும லோடிச் சளப்படுமே. (58)

சளமறச் சீரக மேலமு மொக்கச் சரிநிறையாய்
வளமுறக் கூட்டிப் பொடியாக்கிக் கொண்டபின் சூலைகுன்மம்
தளமுறு மாலையில் வெள்ளத்தி லூட்டிடு சந்துவலி
இளகிடுங் காரெள்ளுப் பிண்ணாக்கி லூட்ட விதப்படுமே. (59)

இதப்படு மேகொள்ளுச் சாற்றிற் செவிமந்த மின்னுமொன்று
அதப்படு மாலின் வழிப்புக்கு வாங்கி யாக்கிவிடு
நிதப்படு வெக்கையுள் சூட்டுக்குச் சீனியில் சேர்ந்துகொடு
சுதப்படு வச்சிர தேகமு மாகச் சுகந்தருமே. (60)

சுகந்தரு மோமங் கடுக்காய் மிளகுடன் சுக்கரத்தை
செகந்தனில் திப்பிலி அக்கிரா காரந்தே சாவரமும்
பகுத்த நிறைப்பொடிக் கொக்கநற் சர்க்கரை பாதியிட்டு
உகந்தநற் றேனி லுண் ணிலையுங் கக்க லொடுங்கிடுமே. (61)

### தாரச் செந்தூரம்.

ஒடுங்குங் கரியுப்புச் சூடன் சைச்சு ஒருரெண்டதாய்
மடங்கிட வேபொடி யொன்றிடச் செய்வாய் வராகன்ரெண்டு
தொடங்கு பொன் தாரத்தை வாங்கிநற் சட்டியிற் றானுக்கீழ்மேல்
அடங்கிடத் தாரம் நடுவைத்துத் தீப அனலெரியே. (62)

எரிதீப மூன்றரை நாழிகை மட்டு மிதத்துடனே
சரியாம் பவளத் தினையாய்ச் செந்தூரந் தாழ்ச்சியில்லை
சூரியான ரோகங்க ளேதுக்கென் றாலுங் கொடுபணந்தான்
மரியாதை யாகு மனுப்பானங் கண்டுநீ வாங்கியுண்ணே. (63)

### கண்ட மாலைக்கு.

உண்ணுங் கழுத்தினில் மாலைக்கு யெண்ணெய் யுரைக்குகிறேன்
எண்ணும் நரியை விரட்டிய வேருட னெட்டியின்வேர்
பண்ணும் பெருந்தும்பை வேரும் வகைக்குப் பலமொன்றதாய்
நண்ணும் இடித்ததைக் காய்ச்சுநீ வேப்பெண்ணெய் நாழியுள்ளே. ()

உள்ளே பதத்துடன் வெந்திடு மெண்ணெய்யை யுச்சியிலும்
கொள்ளே கழுத்தினிற் புண்ணுக்கு மண்டலம் போட்டிடுவாய்
சள்ளேது சீய்ரெத்தம் புண்வலி யேதடல் தான்பொன்னிறம்
விள்ளே னொருவர்க்கு மிம்மருந் தெண்ணெய் வெளிதனிலே. (65)

### பாண்டுக்கு.

வெளியில் வருமுடம் பூதலும் பாண்டு விஷகாப்பன்
களிவிளக் கெண்ணெய் யோர்படி யீருள்ளி கழுதைலத்தி
வழிய வகைக்கு அரைப்படிச் சார்கள்ளி வாட்டிநன்றாய்ப்
பிழியு மரைப்படிச் சார்தா னதில்விடு பின்னையுமே. (66)

பின்னை வசம்பு காஞ்சிர மோமம் பெருங்கடுக்காய்
மன்னு கஸ்தூரியின் மஞ்சளும் ரோகணி வல்லரத்தை
இன்னு மதிபெருங் காய மிளகு வியல்திப்பிலி
சொன்ன வகைக்கு வராகனு மூன்றது தூக்கிடுமே. (67)



தூக்கிப் பொடித்துச் சாற்றை யொன்றிடச் சுடுமடுப்பி
லாக்கி மெழுகு பதங்கண் டிறக்கி யதைவடித்துத்
தாக்கினி தாட்டிடு வெக்கிரிற் சோகைகள் தானுமுண்டோ
போக்கிது முத்தினம் கொள்வாய் புளிபுகை போக்கிவிடே. (68)

### பீனிசத்துக்கு.

விட்டிடு நெய்யரைக் கால்தலை மண்டை விராகன்ரெண்டு
தட்டிக் கடற்பழ மூன்னள வாயதைத் தான்பொடித்து
ஒட்டி ரவியில்வைத் தேமூக்கில் மண்டல மூதிவிட
அட்டி யிலைமண்டைப் பீனிச ரோகத்துக் காணியிதே. (69)

### குன்மத்துக்கு.

ஆணி விரை தள்ளியே கடுக்காயு மதிலிரத்தப்புத்
தாணி வகைக்கு வராகன் பொடியிஞ்சிச் சாறுதன்னில்
ஊணி யிடுஅஷ்ட குன்மங்கள் வாய்வுட னுட்பொருமல்
காணி விடும்பத்து நாட்கொள்ளத் தூர நடந்திடுமே. (70)

### கிரிப்புழுவுக்கு.

நடந்திடுங் கிரிப் புழுவிழ வின்னும் நவிலுகிறேன்
கடந்த திரிகடு கித்தப்புக் காயங் கருஞ்சீரகம்
மடந்த நற்சீரக மோரோர் வராக னளவளவாய்த்
திடந்த பொடிக்கொரு நாரத்தங் காயைச் சிறுகவெட்டே. (71)

சிறுக நறுக்கி யதிற்பொடி யொன்றிட்டுச் சேகரமாய்க்
கறுகப் புதுக்கலை யத்தினி லுள்ளிட்டுக் கள்ளியின்பால்
பரிகப் பிடித்திட்டு மேயெட்டு நாளும் பகலவன்முன்
மருகக் கிளரியும் விட்டே தினந்தினம் மாட்டுவையே. (72)

மாட்டி யரைத்ததை வெல்லத்தில் வாழை மகிழ்கனியிற்
கூட்டி மிகவுண் ணுடனே குடலிற் கொடிப்புழுக்கள்
சூட்டிய வாய்வு பொருமல் மலக்கட்டு சோகைமுதல்
ஓட்டமெடுத்திடும் நில்லாது யிம்மருந் துண்டபின்னே. (73)

### சோகைக்கு.

பின்னே யிலுமிச்சங் காய்பதி னஞ்சைப் பிழிந்துநன்றாய்ச்
சொன்னே னரைபொடி ஓமம் வகைக்கரை தூக்குபலம்
பொன்னே யக்காய்களிற் றூபித்து நல்ல புதுக்கலசம்
தன்னே யரைத்துக் கரிசாலஞ் சாற்றைத் தளறவிடே. (74)

விட்டது வற்றமட்டும் மிகவதை வெயிலில்வைத்து
மட்டது வாக வெடுத்துண்ண நீதினம் மாச்சலில்லை
தொட்டி விஷகாப் பானுங்கா மாலையுஞ் சோகையும்போம்
அட்டி யில்லைபுளி யுப்பைவிட் டாற்குண மனைத்துக்கே. (75)

பாண்டுக்கு

அன்னம் பசுவின்நெய் பால்மோர் சாறுை மதனுடநீர்
வன்னக் கொடிக்கள்ளிப் பால்நெ மடமும் வகைக்குழக்கால்
பின்னைத் தவிர்கடு கோமக் திரிபலை பேரிக்துப்பு
கன்னக் கருஞ்சீ ரகஞ்சீ ரகஞ்சவுக் காரமுமே. (76)

கார முடனிதி கோஷ்டம் வகைக்குக் கணக்குடனே
மாரும் விராக னொருரெண்ட தாம்பின்னை வாளமுப்நால்
சேரு மினிப்பெருங் காயமும் காலது சேர்க்தபின்பு
பாரு மதைபரைத் தொன்றாகக் காய்ச்சிப் பதத்தில்வையே. (77)

பதத்தில் வடித்தநெய் தானொரு காசிடை பற்றியுண்ண
மதத்த பெருவயின் மேல்விக்கம் பாண்டு மகோதரமும்
கதித்த நீராமை வெப்பானை பிலிகை கவுசியும்போம்
இதத்துட னிப்படி யுண்டாற் பிணியில்லை யெப்பவுமே. (78)

காந்தச் செந்தூரம்

எப்பவுங் காக்த மிரத மரைபொடி யேற்றநெக்தி
குப்பவும் நானு மொருநிறை கூட்டிக் குமரிச்சாற்றைச்
செப்ப முடன்விட் டரைத்துகன் றாகப்பின் சேவற்புடம்
ஒப்பற வாகச் சிறுபுடம் போடு உயர்சிகப்பே. (79)

சிகப்பாஞ் செந்தூரம் பணவிடை யாகத் திரிகடுகில்
வகுப்பான தேனிலுன் வாங்கிடும் வாயுவு வருஞ்சன்னிக்குத்
தொகுப்பான உள்ளிபி லாம்பிர மேகக் தொடர்ந்ததென்றால்
முதுப்பா மருதோன்றிச் சாற்றி லிடவு முயங்கிடுமே. (80)

முயங்கு மெரிகுன்மஞ் சீக்கித் தண்ணீரில் முழுகொச்சியில்
தயங்கிடும் வாதம் பெருங்காயம் கூட்டு தடையில்லைகாண்
சயங்கள் முதலில்லை யீளை யிருமல் தகர்த்துவிடும்
பயங்க ளினியில்லை செந்தூர மப்படிப் பற்றியுண்ணே. (81)

உண்ணும் கரியுப்புக் காந்தம் வெடியுப் புயர்கல்லுப்பு
வண்ண மதியுப்பு டன்பெருங் காயம் வளையலுப்பு
நண்ணு மொருநிறை யாய்க்கூட்டி யொக்க கடத்தியபின்
நண்ணுர் தனித்தனி யேபொடி சேரச் சடக்கெனவே. (82)



சடக்கென ஒன்றிட்டு ஆவின்பால் முக்காழி தாழியில்
மடக்கியடுப்பினி லேற்றியும் பாலது வற்றமட்டும்
அடக்க முடனெரித் தேரிசீ யிறக்கி யதைவெக்நீரிற்
குடிக்க வெருகடி தானட்ட குன்மங் குலைந்திடுமே. (83)

வெட்டைக்கு.

குலைபடு மேகம் பசும்பாலிற் கல்மதங் கூர்ந்தரைத்து
அலைவர வேகடுக் காய்மட்டுஞ் சீனி யதனளவாய்
மலைவரக் காற்படி பாலினில் முத்தினம் வாங்கியுண்ண
நிலைபெறு மெக்தெக்த வெக்கையுஞ் சூடும் நிகழ்ந்திடுமே. (84)

சிரங்குக்கு.

நிகழ்ந்திடுங் காத்தொட்டி நல்லெண்ணெய் தானுமே நீபடிகால்
புகழ்ந்திடுஞ் சத்தக் கவுரி விராகன் பொடிபண்ணியே
திகழ்ந்திடச் சாரெண்ணெய் யெல்லாமொன் றாக்கிச் சிரங்கிலிட
மகிழ்ந்தரைப் பிட்டக்தி கோங் குளிக்க வசியில்லையே. (85)

பொடுகுக்கு.

இல்லை கவுரி யுடன்காக்கை கொல்லி யிதன் விரையும்
மெல்லக் கருஞ்சீ ரகமும் வகைக்கு விராகனொன்று
செல்லத் தனிநல்ல கீழுள்ளிச் சாற்றினிற் சேர்த்தரைத்து
மல்லப் பொடுகி லிடுசிச் சலம்புண்ணும் மாறிடுமே. (86)

சீதத்துக்கு.

மாறிடுர் திப்பிலி ஒன்றரை ரெட்டி மருதுடவேர்
சாறிடும் ரெண்டும் பொடிசெய் திரவினிற் சாப்பிட்டபின்
சீருடன் மெய்யில் விராகன் குழைத்துண்ணு சீதமெல்லாம்
தூருடன் விழ்ந்து கழியு முடம்புக்குச் சொஸ்தமுண்டே. (87)

வண்டினும் வெப்பிலை தாளியின் வாழை யுடன்சமனுப்
பண்டினும் நீபொடி செய்திர வதனில் படுக்குமப்போ
உண்டன்ன மீதினிற் றேனிற் குழைத்துண் ணுதபத்துக்குச்
செண்டெனச் சீதம் பறந்தே கழிந்திடுர் தேகனன்றே. (88)

உள்மேகத்துக்கு.

நன்று மருதி னுடவே ரரைத்துநற் சர்க்கரையில்
குன்றுமற் பாலி லிசைத்தே வடிகட்டிக் கொண்டுவிட்டால்
மன்றாடு நீர்ச்சுருக் குள்மேகம் வெள்ளை வரட்சிரெத்தம்
சென்றோடு மைந்து தினமுண்ணு மெத்தத் திடம்வருமே. (89)

வருமேயே ரண்டத்தின் எண்ணெய்ப்படியொன் றுவாய்ப்புடனே
அருமே நற்கொல்லங் கோவைக் கிழங்குவெள் ளருகுடனே
தருமே யிருள்ளரி வகைபலம் ரெண்டயிற் றக்கிநன் றாய்ப்
பொருமே ரவிபட நாள்மூன் று வைத்துப் புகழ்ந்தபின்னே. (90)

புகழ்ந்தடுப் பேற்றிப் பதமாய் வடித்தெண்ணெய் போந்துழக்கு
மகிழ்ந்திரு முட்டைக் கரண்டியுட் கொள்ள மகோதரமும்
இகழ்ந்திடுங் கெண்டை பெருவயிற் குன்மங்க ளெட்டுமறும்
பகர்ந்த சொல் லெந்த வியாதியுந் தீப்னிற் பஞ்சதுவே. (91)

விஷத்துக்கு மருந்து.

பஞ்சை ரசமொன் றுடன்வாள மூன்றும் பழுதறவே
கொஞ்ச வெருக்கிலை யாமுருப்பை யேவரி கொழுந்துவெட்டி
தொஞ்ச வதின்பட்டை மூன்றும் வகைக்கரை தூக்கிநன் றாய்
மிஞ்ச வோர் நாளும் அமுரிவிட் டேபின் விடாதரையே. (92)

அரைத்தே கண்மை பதுவாகக் கடலை யளவுருட்டி
நிரைத்த நிழற்படக் காய்ந்தாறி யானபின் நீவிஷத்துக்
குறைத்தே அமுரியில் மாட்டிடச் சற்று முயிர்கெடுமோ
கறைத்தே விடுமெந்த நோய்க்கு மிதைக்கொடு கைகண்டதே. (93)

கண்ட பருத்தி யிலைச்சார்நல் லெண்ணெய்யுங் காற்படியாய்க்
கொண்ட சுண்ணாம்பும் ஒருபாக் களவிட்டுக் கொடுத்திடவே
மண்டி வரும்வெள்ளை நீர்க்கடுப் புஷ்ணம் மயக்கிவிடும்
விண்ட மொழியது பொய்யில்லை யுண்மை விளம்பினனே. (94)

விளங்கு மழிஞ்சி பேய்ச்சுரை யவுரி மிகவுநன் றாய்
முளங்கு மமுக்கிரா யீசுர மூலியிம் மூலமைந்தும்
பிளக்க விடித்து வடிகட்டி யானபின் பேய்ச்சுரையின்
தளங்கொள் குடுக்கையில் வைத்தே வெருகடி தாக்கநன்றே. (95)

தாக்கு மமுரியில் வெந்நீரில் நீயுந் தடையறவே
நோக்கும் பலவிஷ மெல்லா மொழிந்திடும் நோயில்லைபின்
தேக்கும் விசந்தொட்ட மாட்டுக்கு மப்படிச் செய்திடுவாய்
ஆக்க முடனரன் சொன்னது ருமைக்கென் றறிந்துகொள்ளே. (96)

கருப்ப முண்டாக.

கொள்ளாவின் பாலிற் கொடுவேலி வேரைக் குளுமையதாம்
தள்ளாதே கர்ப்பந் தரிக்குங் குளிர்ந்தநீர் தன்னிலுண்ண
விள்ளாதே தேனிலுண் ணீலாயிருமல் மிகப்பறக்கும்
புல்லாதே கண்வலி லுரைத்திடக் கண்வலிப் புழுவிழுமே. (97)



விளும்புண் செவிநோய்க்கு மவ்வேரை நன்றாய் மிகமுருக
வளம்பெறக் காய்ச்சி யிடுவாய்பற் குத்துக்கு மாறவென்றால்
களும்பரத் தண்ணீரில் காய்ச்சிக் கொடுத்திடு கனசன்னிக்கு
உளம்பிய வாதநோய்க் கெல்லா மிதுநல்ல உற்பனமே. (98)

உடம்பெரி வுக்கு.

உற்பன மேல மிலவங்கந் திப்பிலி யோர்நெல்லியும்
விற்பெரு நல்ல மதுரமி லாமிச்சு வெட்டியின்வேர்
துப்புற வுள்ள யிலுப்பையின் பூநீரைத் தூக்கியெல்லாம்
நப்புடன் சூரணஞ் செய்தே வெருகடி நண்ணியுண்ணே. (99)

உண்ண உடம்பெரி வானதுந் தீரு முடல்வெக்கைபோம்
கண்ணிடி மண்டை யிடிப்புக்குங் கேளினிக் காரெள்ளுநல்
லெண்ணெய் படிசுக்கு யிந்துப்புக் கோஷ்ட மிதில்மதூரம்
விண்ணும் வசம்புநற் றிப்பிலி தன்னுடன் வெள்ளுள்ளியே. (100)

உள்ளது திப்பிலி மூலமுஞ் சேர்த்துட னோர்நிறையாய்
விள்ளும் வகைக்கு விராக னிரண்டா மிகவெருக்கின்
தள்ளும் பழுப்பி லிருபலம் வாட்டித் தகர்த் தரைத்து
மெள்ளநல் லெண்ணெய்யி லெல்லா மொன்றாக்கி விளங்கவையே. (101)

விளங்க வடுப்பிற் பதத்துடன் காய்ச்சி மிகமுழுக
களங்க மறுமண்டைச் சூலை யிடிப்புக் கபாலரத்தம்
தளங்கொள் முகத்தி லிசிவாதம் குத்துச் சருவசன்னி
முளங்கும் வியாதிக ளெல்லாம் பயந்து முறையிடுமே. (102)

வாதத்துக்கு.

முறைக்குங் குருவை யரிசியி லேழு முடத்தழையை
உறைக்க விடித்துக் கழிக்கிண்டி நல்லெண்ணெய் யூற்றியுண்ணக்
கறைக்கு முடக்கு வலிவாதங் குத்துங் கழியுமின்னம்
நிறைக்கு மதின்பட்டை யான்பாலை விட்டுநீ நேகரையே. (103)

நேக வரைத்தோ சிறுமிச்சங் காய்மட்டும் நேர்ந்தபின்பு
சேகர மாய்ப்பனை வட்டையுங் கூட்டியுண் டேர்ந்துமுன்னாள்
பாக முடனுண் மறுபத் தியமப் படியேகண்டாய்
போகம் புளியுப்பைக் கூட்டாதே வாதிக்கும் பொய்யில்லையே. (104)

பொய்யில்லை யேகடுக் காய்பனி ரெண்டைப் புகழ்ந்துதட்டி
மெய்யிரு நாழிதண் ணீரினிற் காய்ச்சி மிகமிகவும்
தொய்பட வேம்விசை தான்வடி கட்டித் தணித்துவுண்ண
அய்ய மிலையுடம் பூதலுஞ் சோகையு மப்புறமே. (105)

அப்புறஞ் சூதமுங் கிரிப் புழுவு மகன்றிடவே
செப்புவேன் வேம்பி னுடயிர்க்குப் பத்துத் திகழ்கடுக்காய்
ஒப்புறக் கூட்டிப் பிரண்டையின் சார்விட் டுறத்தரைத்து
இப்பால் விளக்கெண்ணெய் கூட்டியுண் மெத்த யிதர்தருமே (106)

### சத்திக்கு.

தருங்காவிக் கல்மண் குழவியின் கூட்டுமண் தான்சமனாய்ச்
சருங்காமற் பச்சை யரிசிக் கழனியிற் சூட்டியுண்ண
அருங்காதம் போஞ்சத்தி விக்கலுக் கின்னு மதுதனக்கு
கருங்காக் கழற்சிப் பருப்பை வறுத்துண் நறுநெய்யிலே. (107)

நறுக்கிபு மேதுப்பை மேனி யில்லையை நயம்பெறவே
வறுந்து யிடித்துப் பொடிவடி கட்டி வராகனஞ்சு
நிறுத்துப் பனைவட்டு முன் தின்று பின்பொடி நீயளவாய்
பொறுத்த வெருகடி யுண்ணவிப் புருதி போய்விடுமே. (108)

### நாவரட்சிக்கு.

போய்விடுக் தோசமும் நாவின் வரட்சியும் பொய்யிலைகாண்
சாய்விடும் வேலிப் பருத்தியின் சாரணை தன்னடியை
ஆய்விடுக் தேனி லரைத்தே மையாக்கி யதைவழித்துத்
தேய்நடு நாக்கிற் செலமூறு மெத்தத் திடமிதுவே. (109)

### குன்மத் துக்கு.

திடமான காயங் கழற்பருப் புள்ளி சிறந்தசுக்கு
அடவாய் வறுத்துப் பொடித்து வெங்சீரி லள்ளியுண்ண
விடமான குன்மங்க ளெட்டும் விட்டோடும் மிகமிகவும்
இடமாம் வயிற்றுப் பொருமலுக் கின்னு மியம்புவனே. (110)

### வயிற்றுப் பொருமலுக்கு.

இயம்புவ னுமணக் கெண்ணெய்யில் காயத்தை யிட்டெரித்து
நயம்பட உண்ணுபின் னிந்துப்பு யெண்ணெய்யும் நாடியுண்ணப்
பயம்பட வந்த வயிற்றுப் பொருமல் பறந்துவிடும்
செயம்பெற வந்த புளித்தேப்பம் போய்விடச் செப்புவனே. (111)

### புளித்தேப்பத்துக்கு.

செப்பும் வசம்பை யெருப்புடஞ் செய்துறச் சேர்ந்தபொடி
அப்பு நற்காயம் வெதுப்பினபின் மோர்விட் டரைத்தரைத்துத்
தப்பன்றிக் கொள்ளப் புளித்தேப்பம் போய்விடும் தாட்சியில்லை
யிப்பவும் வாய்வுக் கெழுமிள கோடு மிதமுடனே. (112)



இதமுடன் வெந்தயம் சீரகக் தைவேளை யிந்துனிவேர்
துதிபெறக் கூட்டி வறுத்துப் பொடித்தருந் தாள் தனையும்
புதியநற் றேன்தனி லுண்டிட வாய்வு பொடிபடுங்காண்
மதிதனைப் போக்கிடும் பித்தத்துக் கின்னும் வழுத்துவனே. (113)

### பித்தத்துக்கு.

வழுத்துவன் சாரணை வேரெட்டுப் பாலினில் வற்றவைத்துக்
கொழுத்த வெயிலிலிட் டேபொடி யாக்கிபின் கூர்வெல்லத்தில்
அழுத்த முடனுண் ணு பின்னையும் நெல்லி யதுரெண்டுடன்
முழுத்த புரசி னுடன்பட்டை யோர்பங்கு மூட்டியிடே. (114)

மூட்டி யிடித்ததை நீர்விட் டடுப்பினில் முங்கவித்து
காட்டி ரவியி லுலர்த்திப்பின் நெல்லியின் காய்விரையை
யோட்டி யிடித்து வடிகட்டி மூவிர லுள்ளளவாய்க்
கூட்டிநற் றேனிலுண் பித்தங்கள் நாற்பதுங் கூசிடுமே. (115)

### கலிக்கம்.

கூசிடு மேபத்து நாளந்தி சந்தியுங் கொண்டுவிடு
பேசிடு வேன்கண் கலிக்கத்தைச் சுக்கு பெருங்கடுக்காய்
வீசிடு திப்பிலிச் சாதியின் காயும் விலங்க மைந்தும்
வாசிடு ரெண்டு வராகன் நிறுத்து வகைவகைக்கே. (116)

வகையான சாரணை வேர்காசுக் கட்டி மனோசிலையும்
திகையான துத்த மிளகுட னேமிக்க தேற்றால்வேர்
தகையாய் வகைக்கு வராகனொன் றுகத் தொடுத்ததிலே
தகையாமற் பாலி லவித்தேபின் நீர்விட்டுத் தான்கழுவே. (117)

கழுவி மிகப்பழச் சார்குப்பை மேனிகை யாந்தகரை
ஒழுகத் தனித்தனி விட்டரைத் தேபின் னுறவுசெய்து
விழுகச் சுரத்துக் கிடுபழச் சாற்றினில் வெள்ளெழுத்துக்
கிழுகும் பெண்பாலிற் குணமாகுங் கண்ணுக் கிடரில்லையே. (118)

இடரில்லை நேத்திர வாய்வுக்குஞ் சன்னிக்கு மெலுமிச்சஞ்சார்
தடையில்லை பூதபை சாச விடத்துக்குந் தண்ணியிலே
விடையில்லை நீகுப்பை மேனியின் சாற்றில் மிகவுமிடு
முடையில்லை கண்ணுக்கு பித்தக் கலிக்கத்தை மூட்டுவையே. (119)

### உடம்பு நாற்றத்துக்கு.

மூட்டுவை கொன்றை விளாவெலு மிச்சிலை முன்றரைத்து
தீட்டி யுடம்பெங்கும் நன்றாக முத்தினர் தேய்த்துவிட்டால்
காட்டி யுடம்பெங்கும் வீசிய நாற்றங் கழன் றுவிடும்
கூட்டிச் செய்யீரல் வலிக்கே மருந்தின்னுங் கூறுவனே. (120

### ஈரல் வலிக்கு.

கூறுவன் குன்று மணியிலை தன்னையுங் கூர்ந்தரைத்துத்
தேறிய பின்னதை நெய்யி லடைசுட்டுச் சிக்கையுடன்
ஆறிய மூன்று தினமுண்ணு பின்னையு மாவரையின்
கூறிய கம்பைக் கரியாக்கிப் பாலிற் குடித்திடுமே. (121)

### பித்த ரத்தந்திர.

குடித்திடு மூன்று விராக னிடையது கூச்சமற
அடுத்திடு பித்தமும் ரத்த மயக்கமு மறமருந்து
வெடித்திடு நாயி னுருவி யரிசி மிகவரைத்து
நடத்திடு கத்தபப் பாலி லருந்திட நன்றுநன்றே. (122)

### அரோசி கத்துக்கு.

பொருந்தும் பருத்திப் பருப்புடனே நெற் பொரிலவங்கம்
வருந்தேலந் திப்பிலி தாளிசை கோஷ்டம் மதுரம்நெல்லி
திருந்திய சர்க்கரை தேன்சாறு கூட்டித் தினமளவாய்
அருந்திட வாந்தி யரோசிகம் நீன்றிடு மாயிழையே. (123)

### பெரும் பாட்டுக்கு.

தேங்காயின் பாலை யுழக்கே பிழிந்து திறமுடனே
பாங்காய் முருங்கையின் பூவதில்மூன்று பரித்துமபின்
வாங்காய்ப் பணவிடை யொன்றாகக் கூட்டி மதுரமுடன்
தேங்காயின் பாலி லரைத்தே குடிக்கத் தினமும்ரெண்டே. (124)

ரெண்டேநாள் கொண்டிதை நாலாநாள் பத்தியம் நயம்பெறவே
கண்டே முரித்திடு மஞ்சாமந் நாளிற் கசப்பருந்தும்
விண்டே புளியது ஆறாமந் நாளில் மெல்லியர்க்குப்
பண்டே வருகும் பெரும்பாடு தீரும் பயனிதுவே. (125)

## அகத்தியர் வைத்தியக்கோவை 125

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

## அகத்திய மகாமுனிவர்

திருவாய்மலர் ந்தருளிய

# வைத்தியத் திரட்டு 81.

### நூல்.

வாதந்தா னெண்ப தாகும் வருகின்ற பக்க வாதம்
சீதமாம் நடுக்கு வாதம் சேர்ந்திடு முடக்கு வாதம்
சூதமாஞ் சந்து வாதந் தோன்றிடு முகவா தங்கள்
பேதமாம் வாதந் தீரப் பேசிடு மருந்தைக் கேளே. (1)

### வாதத்துக்கு.

மருந்துகேள் சித்ர மூலம் வளர் மாவி லிங்கை கொன்றை
திருந்திய முருங்கை சங்கு சேர்ந்தவெள் ளறுகு வேம்பு
பொருந்திய வேறு சுக்கு புகழுந்திப் பிலிம ரீசம்
கருந்திர லவண மைந்துங் காயமண் டலந்தான் கொள்ளே. (2)

தெள்ளவேப் பெண்ணெய் ஐந்தும் குலவுதில் லைப்பால் கற்கம்
மெள்ளவே முருங்கை வாகை மிகுந்தமா விலிங்கை மூலம்
கள்ளவிழ் காய மீந்து கடியவெள் ளுளிவ சம்பு
உள்ளமா யெரித்துப் பின்னை உடம்பிலொற் றிடஞ்செய் வாயே. (3)

### பித்தத்துக்கு.

செய்யதோர் வியாதி தன்னிற் றிரண்டிடும் பித்தம் வந்தால்
அய்யமாஞ் சித்தப் பிரமை அறிவிலாப் பிரமை சுற்றல்
நய்யவே நடுக்கல் வாந்தி நலமிலாச் சுழற்றல் வாய்நீர்
தையவே யிதற்கெல் லாந்தான் சாற்றிய மருந்தைக்கேளே. (4)

சாற்றிய மதுரங் கோஷ்டம் தருந்திரி கடுகு மூலம்
போற்றிய நெல்லி மாஞ்சில் பூரஞ்சந் தனங் கிராம்பு
மாற்றிய தாளி சந்தான் மருவுசீ ரகத்தோ டேலம்
பாற்சர்க்கரையுங் கூட்டிப் பரித்துமண் டலந்தான் கொள்ளே. (5)

பரிந்தநல் லெண்ணெய் பாலும் பகர்ந்திடும் நெல்லிக் காய்ச்சார்
தெரிந்திடுமோசுமோ சுக்கை சீந்தியும் பொன்னாங் காணி
வருந்திரி முத்தஞ் சந்தம் மதுரமோ டேல மாஞ்சில்
பொருந்துசெண் பகப்பூ வங்கம் பூண்டெரி தலைக்கு வாரே. (6)

### ஐபத்துக்கு.

வார்பெரும் ஐயக் தானும் வளர்ந்திடுந் தொண்ணூற் றாறாய்
சீர்பெரு மாந்தை யீளை திகாடி சத்தி விக்கல்
பேர்பெரு சுவாச காசம் பிலத்திடு மிருமல் வாந்தி
தார்பெரு சுரத்தின் மாந்தர் தனக்கெல்லா மருந்து கேளே. (7)

தன துநல் லிஞ்சிச் சாறு தளர்திரி கடுகோ டேல
மன துநற் கோஷ்ட மாஞ்சி வாலுளு வரிசி சிங்கி
கன துரு நாகங் கண்டங் கத்திரி அரத்தை யிந்து
தின துரு சசியின் ரெத்தம் நெய்யெரித் துட்கொள் வாயே. (8)

எரிந்தநல் லெண்ணெய் பாலு மிசைவிலா மிச்சம் வேலி
தரித்திடுஞ் சீந்தில் முத்தஞ் சந்தனந் தேவ தார
முரித்திடுந் தண்ணீர் மிட்டான் உயர்கிலப் பனைநன் னாரி
பரித்தமஞ் சனமுந் தேரப் பகர்தலை தனக்கு வாரே. (9)

### மூலத்துக்குச் சூரணம்.

தனக்குரு ரத்த மூலந் தீங்கொணு மூலஞ் சீயுஞ்
சினக்குரு முளையா மூலந் தீமூலங் குத்து மூலம்
மனக்குரு வாத பித்தம் வளரைய மூலந் தோடு
கனக்குரு மருந்து செய்யக் கன்னியே கேட்டி டாயே. (10)

கன்னியின் சருகு முத்தங் கருணையும் வெகு சுருக்கு
வன்னியாஞ் சித்ர மூலம் மருட்கிழங் கொடு கடுக்காய்
பன்னிய பிரண்டை கொன்னை பகர்புளி நடலை காட்டில்
துன்னிய கருணை பாலிற் சூரணஞ் செய்து கொள்ளே. (11)

### கிராணிக்கு.

செய்திடு வாத பித்தஞ் சேத்துமங் கிராணி மூலம்
கொய்திடு சங்கர் கிராணி கூடுஞ் சூசிகா கிராணி
பைதிடு வாயுக் கிராணி பகர்மல சலக் கிராணி
எய்திடுங் கிராணிக் கெல்லா மினியநன் மருந்து கேளே. (12)

இனியதோ ருடும்பு காயம் இந்துப்பு வளை யுப்பு
கனியவெள் ளுள்ளி சுக்கு கடியதிப் பிலிம ரீசம்
தனியது சவுட்டு மண்ணுந் தருஞ்சித்ர மூல மோமம்
புனியநற் பிரமிச் சாற்றிற் பண்ணிடும் பொடிநீ கொள்ளே. (13)



### குன்மத்துக்கு.

பண்ணிய வாத பித்தம் பகரைய குன்ம மோடு
கன்னியே யெரிவு குன்மம் கனத்துடல் பிரட்டுங் குன்மம்
நன்னிய சத்தி குன்மம் நாடிடுஞ் சூலை குன்மம்
குன்னியே வலித்த குன்மம் குதித்தோட மருந்தைக் கூறுவாம். (14)

கூறிடும் நாவி சூதங் கொடியவெங் காரந் தாரம்
தேறிய இருவி சிங்கி திகழ்கடுஞ் சிலையக் காரம்
காரிய கெந்த கந்தான் கலர்திரி கடுகு கூட்டி
ஆரிய பொடியாய்ச் செய்து அதைத்தேனி லருந்து வாயே. (15)

அருந்திட வாத பித்தம் ஐயமோ டிருப தாக
வருந்திய வாதம் நாலு வளர்சல பித்த மாறு
பொருந்திய ஐயம் பத்து பூண்டிடும் வியாதிக் கெல்லாம்
திருந்திய நன் மருந்து செய்திடத் தீர்க்க மாமே. (16)

### மேகவளை யெண்ணெய்.

ஆமிது மருந்தா வாரை அலைகட லமுதங் கொன்றை
தாமிது மருது நவ்வல் தான்கொட்டாங் கரந்தை பூலா
மாமிது இலந்தை காட்டு மல்லிகை விழாவும் நெல்லி
போமிது காய்ச்சிக் கந்தம் புகமுதி மதுரங் கூட்டே. (17)

மதுரஞ்சக் தனங் கற்பூரம் மகிழ்பச்சை மகரப் பூவும்
சதுர்பெரு மேலம் வங்கம் தாளிச மாஞ்சி மஞ்சள்
கதிரிலா மிச்சஞ் சீந்தில் கடுமுத்தம் வேரி சட்டம்
எதிரிலா எண்ணெய் பாலும் எரித்துநீ முழுகி டாயே. (18)

எரித்திடு மிரத்த மேகம் இசைக்தசீ மேகந் தண்டில்
மரித்திடு மேகம் புண்ணாய் வருத்திய கிரிச்சப் பாலை
தரித்திடாத் துள்ளி மேகம் சலக்கட்டாஞ் சுக்ல மேகம்
விரித்திடு மேகந் தீர விளங்கிய மருந்து கேளே. (19)

கேளுநற் பரங்கிப் பட்டை கெந்தஞ்சா திக்காய் பத்ரி
காளான கிராம்பு நாகக் கண்டமோ டரத்தை பூரம்
வாளுறு அசுவ கெந்தி வளர்கொடு வேலி மாஞ்சி
ஈளசர்க் கரைநெய் கூட்டி இதமுட னுட்கொள் வாயே. (20)

### காமாலைக்கு.

இதமுறு வாத பித்தமிசைக்தசேத் துமக்கா மாலை
பதமுறு வரட்கா மாலை பாண்டுடன் சேர்கா மாலை
நிதமுறு பித்த வாதம் நீண்டகா மாலை சோகை
இதமுறு பித்தத் தோடு சேர்ந்தகா மாலைக் கெல்லாம். (21)

சேர்க்தகா மாலைக் கெல்லாம் சிறந்த பொடியுங் கிட்டம்
சார்ந்திடுங் கடுக்காய் நெல்லி தான் றிசீ ரகமி ரண்டு
போந்தவெள் ளுள்ளி காந்தம் புகழிந்த காயஞ் சுக்கு
பாந்திப் பிலியும் பற்பம் பதமுறு மிஞ்சிச் சாரே. (22)

## விஷங்களுக்கு.

பதமுறு சூலைப் புண்கள் பகர்ந்திடுங் கடி விடங்கள்
இதமுறு பெரு வியாதி இசைந்திடாக் குட்ட ரோகம்
சதமுறு தேமல் மேனி தளருந்தா மரைகை வெள்ளை
நிதமுறு சொறி சிரங்கு நிகழ்த்திட மருந்தைக் கேளே. (23)

நிகழ்ந்தநீர் வெட்டி முத்து நேர்படுஞ் சூதம் லிங்கம்
சகர்ந்தகெந் தகமு மல்லாற் சாரமுந் துருசு துத்தம்
புகழ்ந்தநெய் வார்த்த ரைத்து பொருந்தநாய் பதநாட் கொள்ளு
தகர்ந்தநற் சாப்பிராணித் தயிலஞ்சேர்த் துடலிற் பூசே. (24)

## பலநோய்களுக்கு.

பூசிய கபால சூலை பொருந்தபீ னிசம்நீர்த் தும்மல்
காசிகா பீட ரோகம் நாசமாந் தினவு குஷ்டம்
தேசிகா காதுள் சீயுஞ் சேர்ந்திடுங் கபால வாய்வும்
காசிய தந்த ரோகங் கறந்திட்ட மருந்தைக் கேளே. (25)

கறந்திடும் பெரு மருந்து கண்டங்கத் திரியுஞ் சுக்கு
திறந்திடுஞ் செங்கத் தாரி சேருசீ ரகமி ரண்டும்
பறந்திடுங் கடுகு ரோணி பகர் சங்கு அரத்தை கூட்டி
சிறந்தசூ ரணமாய்த் தின்ன நீங்கிடும் ரோகந் தானே. (26)

நீங்குங்கார்த் திகைக் கிழங்கு கிலக்குமிழ் தசமூ லந்தான்
பாங்குள மஞ்சள் மூன்றும் பகர்சுப்பை கடுகு ரோணி
தேங்குச ரடை பெருக்கு சேர்கொடு வேலி சிந்தி
பாங்குநல் லெண்ணெய் சேர்த்துப் பருவமாய்த் தலைக்கு மூழ்கே. (27)

## விப்புருதிக்கு.

ப்ருவமாங் கவுசை யோடு பக்கவிப் புருதி யோடு
உருவுபீ லிகையு மிக்க உதிரத்திற் சூலை யோடு
கருவதை யளிக்குங் கெற்பக் கடியவிப் புருதி சாலப்
பெருவயி றுடனே மிக்க பெருமகோ தரமுந் தானே. (28)

பெருத்ததோர் கொம்மட் டிக்காய் பேர்வெள்ளைக் காக்க ணத்தான்
திருத்தமாம் லவண மைந்தும் சேர்த்திடு கார மைந்தும்
வருத்தமா லிலிங்கை கொன்றை வச்சிரத் தின்பால் மூலம்
கருத்துரு வசம்பு மஞ்சள் காயம்வெள் ளுள்ளி கூட்டே. (29)



காய்ந்தநற் சிவதை ஓமம் காட்டினு மணக்கின் வேரும்
வாய்ந்தரோ கணிமு ருங்கை வளருமா லவுரி சின்னி
பாய்ந்திடு கழற்சி கொத்தான் பகர்வேலிப் பருத்திகூட்டி
ஏய்ந்தயே ரண்டத் தெண்ணெய் சேர்த்துநீ எரித்துக்கொள்ளே. (30)

## வாய்வுக்கு.

சேர்த்திடும் ரெத்த ரோகம் செய்திடு முபாதி யோடு
பாய்ந்திடும் வாத பித்தம் பயிர்ந்திய வாய்வு மெய்யில்
சாத்திய ரோக வாய்வு சருவாங்க வாய்வு மூன்றும்
ஏத்திய வாய்வுக் கெல்லாம் இசைந்தநன் மருந்து கேளே. (31)

இசைந்தசீ ரகமி ரண்டு இயல்திரி கடுகு மூலம்
அசைந்தநற் சித்ர மூலம் ஆக்கிரி பலையோ டிந்து
இசைந்தவாய் விளங்கங் காய மிருத்திடு சவுட்டு மண்ணு
கசைந்தரோ கணியுந் தேனிற் கலந்துண்ண ரோகம் போமே. (32)

## வாந்திக்கு.

கலந்திடும் ரத்தம் வாந்தி காந்திடு மிரத்த காசம்
புலந்திடும் ரத்த பித்தம் பொருந்திடா எலும் புருக்கி
சலந்திடும் நெஞ்சி லீளை சயரோகம் ஆஸ்தி நெஞ்சில்
நலந்திடும் வியாதிக் கெல்லாம் நன்னய மருந்தைக் கேளே. (33)

நன்னய தண்ணீர் விட்டான் நன்னிலப் பனைநன் னுரி
பன்னய தோடை சிந்தி பகர்முத்தஞ் சாதிக் காயும்
சின்னய கிராம்பு பத்ரி சேலே மைந்துங் கூட்டி
சொன்னய நெய்யிற் சேர்த்துக் கொடுத்திடில் ரோகம் போமே. (34)

## சுரத்துக்கு கிசாயம்.

கொடுத்திடு சுரங்கட் கெல்லாம் கூர்விளா மிச்சு சிந்தி
எடுத்தகாஞ் சோரி முத்த மிசைந்தபற் படாக முட்டி
மடுத்திடு வேம்பு கோஷ்டம் வளர்கண்டங் காரி தேக்கு
தடுத்ததிப் பிலியுஞ் சுக்குத் தண்ணீரைக் கிசாயங் கொள்ளே. (35)

தண்ணூறு சன்னிக் கெல்லாம் தாங்கிய முசுரு முட்டை
மண்ணுபூ நாகம் ரெண்டும் வறுத்துப்பின் பதிரை டொக்க
சொன்னதிப் பிலிமு லைப்பால் சுருதியா பிஞ்சிச் சாறு
பன்னுதிப் பிலிசெந் தூரம் பண்ணிடில் நோய்கள் போமே. (36)

## வலிப்புசன்னிக்கு

பண்ணிய இருவி நாவி பகர்சங்கு கெந்த கந்தான்
நண்ணுவெங் காரங் காந்தம் நலந்திகழ் தாரம் வாளம்
குண்ணிய சில்லி நாம்பு கூறிடு மிளகு சுக்கு
எண்ணுதிப் பிலியோ டிஞ்சி இதிற்சுர சன்னிபோமே. (37)

இதுமுதற் குமர கண்டன் இயல்பிலா முயல கன்றன
வதுவுடன் குதிரை மேவும் வலிப்புடன் பலவ லிப்பு
பதுமமா யவுரிச் சாறும் பகர்வசம் புள்ளி கூட்டிப்
புதுநசி யத்தான் பண்ணப் புரிந்திது ஓடிப் போமே. (38)

ஓடிடக் காயத் தோடு உள்ளியும் வசம்புந் தாரம்
நாடிய கௌரி நாபி நயந்திடு கரிய போளம்
தேடிய மஞ்சள் மூலம் திரண்டபா விலிங்கை வாகை
சூடிய பெரும ருந்து சொல்சிறு குறிஞ்சாக் கூட்டே. (39)

சொல்லிடு எருக்கு புங்கு துலங்கிடு முருங்கை வேரும்
மல்லிகை சதுரக் கள்ளி மரமஞ்சள் நெறியரி சிப்பால்
புல்லிய எண்ணெய் ஐந்தும் புகழுங்குக் குடத்தி னண்டம்
கல்லிய பதம தாக்கிக் கருத்துடன் மேலிற் பூசே. (40)

## கரப்பான் வீக்கத்துக்கு.

கருத்துறு புடைக ரப்பன் கருங்கொள்ளிக் கரப்பன் வீக்கம்
வருத்திடு கரப்பன் பித்த வாதசேத் துமக ரப்பன்
பருத்திடு செங்க ரப்பன் பலத்ததோ ரரிக ரப்பன்
திருத்திடுங் காப்ப னெல்லாந் தீர்ந்திட மருந்து கேளே. (41)

தீர்ந்திடச் செங்கத் தாரி சேர்கரு நொச்சி கொத்தான்
காந்திடு கழற்சி புங்கு சங்கொடு சங்கங் குப்பி
போந்திடு கிரந்தி நாயன் புகழ்செருப் படியுஞ் சின்னி
கூந்தல்வே லிப்ப ருத்தி கொடியவெள் ளறுகு கூட்டே. (42)

கொடியவேம் பாடம் பட்டை கூறிடுஞ் சிவனார் வேம்பு
நெடியதோர் சிவதை மூலம் நேரிய கண்டங் கத்திரி
பொடியது கடுகு ரோணி பூதத்தின் கரப்பன் பட்டை
வெடியசி ரகமி ரண்டும் விளக்கெண்ணெ யெரித்துக் கொள்ளே. (43)

கொள்ளவே விடபா கங்கள் கூறிடப் பலது மூண்டு
முள்ளிதூ துளோகா ரத்தை முகிஞுய்யக் கொண்டா நொச்சி
கள்ளவிழ் பிரமி சின்னி கழற்சிமா மலைகன் னாரி
தெள்ளிய கடுக்காய் சுக்கு செய்திடுங் குடிநீர் தானே. (44)

## பிளவைகட்கு.

செய்யதோர் கண்ட மாலை சேர்ந்திடும் பவுந்த ரங்கள்
மெய்யில்விப் புருதி வீக்கம் மேவிய துடைவா லைப்புல்
பய்யவே பக்கச் சூலை பருத்திடு பிளவை யல்லால்
துய்யவே அரையாப் பேகத் துடங்கிய மருந்து கேளே. (45)



துடங்கிடு எருக்கு நீலி தோன்றுகாந்த் திகைக்கி முங்கு
மடங்கிய குன்றி எட்டி வளர்பெரு மருந்து கஞ்சா
முடங்கிய வசம்பு காய முதிரும்வெள் ளுள்ளி கூட்டி
அடங்கவீக் கத்திற் பூச அக்கண முடைந்தார்க் கேளே. (46)

உடைந்தவேப் பெண்ணெய் யுள்ளி ஓங்குவேம் பாடந் துத்தம்
கடைந்தகெந் தகமுஞ் சூதம் காசுநற் துருசு நாபி
இடைந்தகுங் கிலியங் குக்கில் மிருதார் சிங்கி தாரம்
இடைந்திலாத் தயில மாக்க யிந்தநல் ரோகம் போமே. (47)

## கண் வியாதிக்கு.

இந்தமா நீலக் காசம் இயல்பெரும் பித்த காசம்
மந்தாரப் படலம் பில்லம் மயிற்குத்தல் புழுவெட் டோடு
சந்திப்பா மாலைக் கண்கள் தளரும்நீர் கண்ணிற் குந்தம்
வந்தவாய் வுடனே நல்ல மருந்தினி யுரைக்கக் கேளே. (48)

உரைத்திடு முத்து வெள்ளி உயர்ந்ததா மிரநற் சங்கு
கரைத்திடுங் துருசு அத்தங் கலந்தலை யோடு பொன்னும்
திரைத்திடும் பீத ரோணி சேர்புங்கு நிம்பச் சாற்றில்
அரைத்திடக் கண்ணிற் றெண்ணூற் றுறுநோ யகன்று போமே. ()

போமிது பொன்னுங் காணி புகழ்சிறு கீரை முத்தம்
ஓமிது சீந்தி நிம்பம் உயரும்கா ரத்தை கோஷ்டம்
மாமிது மதுர மேல மடருஞ்செண் பகப்பூ வங்கம்
நாமிது சொன்னே மெண்ணெய் நயந்தெரி முழுகப்போமே. (50)

## மாந்தத்துக்கு வேறு.

ஊது மாந்தம் போர்மாந்தம் உடனே செரியா மாந்தமுடன்
வர்தக் கட்டு மாந்தமுடன் வளருஞ் சத்தி மாந்தவகை
மாது மாந்தங் கெட்டோடு மறுசொல் லினுக்கு யிடமில்லை
சோதனை யான மருந்திதுதான் சுருக்காய்த் தீருங் கண்டீரே. (51)

பொடிதனை ஈர்க்கு மாவீர்க்கு புளியிலை யீர்க்கு வேம்பீர்க்கு
வடிவுள் மஞ்ச ளுத்தீர்க்கு வரிசேர் வேலிப் பருத்தீர்க்கு
கொடிய நொச்சி யிலையீர்க்கு கூட்டி யேழுஞ் சரிசமனுய்க்
கடிய உள்ளிதிப் பிலியோமம் காய்ச்சிக் கசாயங் கொடுத்திடவே. (52)

## கணைக்கு வேறு.

காயுருவிச் சாறுழக்கு கரிசாலை கன்னி நருக்கியசா றுழக்குடனே வல்லாரைச் சாறு, தூயபுகழ் தும்பைகொச்சி கண்டங்கா ரிகையே தல ங்கியசா றுழக்குடனே ஆமணக்கு யெண்ணெய், ஏயவே திருகடுகம் திரிபலையும் உள்ளி, இசைவான வசம்புடனே வகைமூன்று காசு ஆயவே நீர்வற்றிக் கடுகுபத மாய்க்கொள் ஆமெட்டுக் கணைகளையும் அடக்குமிதை யறியே. (53)

### மண்டையிடிக்கு வேறு.

மாதே தலையில் நீர்க்கோர்வை மருந்து மண்டை யிடிக்கெல்லாம்
சூதா மரத்தை சதகுப்பை சுக்கு மிளகு திப்பிலியும்
ஈதா நொச்சிச் சாற்றிலரைத் திதமா யுள்ளுக் கருந்திவிட்டு
வாதா யரத்தைப் பொடியதனை மருவு நாசிக் கிடப்போமே. (54)

### சன்னிக்கு வேறு.

போமே சன்னி தோசங்கள் போகக் கசாயம் புகலக்கேள்
ஆமே குறிஞ்சா முருங்கைத்தோல் அடர்ந்த உகாயுந் தழுதாளை
நாமே நொச்சிப் பேய்ப்புடலும் நலமா மேனி பெருமரத்தோல்
தாமே வேளை கரித்தும்பை தகரை நெருஞ்சி சித்திரத்தை. (55)

அரத்தை சுக்கு சதகுப்பை அக்ரா காரம் வாய்விளங்கம்
சிரத்த திப்பிலி செவியமுடன் சிறுகாஞ் சோரி வால்மிளகு
பெருத்த ஓம மிதுமுதலாய்ப் பெருகக் காய்ச்சி லிங்கமிட்டு
பொருத்த மாக உட்கொள்ளப் போமே சன்னி வாதவகை. (56)

### கெற்ப வியாதிக்கு

வாதே செய்யு மாதருக்கு வயற்றில் வருகுங் கெற்பக்கோள்
ஈதி லாறு வகைகளுண்டு யிதற்கெல் லாந்தா னியல்பாகக்
போது மருவுங் குழலாளே புகல்வோ மருந்து வேம்பிலைச்சார்
ஓதும் வீழி நிலவாகை உற்ற கள்ளி பொற்கொன்றை. (57)

கொன்றை வேளை உள்ளிரசங் கோகு லத்தி பிழிந்த நீர்
மன்றிற் பெரிய பூவரசு வாகை சங்க வேர்ப்பட்டை
தின்று விழுங்கா வெள்ளறுகு தேனே சாறு சமன் சேர்த்துக்
கன்றி நாவின் பால்நாழி கருதுஞ் சிற்று மணக்கெண்ணெய். (58)

எண்ணெய் நாழி திரிகடுகு இயல்பாந் திரிபலை வல்லாரை
தண்ணீர் மிட்டா ணின்கிழங்கு தருஞ்சித்ர மூல மேற்பட்டை
பொன்னே பெரிய வால்மிளகு பொருந்துங் கோரோ சனையிந்து
உண்ணுங் கிராம்பு கருஞ்சீரம் உற்ற் மஞ்சள் வெங்காரம். (59)

கார மரத்தை கோர்வாளம் கார்கோ லரிசி கோழியெச்சம்
பீரம் நருங்கெந் தகம்லிங்கம் பிரப்பன் கிழங்கு பாங்கிப்பட்டை
நீரா லரைத்துச் சரிசமனாய் நேரே வடித்து உட்கொள்ள
ஆராங் கெற்ப ரோகவகை அடர்ந்தே தூர வோடிடுமே. (60)

### பெரும் பாடுக்கு.

ஓடு மாதர் தமக்கெல்லாம் உதிர ரோக மநேகமுண்டு
நீடு மிதற்கோர் சூரணந்தான் நினைவா யுரைக்கக் கேள் மின்னே
நாடு மசவ கெந்தியொடு நற்சீ ரகந்திப் பிலிசுக்கு
தேடு மிளகு வேலமக்ரா சிறக்குங் கிராம்பு சித்திரத்தை. (61)



இதுதான் வகைக்குச் சரிசமனு யிதமாய்ப் பொடித்து வடிகொண்டு
பதிவாய்த் தேனி லனுப்பானம் பண்ணி யருந்த யிருவேளை
கதியாய் வந்த வாயுவகை காணுதோடுங் காரிகையே
மதியா யாயுள் வேதமதில் வகுத்த படிநாம் வரைந்தோமே. (62)

### மேக நீருக்கு வேறு.

வகுத்திடு மேக நீர்க்கு வங்கத்தை யுருக்கி நீதான்
மிகுத்திடு ரசத்தைப் பாதி விட்டதைக் கல்வத்திட்டு
தொகுத்திடு மேதை மோரில் துவளவே யரைத்துக் குன்றி
பகுத்திடு மளவு கொண்டு பாக்குட னுட்கொள்வாயே. (63)

கொள்ளவே பத்தியங்கேள் கூறிடும் புளிப்புச் கைப்பு
கள்ளவிழ் காமக் குரோதம் கடத்துமா மிசங்களெல்லாம்
தள்ளவே மண்ட லத்திற் சீரங்கள் திடமதாகும்
உள்ளநீ ரழிவதெல்லாம் ஓடிடு முண்மை தானே. (64)

### கிரந்தி சூலைக்கு.

உண்மைசேர் பலரோ கங்கள் உழன்றிடும் சூலை மேகம்
திண்ணமைசே ரசிகி ரந்தி செய்யசிப் புருதி வாதம்
வண்மைசெய் யரையாப் புக்கள் மகோதாம் புறநீர்க் கோர்வை
பண்மொழி மாதே தீரப் பகுத்திடு மருந்தைக் கேளே. (65)

மருந்தரி தாரம் வெள்ளை வளர் கெந்தி வாளத்தோடு
திருந்திடச் சாதி லிங்கம் செய்யநல் லெண்ணெய் தன்னில்
பொருந்தவே பொடித்துக் காய்ச்சிப் புகட்டுநீ கரண்டி விதம்
அருந்தவோர் நேர மாக ஐந்துநாட் கொள்ளு வாயே. (66)

கொண்டிடப் பத்தியங்கேள் கூட்டிடு உப்ப தல்லால்
விண்டிடு மற்ற தெல்லாம் விள்க்கொளி யதுவு மாகா
மண்டுடன் பதினோ ராநாள் மாம்பட்டை பசுவின் மோரில்
தண்டிட வரைத்தே மேல்கால் தலைக்கது தேய்த்து வெந்நீர். (67)

நீரினில் முழுகிப் பின்பு நேசநல் லெண்ணெய் தேய்த்து
பாரினில் வெந்நீர் மூழ்கிப் பச்சைமீ னிறைச்சி யோடு
தீரவே அகத்திக்கீரை பாகற்காய் சேரத் தள்ளி
நாரியே மறுமா சங்கொள் நலமிலா நோய்கள் போமே. (68)

வேறு.

சிறுநாகப் பூகடுக்காய் முத்தக் காசு
    திரிகடுகம் நெல்லிவித்து விளங்கம் ஏலம்
உருகிராம் பொருபத்தும் சமனாய்க் கூட்டி
    ஒருமூன்று ரியசிவதை யிதற்கு நோய்
மருவில்லாச் சர்க்கரைசேர்த் தருந்த மந்தம்
    வாயுவலி குன்மமுடன் மேக மூலம்
அருகிஉரம் வலிகிரப் பூச்சி பாண்டு
    ஐவத்திச் சூரணங்கொள் ளகன்று போமே. (69)

வேறு.

இரத மீயஞ் சேங்கொட்டை இயல்பாஞ் சங்கு சுடுவெந்நீர்
உரமே செய்யு மஞ்சளினோ டொக்க வாறு மொவ்வொன்றுஞ்
சரவே நாலு களஞ்சியிடை சமனாய்ச்சேரப் பொடிசெய்து
விரவா யிடவே எப்புண்ணும் மீளும் வாதப் பிரமியமே. (70)

செய்ய யிதற்குப் பரிகாரம் தேற்றாங் கொட்டை நூறெடுத்தே
மைய வரைத்து மையதுபோல் நாடுங் கொட்டைப் பாக்களவு
துய்ய பசும்பா லிற்கலக்கித் தோதா யிருபோ தேழாநாள்
பய்ய ஓடும் நீரடைப்புப் பலதாம் வெட்டை பிரமியமே. (71)

வெள்ளப் ரேகங் காடியுடன் விளங்க வரைத்து மயனமதாய்
வள்ளி சார வெங்காரஞ் சவுக்கா ரமுமே சீனமுடன்
தெள்ளு காரம் ஒருமூன் றுஞ் சேர்த்துக் கொண்டே யிடைசரியாய்
உள்ள காரீ யம்மிரதம் ஒக்கத் தேனிற் பொடிசெய்து
வெள்ளைச் சீனி யுடன்கூட்டி வெருகி னளவா யுட்கொள்ள
தள்ளிப் போகுஞ் சலரத்தம் தண்டி லடைத்த பிணிபலதும். (72)

ஆவரை வேரின் புறந்தோலும் அடுபூ வரசின் வேர்த்தோலும்
தீவர நெல்லி கடுதான்றி திரமாங் கடக சிங்கியுடன்
ஏவரை நீர்வெட் டிப்புறத்தோ லிட்டே எட்டொன் றாய்க்காய்ச்சி
ஆவரை விரையுடன் திப்பிலியும் அதன்றோல் பொடியுந் தேன்விட்டு
தேவரை வணங்கி யுட்கொள்ளத் திறமாய் நீரு வற்றிடுமே. (73)

வற்று மாடா தோடைரச மருவுங் கருத்த நொச்சிச்சார்
முற்ற வேலிப் பருத்தியிஞ்சி முதிய கண்டங் கத்திரியுங்
கற்ற தூது வளைகரிப்பான் கருதி வகைக்கு அரைப்படியாய்
வற்ற தேனி லூறியிட்டு வாங்குஞ் சர்க்கரை பலமைந்தே. (74)



அஞ்சு பலமுங் கரைத்துவிட்டு அடைவாய்த் திப்பிலி மூலமுடன்
செஞ்சொல் லேலங் கற்கடகஞ் சிங்கி மாஞ்சி யிந்துப்பு
மிஞ்சுங் காயம் நெற்பொரியு மிளகு சிறிய வழுதலைவேர்
வஞ்சி யிடையாய் வகைக்கிரண்டு வளமா யிடித்துக் கரைத்ததிலே. (75)

கரைத்துப் பாகு தனிற்றாவிக் காய்ச்சிடு லேகியம் பக்குவமாய்
விரைத்துப் புன்னைக் காயளவு மேவ ரெண்டு போதருந்தில்
நிரைத்த சயங்கள் விசப்பாண்டு நெடுநா ளுள்ள சோகையது
தரைக்குட் டீரு மௌனமுனிவர் தானே யுரைத்த படியிதுவே (76)

சுரத்திற்கு.

படிக்குட் சுரங்க ளெட்டெட்டும் பறகக் கசாய வகையதுகேள்
குடிக்கச் சிறுதேக் கொடுசிந்தில் கொடியும் பற்பாட கங்கோஷ்டம்
வடிக்குந் திப்பிலி நிலவேம்பு மாதே சுக்கு காஞ்சொரியும்
தொடுக்கு முத்தக் காசாடா தோடை யிலையும் வகைபத்தே. (77)

பத்து வகையு மெட்டொன்றாய்ப் பருகக் காய்ச்சித் தேன்விட்டு
ஒத்தே அந்தி சந்திக்கு உட்கொண் டிடவே பழஞ்சுரங்கள்
செத்தே ஓடும் பத்தியந்தான் தீர்த்தே உப்புப் புளிபுகையும்
நித்தம் விரும்பிக் கொண்டவர்க்கு நெடுநாட் சுரங்கள் நீங்கிடுமே. (78)

நீங்குஞ் சிவனார் வேம்புசங்கு நிலத்தின் வாகை வெள்ளறுகு
தாங்கும் பூவரசம் பட்டையுடன் சதிராம் பரங்கிப் பட்டையுமே
வாங்குங் கரிப்பான் சாரதனில் வாகா யூறிக் காய்ந்ததன்பின்
பாங்கு பெறவே வெள்ளாட்டின் நீரி லூறப் பக்குவமே. (79)

ஊறி யுலர்த்தி யிடித்துவடி கொண்டே யுறவு செய்ததன்பின்
தேறி முன்சார நீருமதில் சேர்த்துப் பொடியி லூறவிட்டு
பார வெயிலிற் சூரணத்தைப் பதமா யுலர்த்திப் புதுக்காகம்
சேர வைத்துக் கொண்டுநித்தந் தின்பாய் வெருகடி தானளவே. (80)

அளவு ரெண்டு நேரமுமே அருந்து ஒருமண் டலமதிலே
பிளவு செய்யுங் கைகாலிற் பெருத்த மேகக் கருப்பூறல்
பழகு குட்ட மேற்றடிப்புப் பறங்கி கிரந்தி சூலைமுதல்
விழலாய்ப் போகு மௌனமுனிவர் விதித்த ஒரொண் பதுமுற்றே. (81)

அகத்தியர் வைத்தியத்திரட்டு 81 முற்றிற்று.

உ

பரமபதி துணை.

அகத்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# மானிடர் கிறுக்குகள் பதினெட்டுக்கும்

# கிரிகை நூல் 64.

## காப்பு.

ஓமென்ற கயிலையில்வா ழீசர்பாதம்
உம்மென்ற பராசத்தி யுமையாள் பாதம்
நாமென்ற கலைமகளாம் வாணிபாதம்
நந்தீசர் பிருங்கிமுதற் பெரியோர்பாதம்
தாமென்ற விக்கினங்கள் வராமற்காக்கும்
சதாசிவனா ரீன்றகண பதியின் பாதம்
ஊமென்ற முருகனுட பாதம்போற்றி
உரைக்கிறேன் கிரிகைநூ லாதிகாப்பே. (1)

## நூல்.

ஆமடா கிரிகையது பதினெட்டுந்தான்
அப்பனே மனுக்களுக்குப் பிடிக்குங்காலம்
தாமடா துட்டகண பூதமென்பார்
தப்பாதே யெச்சியதைத் தொடர்பேயென்பார்
வேமடா சாஸ்திரங்க ளறியாமட்டை
வீணாகப் புலம்புவதால் வருவதேது
நாமடா அதினுடைய குணங்கள் கண்டு
நன்றாக உனக்கறியச் சொல்வோம்பாரே. (2)

## 1-வது அனற் கிரிகையின் குணம்.

பாரப்பா அனல்கிரிகை குணங்கள் தன்னை
பலனாகச் சொல்லுகிறோம் பரிந்துகேளு
நேரப்பா காடுடைய பொட்டல் தன்னில்
நினையான மானிடரைக் கும்பிட்டோடும்
ஊரப்பா யெச்சியெல்லாம் பொருக்கித்தின்னும்
உத்தமனே அச்சமயம் கண்டாயானால்
ஆரப்பா தீர்க்கவகை யறியப்போறார்
அப்பனே மருந்தொன்று துவாலைபோடே. (3)



## மருந்து.

போடப்பா கிலவாகை கத்தச்சூரி
புகழான மின்வெட்டான் பூச்சிகூட்டி
நாடப்பா உச்சிமுதல் பாதமட்டும்
நன்றாகத் துவாலையிட்டுக் காய்ந்தபோது
ஆடப்பா மாலைதனில் வெண்ணீர் விட்டு
அப்பனே உதயமதிற் கழுதைப்பால்தான்
மூடப்பா வாங்கிவந்து மத்தஞ்சாறும்
முகனையடா நீபிழிந்து தாக்குதாக்கே. (4)

தாக்கடா நாளாறு கொண்டாயானால்
தானாகு முன்கிரிகை தப்பியோடும்
நோக்கடா நல்லபுத்தி வருவதாச்சு
கொடியாகும் நெட்டோட்டந் தீர்வதாச்சு
வேக்கடா தேகமெல்லாஞ் சலமதாகும்
விபரமடா குளிர்ந்திருக்குந் திட்டஞ்சொன்னேன்
பாக்கடா சிவப்பதுபோல் தேகஞ்சித்தி
பலனாகும் பித்தத்தின் குணத்தைக்கேளே. (5)

## 2-வது பித்தக் கிரிகையின் குணம்.

கேளப்பா பித்தமது கட்டியாகும்
கெடியான புத்துபோல் வளர்ந்திருக்கும்
வாளப்பா அமுதமென்ற கலசம்புக்கும்
மைந்தனே சூடுகொண்ட வேகத்தாலே
ஆள்ப்பா புத்தியது மயக்கிக்கொண்டு
அப்பனே ஆடையெல்லாங் கிழித்தேபோடும்
பாளப்பா பிறந்திருந்த கோலத்தோடே
பாழான நாகலையும் பூசும்பாரே. (6)

பூசியே கீழ்விழுந்து உருளுங்கண்டாய்
புகழாகத் தீர்க்கும்வகை விபரங்கேளு
தூசியே உச்சியதின் நடுவேதன்னில்
துடியான நெற்கொண்டு கீறியேதான்
வீசியே சாணாகங் கொண்டுகட்டி
விபரமடா வேம்பினுட யெண்ணெய்தன்னில்
பாசியே நாங்குழுவின் பூச்சிபோட்டுப்
பலனாக நீகருக்கி யிறக்குவாயே. (7)

மருந்து

இறக்குவதக் குப்பருவஞ் சூடுகண்டால்
இயல்பாக அதையெடுத்து வலையந்தன்னில்
உறக்குவது நீகட்டி விட்டாயானால்
உத்தமனே மடமடென இடிசத்தம்போல்
கறக்குவது கீழிறங்குஞ் சத்தங்கண்டால்
கடியாக விட்டுவிடு அப்பாற்கேளு
சிறக்கவது எலுமிச்சம் பழச்சார்வாங்கு
சிவசிவா அரிதாரந் துருசுமாமே. (8)

ஆமென்று நீபொடித்து உள்ளேபோட்டு
அப்பனே நாள்மூன்று தாக்கினுக்கால்
வேமென்று முன்சொன்ன கிரிகைதானும்
விட்டோடும் அதனுடைய விபரஞ்சொன்னேன்
நாமென்று சொல்வதல்லால் வேறொன்றில்லை
நன்றான கிரிகையடா தீர்க்கவென்றால்
தாமென்ற வயித்தியனே பின்னூல்பாரு
தப்பாத சூட்சமது ஆகுந்தானே. (9)

## 3-வது எச்சில் கிரிகையின்குணம்.

தானான எச்சிலதின் குணத்தைக்கேளு
தப்பான நாகலையுந் தின்னலாகும்
வானான தரைதனிலே முட்டலாகும்
மகிழ்வாகச் ஜலத்தையெல்லாம் வாரியேதான்
கோனான சிரமதனிற் றெளித்துக்கொள்ளும்
சூறியான சாம்பலையுந் தின்னும்பாரு
வானான மழையதனில் நனைந்தேநிற்கும்
மைந்தனே அதனுடைய திட்டமாச்சே. (10)

ஆச்சடா யிப்படிநீ குணத்தைக்கண்டால்
அறிவாகத் தீர்க்கும்வகை சொல்லக்கேளு
வீச்சடா ஆதிசென்ற வேப்பப்பட்டை
விபரமடா பலம்நாலு பத்தேவாங்கு
காச்சடா நீநறுக்கிப் பாண்டத்திட்டு
கனமாக உப்பினுட ஜலமாந்தன்னில்
மூச்சடா முங்கவிட்டு அடுப்பிலேற்றி
முகனையடா அரைப்படியா யிறுத்துவாங்கே. [11]

வாங்கியே சியக்காய் பலமேவாங்கி
மைந்தனே பழச்சாறு விட்டேஆட்டி.



ஓங்கியே முன்மருந்தி னுள்ளேபோட்டு
உத்தமனே அதைக்குழப்பக் குழம்புமாகும்
தாங்கியே முன்போலே துவாலையிட்டுத்
தானான உதையாதி வேளைதன்னில்
ஏங்கியே யிருபொழுது ஜலத்தைவிட்டு
இயல்பான அபிஷேகம் ஒன்றுசெய்யே. (12)

செய்யடா பேரண்டங் கொண்டுவந்து
திறமாக அதைநன்றாய்ப் பொடித்துநீயும்
உய்யடா முத்தெண்ணெய் தன்னிற்போட்டு
உத்தமனே நீகுழப்பி மூன்றுநாள்தான்
பையடா கொண்டிடவே கிரிகைபோகும்
பாங்கான வகைவிபரந் தவறிடாமல்
கையடா செப்பவனே சித்தன்சித்தன்
நன்றான வாதத்தின் கிரிகையாமே. (13)

## 4-வது வாதக் கிரிகையின்குணம்.

ஆமப்பா வாதத்தின் கிரிகைதன்னை
அறியவே குணங்களின் விபரங்கேளு
தாமப்பா விழிகள்ரெண்டும் மூடிக்கொண்டு
தப்பாது வாய்திறந்து பேசிடாது
வேமப்பா எழுந்துடனே படுக்குங்கீழே
விபரமடா தேகமெல்லாஞ் ஜலத்தைப்போல
ஆமப்பா குளிர்ந்திருக்கும் கடிக்கும்பல்லை
அக்கனமிக் குணங்கண்டா லோட்டஞ்செய்யே. (14)

செய்யடா அமுதப்பால் தன்னைவாங்கித்
திறமாகு மல்வீதம் வேளைமூலி
உய்யடா சாறுவிட்டுக் குழப்பியேதான்
உத்தமனே வால்மிளகு பொடித்துப்போட்டு
பய்யடா விழியதிலே தீட்டுநீயும்
பலனாகக் காதுக்குள் ளடைத்துப்போட
கையடா நாழிகையாம் மூன்றுக்குள்ளே
கனமான அபயமிடுந் திறக்கும்வாயை' (15)

வாயப்பா திறந்தவுடன் சொல்லக்கேளு
மைந்தனே வேப்பெண்ணெய் படியாகாணி
தாயப்பா வெள்ளுள்ளிப் பூடுமூன்று
தயவாகப் போட்டுநீ நருக்கியேதான்

பாயப்பா உள்ளுக்குக் கொடுப்பாயாகில்
பாலகனே வாதத்தின் கிரிகைமூன்றும்
நோயப்பா நாளாறிற் றீறும்பாரு
கொடியாகுங் குணங்கண்டு செய்வதாச்சே. (16)

ஆச்சென்ற கிரிகையுட விபரந்தன்னை
அப்பனே யின்னுமி லறியாவினர்
பேச்சென்ற பூதகணம் பிடித்ததென்பார்
பேராகும் பூதமது பதினெட்டுந்தான்
வீச்சென்ற வெவ்வேறுங் கிரிகையாகி
விபரமாய்த் தோன்றுமந்த கடத்தைகண்டால்
காச்சென்ற முறையதுதான் தவறிடாமல்
களையாகச் செய்திடவே தீருங்காணே. (17)

## 5-வது சிலேற்பனக் கிரிகையின் குணம்.

காணப்பா சிலேற்பனத்தின் கிரிகைதன்னைக்
கருவாக உனக்கறியச் சொல்வேன்கேளு
வேணப்பா கண்மலருள் வெள்ளையாகும்
விபரமடா கொட்டாவி கண்ணீரோடும்
போணப்பா தரையதிலே அடிக்குங்கையை
புகழான வாய்ப்புலப்ப மெத்தவுண்டாம்
கோணப்பா விரலோடும் அங்கசேட்டை
குறியாகக் கண்டவுடன் தீர்க்கக்கேளே. (18)

கேளடா கற்றாழைச் சோறுவாங்கிக்
கெடியாக வரண்ட வெண்ணெய்தன்னில்
வாளடா குழப்பியே பிசையும்போது
வகையாக வண்ணார உப்புங்கூட்டி
ஆளடா தவாலையிட்டு வெந்நீர்முழ்க
அப்பனே தீர்ந்துவிடும் அவிழ்தத்தாலே
வேளடா லிங்கமதைப் பொடித்துவாரி
விதமாகும் பணவிடைதான் தேனிற்கொள்ளே. (19)

கொள்ளப்பா நாளாறு முன்போலேதான்
குறியாகுங் கைமுறையாய்ச் செய்தாயானால்
தள்ளப்பா கிரிகையது குடிதான்போச்சு
சொல்லாதே யென்னாலை யின்னும்பாரு
கள்ளப்பா நாதவிந்து கிரிகையென்ற
கனமான யிதனுடைய குணத்தைக்கேளு
வெள்ளப்பா தெருத்தோறும் ஓடலாகும்
விதமான பெண்களையும் கட்டும்பாரே. (20)



## 6-வது நாதவிந்து கிரிகையின் குணம்.

கட்டும்பார் புவியிலுள்ளோர் களைப்பிடிக்குங்
கனமான மனுக்களொடு சினமேகொள்ளும்
முட்டும்பார் வெகுதூர மோடலாகும்
முகனையென்ற வாயாலே முகத்தில்துப்பும்
எட்டும்பா ரிப்படியே கண்டாயானால்
என்னசொல்வேன் தீருதற்கு மருந்தைக்கேளு
கட்டும்பார் முருங்கைப்பூக் காற்றினாலே
நலமாக உதிர்ந்ததுகீழ் கிடக்கும்பாரே. (21)

பாரப்பா கொண்டுவந்து பாண்டத்திட்டு
பாலகனே பழச்சார்வெற் றிலையின்சாற்றில்
காரப்பா கடுக்காயு மிடித்துப்போட்டுக்
கனமான அடுப்பேற்றி வேகவைத்து
பாரப்பா அதைபிடித்து வாலையிட்டு
பாங்கான ஜலத்தையும்நீ தாக்கினுக்கால்
ஓரப்பா தீர்ந்துவிடும் வேறொன்றில்லை
ஒட்டமடா நாளாறில் ஒழிவதாச்சே (22)

## 7-வது பூதக் கிரிகையின் குணம்.

ஆச்சடா நாதவிந்து கிரிகைதானும்
அப்பனே தீர்ந்துவிடு மற்றதுசெய்வாய்
மூச்சடா பூதத்தின் கிரிகைகொண்டால்
முகனையடா அதினுடைய குணந்தான்கேளு
பேச்சடா வெறும்புலப்பம் போடலாகும்
பேரால மனுக்களையுங் கடிப்பதாகும்
வீச்சடா சாம்பலிலே புரளுங்குப்பை
வீம்பாகப் பின்பெடுத்துப் போடும்பாரே. (23)

போடுமது தன்னுடைய தலையில்வாரி
போடுவதும் வாய்நிறைய நுரையுந்தள்ளும்
ஆடுமது வெகுகூத்துக் கண்டாயானால்
அதுதீரும் வகைவிபரங் கேளுகேளு
பாடுமது கருங்கழுதை மூளையித்து
பாங்கான கன்னியவள் அண்டஓட்டை
ஓடுமது கொண்டுவந்து பொடித்துநீயும்
உத்தமனே சிறுநீரில் கரைத்துத்தாக்கே. (24)

தாக்கியே நாள்மூன்று கொண்டாயானால்
தானான கிரிகையது நாதமோடும்

நோக்கியே சாராயந் துவாலைபோட்டு
நுணுக்கமாய்ச் ஜலமதிகம் விட்டாயானால்
போக்கியே தீர்ந்துவிடும் வருவதில்லை
புகழான பெரியோர்க்கா யின்னூல்சொன்னேன்
சாக்கியே போட்டாலுந் தணியும்பாரு
தப்பாது ஜலத்தினுட கிரிகையாமே. (25)

### 8-வது ஜலக் கிரிகையின் குணம்.

ஆமப்பா ஜலத்தினுட கிரிகைகேளு
அப்பனே தண்ணீரைக் கண்டாலோடும்
வேமப்பா யதன்மேலே ததும்பிநிற்கும்
விபரமடா கரணங்கள் மிகவேபோடும்
தாமப்பா வீட்டிலது யிருந்திடாது
தானாகக் காடதிலே கிடக்குங்கண்டாய்
காமப்பா தீர்க்கவகை செப்பக்கேளு
நன்றான ஆடுதொடா மூலமொன்றே. (26)

ஒன்றான கஞ்சாவின் மூலமொன்று
உத்தமனே கொடுவேலி கொடுப்பைமூலம்
நன்றாகச் சேகரித்து யிடித்துநீயும்
நலமாகத் தனிச்சாறு வீதங்கூட்டி
வென்றாக்கால் துவாலையிட்டு ஆனபின்பு
விறைவாக வாகையிலைச் சூரணத்தில்
சென்றாக்காற் றேனதுவே கடிகையப்பா
திறமாக நீயிட்டுக் கொள்ளுவாயே. (27)

கொள்ளடா நாளாறு தவறிடாமல்
குறிப்பான முறைபோலே செய்தாயானால்
விள்ளடா பிசகாது கிரிகைதீரும்
விபரமடா மக்களுமே பிழைக்கச்சொன்னோம்
கள்ளடா ஒருநாளுஞ் சொல்வதில்லை
கருத்தறியா மடையருக்குச் சொல்லவேண்டாம்
எள்ளடா ஒருநாளும் பிசகாதப்பா
இயல்பாகும் புலத்தியனே பாருபாரே. (28)

### 9-வது மோகினிக் கிரிகையின்குணம்.

பாரப்பா மோகினியின் கிரிகையொன்று
பலனாகு மதினுடைய செய்கைகேளு
சீரப்பா வந்தவரை வசவுசொல்லும்
திறமாக நாதவிர்த்து பெருகிச்சாயும்



ஊரப்பா பெண்களையுங் கண்டதானால்
உத்தமனே சிரிக்குமது வாய்புலம்பும்
காரப்பா அன்னமது அருந்திடாது
கண்டாலு மெரிந்துவிடுங் குறிப்பைக்காணே. (29)

காணப்பா யிப்படியே பார்த்தாயானால்
கருத்தாகப் போகும்வகை சொல்லக்கேளு
தோணப்பா பெண்கலவி செய்யச்சொல்லி
துடியாகும் பிரமடையின் சலத்தைவாங்கி
வேணப்பா யினாத எருமைச்சாணி
விபரமாய் நாயுருவி யரிசிகூட்டித்
தோணப்பா நீயரைத்துக் குழப்பியேதான்
துவாலையிட்டு உள்ளுக்குக் காசமுண்ணே. (30)

ஊணப்பா காசளவு ஆறுநாள்தான்
முகனையடா தவறாமல் செய்தாயானால்
தோணப்பா தீர்ந்துவிடும் வெந்நீர்மூழ்கு
துடியான பெண்மயக்கம் நாளோபத்து
வேணப்பா ஆகாது சொன்னேன்சொன்னேன்
விபரமடா தெரியாத மடையர்தாகும்
பூணப்பா தவறியங்கே போவாரானால்
புகழாகத் திரும்புமடா தீராதாச்சே. (31)

ஆச்சடா கிரிகைக்கு இன்னூல்பார்த்து
அறிவாக நீயெடுத்துச் செய்தாயானால்
காச்சடா நிற்றுளாய்ப் பறக்குஞ்சொன்னேன்
கருவாகும் புலத்தியனே பிரிவாய்வேண்டி
பேச்சடா சொல்வதல்லால் வேறொன்றில்லை
போரான மவுனமடா தீர்ந்திடாதே
மூச்சடா ஒட்டாத நூரத்தேகும்
முகனையாங் காண்டத்தின் சுருக்கமாமே. (32)

### 10-வது கல்லெறிக் கிரிகையின்குணம்.

ஆமடா யின்னமொரு குணத்தைக்கேளு
அறிவுகெட்ட கல்லெறியின் கிரிகைதானும்
தாமடா வாய்புலம்பல் கண்ணைமூடும்
தானாகக் கல்லெறிந்து அழுகைசெய்யும்
வேமடா ஜலமதிலே மூங்கிநிற்கும்
விபரமடா ஆடையது போர்த்திடாது
ஓமடா அடிக்கடிதான் பொய்யேசொல்லும்
உத்தமனே சிசுக்களையுங் கடிக்குந்தானே. (33)

தானான கிரிகையது கண்டாயானால்
    தப்பாமல் தீர்க்கவகை சொல்வேன்கேளு
வானான வேலியுட பருத்திச்சாறும்
    மைந்தனே துளசியொடு முல்லைப்பூவாம்
கோனான அகத்தீசர் மூலிச்சாறும்
    குறியாகச் சரிசமமாய்ப் பிழிந்துகொண்டு
தேனான புளியந்தேன் கிராம்புஞ்சேர்த்து
    திறமாகப் படியரைக்கால் கொள்ளுகொள்ளே. (34)

கொள்ளப்பா நாள்மூன்று தாக்கும்போது
    குறியான வெள்ளுள்ளி யிஞ்சிச்சாறு
தள்ளப்பா நீவாங்கித் தலையிலிட்டு
    தடியாக ஜலத்தில்மூழ்க விட்டாயானால்
கள்ளப்பா முன்சொன்ன கிரிகைதீரும்
    கனமான தேகமெல்லாங் காற்றுப்போலாம்
முள்ளப்பா குத்தியது கருப்புப்போலே
    மூட்டுமடா நல்லறிவு புத்திகாணே. (35)

## 11-வது கும்பிடு கிரிகையின் குணம்.

காணப்பா யின்னமொரு கிரிகைதானும்
    கனமாகக் கும்பிடுமோர் கிரிகையொன்று
வீணப்பா மனுக்களையுஞ் சீவசெந்து
    விதமாகக் கண்டவுடன் பணிந்துநிற்கும்
தோணப்பா அன்னமது மெத்தக்கொள்ளும்
    தடியாகயேவியவெத் தொழிலுஞ் செய்யும்
பேணப்பா பெண்களையும் பிள்ளைதன்னை
    பிடியாக அடித்துறுமுக் கிட்டம்பாரே. (36)

பாரப்பா யிப்படிநீ கண்டாயானால்
    பலனாகத் தீர்க்கவகை விபரங்கேளு
நேரப்பா தலைப்பிள்ளை யண்டம்வாங்கி
    நிலையான முத்தெண்ணெய் நடுவேயிட்டு
சீரப்பா துருசதைநீ பொடித்துப்போட்டு
    திறமாகக் காய்ந்தபின்பு கருக்கியேதான்
ஊரப்பா நீபொடித்து இஞ்சிச்சாற்றில்
    உத்தமனே கண்டக்கா யளவுகொள்ளே. (37)

கொள்ளடா நாள்மூன்று கொண்டாயானால்
    குணமாகுந் தலையடா சொல்லக்கேளு
விள்ளடா பேய்ப்பீர்க்கு யிலையின்சாறு
    விபரமதாய் வெற்றிலையின் சாறுகூட்டி



அள்ளடா உச்சிமுதல் பாதமட்டும்
    அப்பனே தவலைபிட்டுப் போட்டாயானால்
எள்ளடா பிசகாது கிரிகையோடும்
    இயல்பாக இவ்விதமென் னானுஞ்செப்பே. (38)

## 12-வது முணங்கல் கிரிகையின் குணம்.

செப்படா முணங்கமென்ற கிரிகைதானும்
    திறமாகு மதனுடைய செய்கைகேளு
கையப்பா விரல்மடக்கும் விரித்திடாது
    கனமாகக் கண்டதெல்லாம் புலம்பும்வாயால்
பையப்பா நாழிகைக்குத் தடவையொன்று
    பலனாக அழுதகண்ணீர் மிகவேபோக்கும்
உய்யப்பா அரைக்கணமு மிருந்திடாது
    உத்தமனே தூங்காது அபயக்காணே. (39)

அபயமடா நீகண்டு வந்தாயானால்
    அப்பனே தீர்க்கவகை விபரங்கேளு
உபயமடா சிவனார்தன் வேம்புமூலம்
    உத்தமமாம் வெள்ளறுகா மணக்கின்முத்து
சபயமடா கொண்டுவந்து கழுதைநீரில்
    தானாக நீயரைத்துக் கலக்கியேதான்
கபயமடா நாள்மூன்று தாக்கிநீயும்
    கனமாகக் குளிர்ந்துள்ள ஜலத்தைவாரே. (40)

வாரடா கண்சிவக்க விட்டாயானால்
    மைந்தனே முன்சொன்ன கிரிகைதானும்
ஊரடா விட்டோடும் குடியேபோச்சு
    உத்தமனே தீர்ந்துவிடும் உண்மைசொன்னேன்
ஆரடா யிதுபோல செய்யப்போறார்
    ஆச்சரியம் கண்டவர்க்கு பிர்நூல்விட்டும்
சீரடா தெரியாத மூடருக்குத்
    திறமாக மாட்டாது பின்னங்கேளே. (41)

## 13-வது அலர்க் கிரிகையின் குணம்.

கேளப்பா அலர்க்கிரிகை குணங்கள் தன்னை
    கெடியாக உனக்கறியச் சொல்வேன்கேளு
நாளப்பா கைகால்க ளசைத்திடாமல்
    நன்றாகக் கண்களையும் மூடிக்கொள்ளும்

ஆளப்பா சத்தமிட்டு வாபோவென்னும்
அப்பனே தன்னிச்சை யாகவேதான்
பாளப்பா கூப்பிடுதல் கண்டாயானால்
பலனாகுந் துவாலையொன்று பாருபாரே. (42)

பாரப்பா முருங்கையிலைச் சாருவிழி
பாங்கான கண்டங்கத் திரியின்சாறு
சீரப்பா பூவரச வித்துச்சாறு
சிறப்பாக நீகூட்டி முன்போலாக
காரப்பா துவாலையிட்டுப் போட்டாயானால்
கனமாகத் தீர்ந்துவிடும் பொழுதுஒன்றில்
ஆரப்பா தீர்க்கவகை யறியப்போரார்
ஆச்சரிய மிந்நூலை யறிந்துதேடே. (43)

## 14-வது மருட்டுக் கிரிகையின் குணம்.

தேடுவது மருட்டுவின் குணங்கள்கேளு
திறமாக இருவிழிகள் மருட்டியேதான்
கூடுவது மனுக்களையுங் கண்டாப்போலே
கூர்மையடா கைநீட்டி வாவாவென்று
பாடுவதும் வலிக்குமடா பரியாசங்கள்
பலனாகச் சொல்லும்போ தாடைதன்னை
ஊட்டுவது அவிழ்த்தெறியும் பிறந்தகோலம்
உத்தமனே சலமதனைக் குடிக்கும்பாரே. (44)

பாரப்பா திட்டமிது கண்டாயானால்
பாங்காகத் தீர்க்கவகை விபரங்கேளு
தோப்பா விஷ்ணுவின் மூலமொன்று
துடியான பொற்கொன்றை வித்துவொன்று
வேரப்பா கருமத்தம் வித்துவொன்று
விபரமாய்த் தவறாமல் கொண்டுவந்து
பூரப்பா சட்டியதின் நடுவேவைத்துப்
புகழாக முத்தெண்ணெய் முங்கவாரே. (45)

வாரப்பா அடுப்பேற்றி யெரித்துநீயும்
மைந்தனே கருகியது வரும்போதுற்ற
சீரப்பா மத்தாலே கடைந்துநன்றாய்
சிவசிவா அதையிறக்கி ஆறவைத்து
காரப்பா மூன்றுபங்காய் வைத்துக்கொண்டு
கட்டாக மூன்றுநாள் கொள்வதன்றி
நேரப்பா உச்சியிலே தானும்போடு
நிலையாக நின்றஅந்தக் கிரிகைபோச்சே. (46)



போச்சடா கிரிகையெல்லாந் தீரனாகும்
புகழாக நோய்களெல்லாங் கதிகெட்டோடும்
காச்சடா உனக்குமொரு எதிரியுண்டோ
காட்டாதே யிந்நூலை மவுனம்பாரு
ஏச்சடா ஒருநாளும் வருவதில்லை
இயல்பாகுங் கைபாகந் தவறினாக்கால்
வீச்சடா ஒருநாளுந் தெரிவதில்லை
வேதாந்தத் துறையினுட வழியிதாமே. (47)

## 15.வது மூடு கிரிகையின் குணம்.

ஆமென்ற கிரிகையிலே வீரம்மெத்த
அறிவாகு மூடுகிற கிரிகைகேளு
தாமென்ற தேகமடா சலமேயூறித்
தானாகச் சன்னிகொண்ட மார்க்கம்போல
நாமென்றே கிடக்குமது மூச்சுயில்லை
நன்றாக இப்படியே கண்டாயானால்
ஓமென்றே தீர்க்கவகை யறியச்சொல்வேன்
உத்தமனே வேப்பெண்ணெய் படிதான்வாங்கே. (48)

வாங்கியே சட்டியதி லிட்டுநீயும்
மைந்தனே சாரணைவேர் அமுக்கிறாவேர்
பாங்கியே உவர்ப்பூவுஞ் சரியாய்வாங்கி
பலனாக அதைப்பொடித்து உள்ளேபோட்டு
ஓங்கியே நீகருக்கக் காய்ச்சிவாங்கு
உத்தமனே துவாலையிட்டுச் சீயக்காய்தான்
நீங்கியே அறைத்துவெண் ணீரைவாறு
நிலையான ஔடதமா மென்றுதானே. (49)

தானாக தர்மஞ்செய் கன்மம்போக்க
தப்பாதே கற்பூரந் தன்னைவாங்கி
தேனான பழந்தனிலே வைத்துநீயும்
சிறப்பாகக் கொண்டிடவே கிரிகைதானும்
வானான நாளிரண்டில் தீரும்பாரு
மைந்தனே முறையதுவும் தவறினாக்கால்
நானான வென்றதினால் வருவதேது
நலமாக மாட்டாது நூல்போற்செய்யே. (50)

செய்யடா விப்படிநீ செய்துதேரு
திறமாகுங் கிரிகைக்குப் பத்தியங்கள்
உய்யடா மற்றதெல்லாங் கொள்ளவேணும்
உத்தமனே பெண்கலவி யாகாதப்பா
கையடா தவருதே கண்டுபாரு
கனமான யிந்நூலோ உண்மைஉண்மை
பொய்யடா ஒருநாளுஞ் சொல்வதில்லை
பூரணமாம் வேதாந்தத் துறையுமாச்சே. (51)

## 16-வது வலிப்புக் கிரிகையின் குணம்.

ஆச்சென்ற வலிக்கிரிகைக் குணத்தைக்கேளு
அப்பனே வாய்புலம்பல் மேனியெல்லாம்
வீச்சென்ற நடுக்குவலி திட்டம்போல
விபரமடா சத்தமிட்டு முழங்கும்போது
கூச்சென்றே தேகமதிற் பார்த்தாயானால்
குறியாகும் படபடென நரம்புயெல்லாம்
மூச்சென்றே சுருட்டியது வாங்கியேதான்
முகனையடா தலையசைத்து ஆடும்பாரே. (52)

ஆடும்பா ரிப்படியே கண்டாயானால்
அப்பனே தீர்க்கவகை விபரங்கேளு
சாடும்பார் கண்டங்கத் திரியின்மூலம்
தானதை யெடையொன்று வாங்கிவந்து
கூடும்பார் கண்டமதாய் வெட்டிநீயும்
குறிப்பான பாண்டத்தி னுள்ளேபோட்டு
ஓடும்பார் ஜலமுங்க விட்டுநீயும்
உத்தமனே நாள்மூன்று முழுகப்பண்ணே. (53)

பண்ணப்பா முழுக்குமது செய்துவந்தால்
பலனாகும் பச்சைவெட்டு லிங்கந்தன்னை
விண்ணப்பா நீகழஞ்சு பொடித்துவாரி
விபரமடா தேனதிலே பங்குமூன்றாய்
உண்ணப்பா தவறாமற் கொண்டாயானால்
உத்தமனே கிரிகையது ஒழியும்பாரு
கண்ணப்பா மூடியது முழிக்குமுன்னே
கட்டாகத் தீர்ந்துவிடுங் கண்டுபாரே. (54)



பாரப்பா வெனைப்போல யாருஞ்சொல்லார்
பலனாகும் வைத்தியர்கள் பிழைக்கவேண்டி
சீரப்பா சொல்வதல்லால் வேறொன் றில்லை
செயலறியா மடையருக்குத் தெரியாதப்பா
காரப்பா என்குருவாம் சுப்ரமண்யம்
காட்டினா ரிந்நூலைக் கண்டுபாரு
ஊரப்பா விட்டகுறை யாளியென்றால்
உத்தமனே வந்தெய்தும் உறுதிதானே. (55)

## 17-வது நீர்க்குடி கிரிகையின் குணம்.

தானான நீர்க்குடியின் கிரிகைகேளு
தப்பாம லுனக்கறியச் சொல்வேனப்பா
வானான சலங்கள்மிகக் குடிக்கும்பாரு
வாயாலே குமுகுமெனக் கக்குங்கீழே
கோனான கண்குழியாய் விழுந்துபோகும்
குறியான சோறுமெத்த உண்டிடாது
நானான வென்றுசொல்லிப் பாடியேதான்
நலமில்லாத் தலைசுற்றி யாடுந்தானே. (56)

காணப்பா யிப்படியே திட்டங்கண்டால்
கருவாகத் தீர்க்கவகை விபரங்கேளு
தோணப்பா கோழியுட முட்டையஞ்சு
துடியாகக் காக்கையுட முட்டையஞ்சு
வேணப்பா கொண்டுவந்து உடைத்துநீயும்
விபரமடா துவாலையிட்டுப் பின்புகேளு
கோணப்பா முத்தெண்ணெய் படியரைக்கால்
கூறப்பா உள்ளுக்கு மிளகுதாக்கே. (57)

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 100921 EGMORE MADRAS
LC N50

தாக்கடா நாள்மூன்று தவறிடாமல்
தானதை உள்ளுக்குக் கொடுத்தாயானால்
நோக்கடா நல்லபுத்தி யாகும்பாரு
கோட்டமடா முன்சொன்ன கிரிகைகேளு
போக்கடா ஆவியது பட்டாப்போலே
போகுமடா வெகுதூரங் கண்டுசொன்னேன்
ஆக்கடா சிவப்பதுபோல் நின்றேயாடும்
அப்பனே வச்சிரமிட்ட காயமாச்சே. (58)

### 18 வது பேய்பிடிக் கிரிகையின் குணம்.

ஆச்சென்ற பேயினுட கிரிகைகேளு
அப்பனே அதினுடைய குணத்தைசொல்வேன்
மூச்சென்ற மயானத்தில் ஓடியேதான்
மூகனையடா அபயமிட்டு அடித்துக்கொண்டு
ஏச்சென்ற பேய்களதின் பெயர்கள்சொல்லி
இருந்தாடும் மயானத்தின் சாம்பல்தன்னில்
பூச்சென்ற சிலையெல்லாங் கிழித்தெறிந்து
புகழாக வந்துநின்று மனுக்களைத்தான்
நாச்சென்று குலைத்ததுவுங் கடித்துவாரி
நன்றாக உதிரமதைக் குடிக்குங்காணே. (59)

காணப்பா திட்டமது கண்டாயானால்
கருவாகத் தீர்க்கும்வகை சொல்லக்கேளு
பூணப்பா தாம்புரத்தின் சிலைவாங்கி
புகழாக ஆடைபொட்டி பொதிந்துகட்டி
வேணப்பா அக்கினியி லெரித்தசாம்பல்
விபரமடா ஆறினபின் வாரியேதான்
கோணப்பா செம்மறியின் பாலைவாங்கிக்
குறியான தாம்புரம் போட்டுக்கொள்ளே. (60)

கொள்ளடா நாளொன்று பொழுதேயொன்று
குறியாக நீகொடுத்து விட்டபின்பு
துள்ளடா ஜலங்குளிர விட்டுவந்தால்
துடியாகும் பேய்பிடித்த கிரிகைக்கோட்டி
கள்ளடா குடித்துவெறி கொண்டாப்போல
காணும லோடிவிடுங் கண்டுசொன்னேன்
எள்ளடா யிந்நூலே பிசகாதப்பா
இயல்பாகும் புலத்தியனே பாருபாரே (61)

பாரப்பா கிரிகைபதி னெட்டுக்குந்தான்
பலனாக யிதுபோலப் பார்த்துநீயும்
நேரப்பா செய்யாமல் விட்டாயானால்
உத்தமனே தீராது ஒருநாளுந்தான்
ஆரப்பா யிப்படியே செய்திட்டாலும்
அசையாத சண்டாளக் கிரிகைக்கோட்டி
சேரப்பா அஞ்ஞான சண்டாளர்க்குத்
திறமாக வந்துதிக்கு மிந்நூல்தேடே. (62)



தேடுவது சிவயோகி சித்தர்க்கெய்தும்
திறமாக யெந்நூல்தான் தெளிந்தபேர்க்கு
பாடுவது வந்தெய்தும் நிலைநின்றாடும்
பாங்கறியா மடையருக்கு வருவதேது
கூடுவது பெண்ணரவங் கடித்திடாமல்
கூர்மையடா நோய்கொண்ட பேர்கள்தானும்
சாடுவது விந்துநிலை கட்டினுக்கால்
தானுனை தந்துமெத்த வேலைசெய்யே. (63)

செய்யடா கைமுறையாய்ப் பார்த்தாயானால்
திறமாகுஞ் சகலசித்து மாடலாகும்
குய்யடா நீமறந்து விட்டாயானால்
குணமாக மாட்டாது ஒருநாளுந்தான்
அய்யடா சாஸ்திரங்கள் பொய்தானென்பார்
அப்பனே செயலறியா மடையர்தானும்
உய்யடா சொல்வதல்லால் வேறொன்றில்லை
உத்தமனே பொய்யாது யின்னூல்முற்றே. (64)

அகத்தியர் கிரிகை 64 முற்றிற்று.

உ

பரமபதி துணை.

## இது ஓர் பழைய ஏட்டுப் பிரதியிலுள்ளபடி

## சிறுக்குகள் பதினெட்டுக்கும்

# கிரிகை நூல் வசனம்.

### 1-வது அணற் கிரிகையின் குணம்

தலை யசைக்கும், கும்பிடும், வாய் பொத்தும், நாம் சொல்வதைக் கேட்காது, கொடுத்த தெல்லாம் சாப்பிடும், நகத்தினால் நிலத்தைச் சுறண்டும், பற்கடிக்கும், உடுத்தியுள்ள ஆடையில் தன்னை யறியாமல் மூத்திரம் பேயும், இரவு பகல் தூக்கமில்லா திருக்கும்.

### 2-வது பித்தக் கிரிகையின் குணம்.

எதிர் நின்ற பெயர்களின்மேல் எச்சிலைத் துப்பும், தன்பேரிலும் துப்பிக் கொள்ளும், நரகலை எடுக்கும், தன் சரீரத்திலும் பூசிக்கொள்ளும், தண்ணீரைக் கண்டால் பயப்படும்.

### 3-வது எச்சில் கிரிகையின் குணம்.

நாய்போற் குலைக்கும். நரகலைத் தின்னும், வாய்புலம்பும் நாயைக் கண்டால் வணங்கும், எச்சிலைத் தின்னும், அடிக்கடி நாக்கை நீட்டிக் கொண்டிருக்கும், மழையில் நனைந்து கொண்டிருக்கும், கடிக்கும்.

### 4.வது வாதக் கிரிகையின் குணம்

ஊமைபோல் வாய் பேசா திருக்கும், மண் குப்பை சகதி யெனப் பாராமல் படுக்கும், இருந்த யிடம் விட்டு அடிக்கடி மாறி மாறி நகர்ந்து உட்காரும், கண்ணை மூடிக் கொள்ளும்.

### 5-வது சிலேற்பனக் கிரிகையின் குணம்.

உறங்கியிருக்கும், மனிதரைக் கண்டால் மறையும், நெருங்கினால் பயப்படும், உடுத்திய ஆடையில் மூத்திரத்தைப் பேயும், [illegible] தடித்துக் காணும், கொட்டாவி கொள்ளும், கண்ணீர் வடியும்.



### 6-வது நாதவிந்துக் கிரிகையின் குணம்.

தனது பந்துக்களிடம் சிரிக்கும், அன்னியரிடம் விரோதிக்கும், எப்பொழுதும் துள்ளித் துடித்து ஆடும், ஆடையை மேலும் கீழும் உடுத்தி அளவு பார்க்கும், அடிக்கடி எச்சில் துப்பும், அன்னம் அதிகமாய்ச் சாப்பிடும்.

### 7-வது பூதக் கிரிகையின் குணம்.

எதிர் வந்தவர்களை யெல்லாம் அடிக்கும், வெட்டுக்காயஞ் செய்யும், ஈனசாதியாரைக் கண்டால் வணங்கும், மேல்சாதியாரைக் கண்டால் அடிக்கும், நாமும் எதிர்த்து அடித்தால் உடனே வணங்கும், குப்பை மண்ணை வாரித் தன் தலையில் போட்டுக் கொள்ளும்.

### 8-வது ஜலக் கிரிகையின் குணம்.

மண்ணைத் தின்னும், ஆபரண மிட்டவர்களைக் கண்டால் வணங்கும், சிரிக்கும், அவருடன் போகும், பல யிடங்களிலும் செல்லும், நித்திரை யில்லா திருக்கும், காணம்போடும் தண்ணீரைக்கண்டால்ஓடும்

### 9-வது மோகினிக் கிரிகையின் குணம்.

வெற்றிலை ரெம்பவும் பிரியமாய்த் தின்னும், தன்னுடன் தானே பேசிக் கொள்ளும், தேகம் வெளுத்துப் போயிருக்கும், மனிதரிடம் நெடுநாட் பழக்கம்போல் ரெம்பவும் இரக்கமாய்ப் பேசும், ஆடைகளை கிழிக்கும், பெண்களைக் கண்டால் சிரிக்கும், வாய் புலம்பும்.

### 10-வது கல்லெரிக் கிரிகையின் குணம்.

அகப்பட்ட வர்களைத் தழுவி முறையிடும், நிருவானமா யிருக்கும் வாயில் எச்சில் பெருகி வடிந்துகொண்டிருக்கும், கண்ணை உருட்டி முழிக்கும், கல்லெறியும், சிறுபிள்ளைகளைக் கண்டால் வாயைத் திறந்து கொண்டோடும்-

### 11-வது கும்பிடு கிரிகையின் குணம்.

தொட்டதெல்லாம் யெச்சில் யென்று சொல்லும், நடக்கும் போது கோணிக் கோணி நடக்கும், எப்பொழுதும் பல் தேய்த்துக் கொண்டிருக்கும், கண்டபெயர்களைக் கும்பிடும், அன்னம் அதிகமாய்ப் புசிக்கும்.

### 12-வது முணங்கல் கிரிகையின் குணம்.

வீடுகளில் தீக்கொளுத்தும், சிலநேரம் சிரிக்கும், ஒருஇடத்திலும் தங்காது, முணங்கிக் கொண்டிருக்கும்.

### 13-வது அலற் கிரிகையின் குணம்.

தன்னைத் தானே கிள்ளிக் கொள்ளும், உடுத்திய ஆடையைக் கிழிக்கும், நாம் சொல்வதெல்லாம் அது திரும்பச்சொல்லும், ஆகாரம் அரிதாய்ச் சாப்பிடும், மஞ்சளைத்தின்னும்.

### 14-வது மருட்டுக் கிரிகையின் குணம்.

விழிமிரட்டி விழிக்கும், அகப்பட்ட பேர்களை அடிக்கும், கண்டதெல்லாந் தின்னும், உடனே சிரிக்கும், பார்த்தபேர்களை யெல்லாம் பரிகாசம் சொல்லும், அபயமிடும், வாவா வென்று கூப்பிடும்.

### 15-வது மூடுகிரிகையின் குணம்.

திரேகம் சன்னி கண்டது போலக் குளிர்ந்திருக்கும், கிடந்தயிடத்திலே கிடக்கும், கால் கைக ளசைந்திடாது, பேசமாட்டாது.

### 16-வது வலிக்கிரிகையின் குணம்.

எப்பொழுதும் அழுதுகொண்டிருக்கும், விழி சிவந்திருக்கும் சொரிந்து கொண்டிருக்கும், வாயில் எச்சில்நீர் ஒழுகும், ஓலமிடும்.

### 17-வது நீர்க்கிரிகையின் குணம்.

தண்ணீரை மிகுதியாய்க் குடிக்கும், தரையில் விரலைக் கொண்டு கீறிக் கோடுகள் போடும், சாப்பாட்டில் பிரியமிராது, தானே உருண்டு பிரண்டுகொண்டிருக்கும்.

### 18-வது பேய்க்கிரிகையின் குணம்.

வாயில்வந்த தெல்லாம் சொல்லிக் கொண்டு ஓடும், சுடுகாட்டுச் சாம்பலில் புரளும், தானாக உட்கார்ந்து அழுகும், அபயமிடும்.

### 18 கிரிகைகளின் குணங்கள் முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# கிரிகை பதினெட்டுக்கும்
# சிகிச்சை விபரம்.

### துவாலை.

பருத்தியிலை, கருநொச்சியிலை, சிறுசுண்டையிலை, காட்டுமுல்லை, சமனிடையெடுத்து மோரிலரைத்து தேனில்குளப்பி சருவாங்கமும் துவாலை போடவும்.

### புகை பிடிக்க.

மேனியிலை, கிலுகிலுப்பையிலை, தும்பையிலை சமன்கூட்டி சிரட்டைத் தணலிலே போட்டு வியர்வை யோடுமட்டும் புகைப் பிடிக்கவும்.

### உள்ளுக்குக் கொடுக்க மருந்து.

ஷை மூன்று பச்சிலையும், திப்பிலியும், வகைக்கு ஒரு காசிடையாக சமன்கூட்டிப் பொடி செய்து தண்ணீரில் கலக்கி கொடுக்கவும்

### நசியம்.

கருநொச்சியிலை, தும்பையிலை, வெள்ளைப்பூடு, வகைக்கு, ஒரு காசிடையை எடுத்து நல்லெண்ணெய்யி லரைத்து பொட்டணம் கட்டி வலது மூக்கில் நசியம் பண்ணவும்.

### கலிக்கம்.

வசம்பு, சந்தனம், மிளகு, மகிளம்பூவிரை, பூடு, மஞ்சள், வகைக்கு ஒருகாசிடை பசுவின் பாலிலரைத்து மிளகுப்பிரமாணம் குளிகை உருட்டி வெயிலில் உலர்த்தியபின் ஒரு குளிகை யெடுத்து அமிர்தப்பாலிலுரைத்துக் கண்ணில் போடவும் 100 குடம் தண்ணீர் விடவும்.

### மந்திரம்.

சத்திசிவாய வயிரவிநமா: வென்று உரு (51) செபித்து வெண்ணெய், வாழைப்பழம், இவைகளில் ஓதிக்கொடுத்துச் சாப்பிடச் சொல்லவும் விபூதியில் மந்திரித்து நெற்றியில் பூசவும்.

## இரண்டாவது மற்றொரு முறை.

### உள்ளுக்கு மருந்து,

கடலாமணக்கு, கடுக்காய், யிதை சமனெடுத்துச் சட்டியைக் காயவைத்து வறுத்துப் பொடித்து 1 கரண்டி சித்தாமணக் கெண்ணெய்யில் கலக்கிக் கொடுத்தால் பேதிகாணும் 4 தடவை பேதிகண்டதின் மேல் கஞ்சி வைத்துக் கொடுக்கவும் பத்தியமில்லை.

### துவாலை.

பாவையிலை, கையானிலை, ஆடாதோடையிலை, கொச்சி வேரும், பாலாட்டங்கொழுந்தும் சமனிடை கூட்டிப் பசுவின் பாலிலரைத்து சருவாங்கமும் துவாலை போடவும்

### புகைப்பிடிக்க.

மயிலிறகு, கருங்கம்பளி, குப்பைமேனி, வெள்ளைப்பூடு, வெற்றிலை கிடாய்க்கொம்பு, பச்சரிசித் தவுடு, சமனிடை கூட்டிப் பானையில் போட்டுத் தண்ணீர்விட்டுக் கள்ளி விறகால் தீயெரித்து யிறக்கி வைத்து உடல் பொருக்குமளவும் புகைப் பிடிக்கவும்.

### நசியம்.

தும்பையிலை சாறு, இஞ்சிச் சாறு, இலுமிச்சம்பழச் சாறு, சமன் கூட்டி ஒரு காசளவு நல்லெண்ணெய்யில் சேர்த்து வலது மூக்கில் நசிய மிடவும்,

### கலிக்கம்.

வெங்காயமும், சுக்கும், சமன் கூட்டி யரைத்து கண்ணில் கலிக்கம் போடவும் 100 குடம் தண்ணீர் விட்டுக் குளிப்பாட்டவும்.

### மந்திரம்.

ஓம்காளி கொடுங்காளி மகாவைரவி சோபிதகாளியே சுவாஹா வென்று உரு 51 வெண்ணெய்யில் செபித்துச் சாப்பிடக் கொடுக்கவும் திருநீறில் மந்திரித்து நெற்றியில் பூசவும்.

---

## மூன்றாவது மற்றொரு முறை.

### மருந்து.

மஞ்சள், வெப்பாலையரிசி, கார்கோலரிசி, யேலரிசி, வாய்விளங்கம், கொத்தமல்லி, சமனிடை நல்லெண்ணெய்யில் வேக வைத்து மெழுகு பதத்தி லெடுத்து உள்ளுக்குக் கொடுக்கவும்.



### துவாலை.

கூவைக்கிழங்குத்தண்டும், வேலிப்பருத்தி யிலையும், [illegible] லையும், மஞ்சளும் சமனிடையெடுத்து தண்ணீரிலரைத்து உடம்பெல்லாம், துவாலை போடவும்.

### புகைப்பிடிக்க.

நாங்குளுப் பூச்சியும், மஞ்சளும் ரவியில் வைத்துப் பொடித்து நறு நெய்யில் குழைத்து புளிய விறகு நெருப்பில் போட்டு முகத்தில் பொருக்கு மளவும் புகைப் பிடிக்கவும்.

### நசியம்.

வெள்ளுள்ளிச்சாறும், புளியிலைச்சாறும், நாய்த்துளசிச் சாறு மூன்றும் சமனிடை கூட்டி வலது நாசியில் நசிய மிடவும்.

### கலிக்கம்.

மிளகு, பூடு, முட்டை, குளியானை, சமனிடை கூட்டிப் பசுவின் பாலிலரைத்துக் கண்ணிக் கலிக்கம் போடவும்.

### மந்திரம்.

ஓம்காளி பயிரவி, அட்டமாகாளி, சாமுண்டி, ரெத்தசாமுண்டி சர்வ லோகாயா சுவாஹா வென்று உரு ( 51 ) செபித்து விபூதி போடவும்.

---

## 18 கிரிகைக்கும் சாந்தி மந்திரம்.

ஓம்காளி, சத்தி சாமுண்டி. பத்திரகாளி, பத்திசண்டி சுவாஹா வென்று கிரிகைக்காரன் உச்சியை வருந்து உரு 51 செபித்து ஐந்து வகைச் சோறு வைத்து தூப தீபங் கொடுத்து சாவல் பெலி கொடுத்து ஷை யான் தலையைச் சுற்றி யெறியவும் இப்படிச் செய்ய 18 விதமான கிரிகையுந்தீரும்.

### சமயோசிதம்போல் செய்துகொள்ளும்,

## பொது சிகிச்சைகள்.

### துவாலை.

கேசரிப்பால், வேலிப்பருத்திசார், குமட்டியிலைசார் ஆடாதோடையிலைச்சார் வகைக்கு படி அரைக்கால் பிழிந்து உச்சி முதல் பாதம் மட்டும் துவாலை போடவும்.

## துவாலை.

சுக்கு, மிளகு, திப்பிலி, உள்ளி, தேவதாரம், சந்தனம், மஞ்சிட்டி அதிமதுரம், விலாமிச்சிவேர், வெட்டிவேர், இலவம்பட்டை, விஷ்ணு கிராந்தி, வெள்ளறுகுவேறும், வசம்பும் சமனிடை பசுவின்பாலிலரைத்து சர்வாங்கமும் துவாலைபோடவும்.

## மருந்து

வசம்பு, பெருங்காயம், மிளகு, சமன் கூட்டிப் பொடிசெய்து கால்படி பசுவின் தயிரில் கலக்கிக் கொடுக்கவும்.

## மருந்து.

கேசரிப்பால் , இலுமிச்சம் பழச்சார், சிந்திக்கொடிச்சார், இம்மூன்றும் வகைக்கு அரைக்கால்படி சாறு எடுத்து அரைக்கால் விராகனிடை கோரோசனையில் சேர்த்துக் குழப்பி உள்ளுக்குக் கொடுத்து சருவாங்கமும் துவாலை போடவும் 18 கிரிகையுந் தீரும்.

## 18 க்கும் மருந்து.

சவுக்காரம், வெடியுப்பு, நவச்சாரம், இரசம், சிந்திந்தண்டு ஆடாதோடைவேர், மண்டைஓடு, அதிமதுரம், கிராம்பு, வகைக்கு 1 விராகனிடை இரவியில் உலர்த்திப் பொடி செய்து குமட்டிப்பழம் விரை போக்கிஷ்டி பொடியை உள்ளே செலுத்தி ரவியில் வைக்க உறுகிக் களிம்பாயிருக்கும் பதத்தில் எடுத்து குச்சியால் கிண்டிக் கிண்டி விட்டு சுக்காய்க் காய்ந்தபின் கல்வத்தில் சமூலமும் போட்டுப் பொடித்து கேசரிப்பால் தண்ணீர் படாமல் எடுத்து ஷ்டி சூரணம் நெல்லிக்காயலவு பாலில் கலக்கிக் காலையில் கொடுக்கவும்.

## உள்ளுக்கு மருந்து.

நாங்குளுப்பூச்சி நற்சிரகம் இரண்டையும் இழுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் கலக்கி யேழுநாள் கொடுக்க சர்வமும் தீரும்.

## மந்திரம்.

ஓம் பத்திரகாளி சருவவிஞயகமுனி சுவாஹா உரு 51 பழம் வெண்ணையில் யோதி சாப்பிடக் கொடுக்கவும்.

## கலிக்கம்.

மகிளங்கொட்டைப்பருப்பு, பூடு, புளிச்சிச் செடிச்சாறு, மூன்றும் சேர்த்தரைத்துக் கண்ணில் கலிக்கமிடவும்,

## நசியம் மிடவும்.

மலைநாரத்தைச் சாறும், மகிளங்கொட்டையும், மிளகும், தேனும் சமனிடைகூட்டி அரைத்து வலதுநாசியில் நசியமிடவும்.



## புகை பிடிக்க.

அண்டஓடு, நாய்க்கட்டம், வெள்ளுள்ளித் தோடு, ஆதளை வேர், துளசி, தேவதாரம், இவைகளையெல்லாம் யிடித்துப் பொடிசெய்து நெருப்பில் போட்டுப் புகைபிடிக்க 18 கிரிகையும் தீரும்.

## 18 கிரிகைக்கும் குளம்பு.

சிறுகீரைவேர், கரிப்பான் சமூலம், அமுக்கிராவேர், சிறுபுல்லடி வேர் நன்னாரி வேர், வில்வவேர், கண்டங்கத்திரிவேர், ஷ்டி புற்பம் வகை பத்தும் பிரமி, மொசுமொசுக்கை, விஷ்ணு கிராந்தி, ஆவரங் கொழுந்து, அத்திப்பட்டை, இச்சிப்பட்டை, அரசம்பட்டை, ஆலம்பட்டை, கடுக்காய், தான்றிக்காய், யிதுவகை பத்தும் பச்சை மஞ்சளும், யிடித்து ஒருபானையிற் போட்டு பனிரெண்டுபடி தண்ணீர் விட்டுத் தீயெரித்து நாலுபடியாக வற்றியபின் யிறுத்துக்கொண்டு அதில் கால் படி பூநாகம் போட்டுக் காய்ச்சி இரண்டுபடியாக வற்றவைத்து ஷ்டி பூநாகத்தை எடுத்து விட்டு கடுக்காய், சுக்கு, திப்பிலி, தான்றிக்காய், மிளகு, மஞ்சள், நெல்லிப்பருப்பு, சீரகம், வாய்விளங்கம். கார்கோலரிசி, சதகுப்பை, வசம்பு, ஆக 12 ம் வகைக்கு 2 வராகனிடை யிடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து ஷ்டி கசாயத்தில் போட்டுக் குளம்பாகக் காய்ச்சி தலையில் தேய்த்து உள்ளுக்கு ஒரு காண்டி வீதம் காலை மாலை 3 நாள் கொடுக்கவும் குளத்துக்கரையில் வைத்துக் கொண்டு தாரை முறியாமல் 100 குடம் தண்ணீர் தலையில் விடவும் முழுகியவுடன் [illegible] சாணியை உலர்ந்தி கள்ளிவிறகின் நெருப்பில் [illegible] பிடிக்கவும்.

சிகிச்சை முற்றிற்று.

## முக்கிய கவனிப்பு.

வாதத்தால் வரும் கிரிகை 6. பித்தத்தால் வரும் கிரிகை 6, சிலேற்பனத்தால் வரும் கிரிகை 6 ஆக 18 கிரிகைகளானதால் சிகிச்சை செய்யுமுன் வாத பித்த சிலேத்துமம் இம்மூன்றில் எவ்வகையிலிருந்து யேற்பட்ட கிரிகை [illegible] என்பது தெரிந்துகொண்டு கீழ்கண்ட மருந்துகளை [illegible] த்துக்குத் தக்கவாறு உபயோகிக்கவும்.

---

இது ஒரு புராதன ஓலை யேட்டுப்படி அச்சிடப்பெற்றது இது யாவரால் பாடிய தென்பது தெரியவில்லை.

## ஐந்து சாஸ்திரங்கள் முற்றிற்று

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 10094
LC N50

ஓலை யேட்டுச் சுவடிகளிலிருந்து புதிதா யச்சிட்டிருக்கும்

## அகத்திய முனிவர் பாடியுள்ளது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அகத்தியர் பரிபூரணம் 1200. | | 2 | 0 | 0 |
| 2. | ஷை | மணக்கோலம் 200, | | | |
| 3. | ,, | கனகமணி 100, | | | |
| 4. | ,, | வைத்தியக் கோவை 125, | | | |
| 5. | ,, | வைத்தியத் திரட்டு 81 | | | |
| 6. | ,, | மானிடர் கிறுக்குகள் என்னும் கிரிகை 64 ஆக ஐந்து சாஸ்திரங்கள் | 1 | 4 | 0 |
| 7, | ,, | கௌமதி நூல் 400. | 1 | 4 | 0 |
| 8. | ,, | தற்க சாஸ்திரம் 300. | 0 | 14 | 0 |
| 9 | ,, | கற்ப முப்புக் குருநூல் 100, | | | |
| 10 | ,, | மனோன்மணி தீட்சை 100, | | | |
| 11 | நாற்பத்துமுக்கோண பூஜை 41 சேர்ந்தது | | 0 | 12 | 0 |
| 12 | ,, | பூரணம் 216. | 0 | 12 | 0 |
| 13 | ,, | பூரணம் 205. | | | |
| 14 | ,, | அதற்கு சூஸ்திரம் 21 சேர்ந்தது | 0 | 12 | 0 |
| 15 | ,, | பரிபாஷை 300. | 0 | 12 | 0 |
| 16 | :, | பன்னிரு காண்டம். | 0 | 12 | 0 |
| 17. | ,, | பூஜாவிதி 200, | | | |
| 18. | ,, | ஞான சைதன்யம் 51 சேர்ந்தது | 0 | 12 | 0 |
| 19. | ,, | வகார சூஸ்திரம் 200, | | | |
| 20. | ,, | அதன் சுருக்கம் 100 சேர்ந்தது | 0 | 14 | 0 |
| 21. | ,, | தத்துவம் 300. | 0 | 14 | 0 |
| | ஷை | 21 சாஸ்திரமும் சேர்ந்த கோர்வை | 10 | 0 | 0 |

இன்னும் அனேக சித்தர் சாஸ்திர புஸ்தகங்களும் நேரிலும் தபால் மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம் விலா சம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பக்கூடும்.

ஜி. இராமசாமிக்கோன்

புத்தகசாலை புதுமண்டபம் மதுரை.